விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 272 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 8.செவ்வாய்க்கிழமை 25.08.2015

## பிரதமரின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க

கொழும்பு, ஓக.25
பிரதமரின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.
இவர் கடந்த ஜனவரி மாதம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி

பக்கம் 21....

# நிரந்தரத் தீர்வுக்கு கூட்டமைப்புடன் சேர்ந்து பொறிமுறை

### 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிபடத் தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 25
நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கையில் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்தியாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று மேலும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க கூடிய வகையில் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.
இரண்டு பிரதான தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும்



பக்கம் 21.....

## பிரிட்டன் தூதராக குமார் சங்கக்கார

### தனது விருப்பத்தை நேரில் வெளியிட்டார் ஜனாதிபதி



கொழும்பு, ஓக. 25
பிரிட்டனுக்கான தூதுவர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு, இலங்கைக் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் கோரிக்கை விடுத்துள்ளார்.
கொழும்பு பீ.சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற இலங்கை-இந்திய டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.
இதனையடுத்து இலங்கை அணியின் பிரபல வீரர் குமார்

பக்கம் 21....

## பிளேயருடன் மைத்திரி சந்திப்பு

கொழும்பு, ஓக.25
தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வருகை தந்திருந்த ரொனி பிளேயர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்தித்தார்.

பக்கம் 21....

## உள்ளூராட்சி தேர்தல் நவம்பரில்

கொழும்பு, ஓக.25
உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை எதிர்வரும் நவம்பரில் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.
ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கே

பக்கம் 21....

## தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் துரைரட்ணசிங்கம், சாந்தி

யாழ்ப்பாணம், ஓக. 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக, திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியுற்ற துரைரட்ணசிங்கம் மற்றும் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியுற்ற திருமதி.சாந்தி சிறீஸ்கந்தராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கும், தோல்வியுற்ற வேட்பாளர்கள் மத்தியில் கடுமையான போட்டி இருந்து வந்தது. இது தொடர்பில் கடந்த சில தினங்களாகவே கூட்டமைப்பின் தலைவர்கள் கலந்துரையாடல் நடத்தி வந்தனர்.
இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த பட்டியல் இறுதி செய்யப்பட்டது.

பக்கம் 21....

## புலிகளின் படகுகளை பார்வையிட்ட மைத்திரி



கொழும்பு, ஓக. 25
திருகோணமலை கடற்படைத் தளத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் மற்றும் ஆயுதங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பார்வையிட்டுள்ளார். அத்துடன் கடற்படையின் அதிவேக தாக்குதல் படகு மூலம் துறைமுகத்தையும் சுற்றிப் பார்வையிட்டார்.
சம்பூரில் காணிகளை மீள ஒப்படைக்கும் நிகழ்வில் பங்கேற்கக் கடந்த சனிக் கிழமை பிற்பகல் திருகோண

பக்கம் 21.....

## விமானப் படை முகாம் தாக்குதல் விசாரணை செப். 4 இல் ஆரம்பம்

அனுராதபுரம், ஓக.25
2007ஆம் ஆண்டு அனுராதபுரம் விமானப்படை முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளை செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் தொடர்ந்து முன்னெடுக்க அனுராதபுரம் விசேட மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
இந்தச் சம்பவம் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, அனுராதபுரம் விசேட மேல் நீதிமன்ற நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டார்.
மேலும் சம்பவம் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்ட, விடுதலைப்

பக்கம் 21.....

## கோத்தாவிடம் 6 மணிநேரம் துருவித் துருவி விசாரணை

கொழும்பு, ஓக. 25
ரக்னா லங்கா நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் நிதியைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பயன்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து, கோத்தபாய ராஜபக்சவிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாக ஊழல் மோசடி தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



பக்கம் 21.....

## 3 அமைச்சர்கள் மட்டும் பதவியேற்றனர் நேற்று



கொழும்பு, ஓக. 25
ஐக்கிய தேசியக் கட்சி - சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து அமைத்துள்ள தேசிய அரசின் அமைச்சரவை நேற்று பதவியேற்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மூன்று அமைச்சர்கள் மாத்திரம் நேற்றையதினம் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுள்ளனர்.

பக்கம் 21.....

## 4 அமைச்சுகள் மைத்திரி வசம்

கொழும்பு, ஓக. 25
பாதுகாப்பு, மகாவலி, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும். சுற்றுச்சூழல் ஆகிய நான்கு அமைச்சுகளை தனக்குக் கீழ் வைத்து கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.
மைத்திரி இவ்வாறு அறிவித்துள்ள நிலையில் புதிய தேசிய

பக்கம் 21.....

## ஐரோப்பிய ஒன்றியத்தின் வீட்டுத் திட்டம் வடக்கில்

யாழ்ப்பாணம், ஓக. 25
நிரந்தர வீட்டுத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக, ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளதாக, அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் வடக்கில் மிகப் பெரும் வீட்டுத் திட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது. மன்னார் மாவட்டம் தவிர்ந்த வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களிலும் இந்த வீட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.
ஐரோப்பிய ஒன்றியம் மத்திய அரசின் ஊடாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. மாவட்டச்

பக்கம் 21.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு கிடைக்கும் வரையில் அமைச்சுக்களை ஏற்கோம்

## தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 25

புதிதாக அமைக்கப்பட் டிருக்கும் தேசிய அரசானது நிலையான அரசியல் தீர்வொன்றை வழங்க விரைவான செயற்பாடுகளில் இறங்குமென்று நாம் நம்புகின்றோம். ஜனாதிபதி அந்தக் கைங்கரியத்தில் பின்நிற்கமாட்டார் என்றும் நம்புகின்றோம். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்று கிடைக்கும் வரை அமைச்சுப் பதவிகளையோ, வேறு எந்தப் பதவிகளையோ பெறப் போவதில்லை என்பதில் நாம் உறுதியுடையவர்களாக இருக்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளித்திருக்கும் ஆணையென்பது மக்கள் எம்மீது வைத்திருக்கும் உயர்ந்த நம்பிக்கையைக் காட்டுகின்றது.எம்மை மீண்டும் தமது ஏகப் பிரதிநிதிகளாக நிரூபித்துள்ள தமிழ் மக்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களுடைய நம்பிக் கைக்கும் – விசுவாசத்திற்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் குந்தகம் விளைவிக்கமாட்டோம். வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல, தேசிய அளவிலும் மூன்றாம் நிலை பலம் பொருந்திய கட்சியாக வெற்றிவாகை சூட வைத்த மக்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்"– என்றார். (த)

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சி.ஐ.டியினரிடம் முறையிட முடிவு

கொழும்பு, ஓக.25

குற்றப் புலனாய்வு பிரிவிடம் முறைப்பாடு ஒன்றை தாக்கல் செய்யவுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் நஜித் இந்திக்க இந்த முறைப்பாட்டை தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு இம்புல்கொட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் இருவர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் குறித்த இரு மாணவர்களின் சாவு விபத்து அல்ல எனவும் அது ஒரு கொலை எனவும் தற்போது சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையிலேயே, குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரியே முறைப்பாடு செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## சட்டவிரோத குடிதண்ணீர் போத்தல்கள் சிக்கின



வவுனியா, ஓக.25

வவுனியாவில் நேற்று பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட நடவடிக்கையில் வவுனியா ஹொரவப்பொத்தான 2ஆம் கட்டை பகுதியில் உள்ள கடையில் வடிகட்டிய குடிதண்ணீரை போத்தலில் அடைத்து விற்பனை செய்ய முயன்றவர்கள் சிக்கியுள்ளனர். அவை யாழ்ப்பாணத்துக்கு விநியோகிகப்படவிருந்த நிலையில் கன்ரர் வாகனத்துடன் கைப்பற்றப்பட்டுள்ளன. வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கொழும்பிலிருந்து வந்த பொது சுகாதார உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் வவுனியா ஹொரவப்பொத்தான 2ஆம் கட்டைப்பகுதியில் குடிதண்ணீரை வடிகட்டி விற்பனை செய்து வந்த விற்பனை நிலையம் முற்றுகையிடப்பட்டது.

அதன்போது சுகாதார சீர்கேடான முறையில் காணப்பட்ட கிணறு, மலசலகூடம் என்பனவற்றில் சோதனை நடத்தப்பட்டதுடன் கிணறு பல காலமாக குளோறின் இடப்படாமல் – துப்பரவு மேற்கொள்ளாமல் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

அத்துடன் கன்ரர் வாகனத்தில் தண்ணீர் போத்தல்கள், மூடிகள், சீல் வைப்பதற்கான பொலித்தீன் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. வடிகட்டிய தண்ணீரைப் போத்தலில் அடைத்து யாழ்ப்பாணத்துக்கு விநியோக்கவிருந்ததாகக் குறித்த வாகனத்தின் சாரதி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அதையடுத்து கைப்பற்றப்பட்ட பொருள்களின் மாதிரிகளை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற)

## இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும்

தென்மராட்சி, ஓக.25

வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் கீழ் பணியாற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றலுக்கான விண்ணப்பங்கள் மாகாண சுகாதார அமைச்சால் கோரப்பட்டள்ளது.

விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்குமாறு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (ற-9)

## மைத்திரியை சந்தித்தார் பிளேயர்



கொழும்பு, ஓக.25

தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை மிகவும் அமைதியான முறையிலும், சுதந்திரமான முறையிலும் நடத்துவதற்கு ஜனாதிபதி அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை ரொனி பிளேயர் இதன் போது பாராட்டியுள்ளார்.

இலங்கையினுடைய சுற்றுலாத் துறை வளர்ச்சியடைவதற்கு தன்னாலான பங்களிப்பை வழங்குவதாகவும் இச்சந்தர்ப்பத்தில் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## வழித்தட அனுமதி இன்றி பஸ் சேவை: சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி, ஓக.25

வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாரதிக்கு எதிராக கடந்த வருடம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதிலும் குறித்த சாரதி நீதிமன்றுக்கு வருகை தராததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதி நீதிமன்றில் முற்பட்டதால் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற-9)

## மீனவர் மாயம்

திருகோணமலை சல்லி கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவதற்காக சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். சல்லி 7ஆம் வட்டாரத்தை சேர்ந்த 25 வயதுடைய அழகராசா தங்கரூபன் என்பவரே காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் நேற்றுமுன்தினம் இரவு தொழிலுக்கு சென்றதாகவும் அதிகாலை 3 மணியளவில் தான் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டிருப்பதாகவும் தன்னைக் காப்பாற்ற கடலுக்கு வருமாறு அவருடைய நண்பருக்கு ஒரு குறுந்தகவல் அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நபர் மீன்பிடியில் ஈடுபடுவதற்காகச் சென்ற படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டிருப்பதோடு குறித்த நபரை தேடும் பணிகள் தற்போது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## குளப்பகுதிகளில் வசித்து வருவோரை அகற்றுவதை கண்டித்து ஆர்ப்பாட்டம்





வவுனியா, ஓக.25

வவுனியாவில் குளப்பகுதியில் வசிப்பவர்களை வெளியேற்றும் நட்வடிக்கையை ஆட்சேபித்து நேற்றுக் காலை வவுனியா அரச அதிபர் பணிமனைக்கு முன்பாகத் திரண்டு நெளுக்குளம், கூமாங்குளம், வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதுடன் அரச அதிபரிடம் மனுவொன்றையும் கையளித்தனர்.

கடந்த 40வருடகாலமாக குளப்பகுதியை அண்டி வசிக்கும் தமக்கு கடந்த வாரம் கமநல சேவைகள் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறுமாறு அறிவுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அவர்கள், தமது இருப்பிட உறுதி மற்றும் அரச திணைக்களத்தால் வழங்கப்பட்ட சான்றதழ்கள் என்பவற்றுடன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

அதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அங்கு சென்று மக்களின் பிரச்சினை குறித்து கேட்டறிந்து கொண்டார். அத்துடன் குறித்த மக்களின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் குறித்த மக்களின் மனுவும் கையளிக்கப்பட்டது.

அதையடுத்து குறித்த நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு காணி உத்தியோகத்தர்களுக்கு அரச அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். (ற-402)

## கடந்த 7 மாதங்களில் 3 லட்சத்துக்கும் மேல் வாகனங்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஓக.25

கடந்த ஏழு மாதங்களில் மாத்திரம் 3 லட்சத்து 75 ஆயிரத்து 994 வாகனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று போக்குவரத்து ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் வாகனங்களின் பதிவு எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று போக்குவரத்துத் திணைக்களம் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் இந்த எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களில் அதிகமானவை மோட்டார் சைக்கிள்களே என்றும் அவர் தெரிவித்துள்ளார். வாகனங்களின் கொள்வனவுக்குப் புதிய அரசினூடாக வழங்கப்பட்ட தீர்வை வரி சலுகை அதற்கான காரணம் எனவும் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாகனக் கொள்வனவு ஏற்கனவே அதிகரித்துள்ள நிலையில் இந்தப் பதிவு எண்ணிக்கை உயர் பதிவைக் காட்டுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 AUG 2015

# உள்ளக விசாரணையை வலியுறுத்துவார் நிஷா

## ரணிலின் வெற்றியையடுத்து அமெரிக்கா தீர்மானம்

கொழும்பு, ஓக. 25
நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றுள்ளதால் போர்க் குற்றங்கள் குறித்த நம்பகத்தன்மை மிக்க உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை ஏற்படுத்துமாறு பிஸ்வால் அரசுக்கு அழுத்தம் கொடுப்பார் என இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.
அமெரிக்காவின் தென்னாசியா மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவி இராஜாங்க செயலாளர் நிசா பிஸ்வாலின் பயணம் காரணமாகவே நேற்று அவசர அவசரமாக மூன்று அமைச்சர்கள் பதவியேற்றதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
தேர்தல் முடிவுகள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பின்னர் , பிரதமராக ரணில்விக்கிரமசிங்க பதவியேற்றார். எனினும் புதிய அமைச்சரவை இன்னமும் பதவியேற்கவில்லை. நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கடசிக்கும் இடையில் அமைச்சு பதவிகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள கருத்துவேறுபாடே இதற்கு காரணம்.
தேர்தலில் வென்றவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் இடையில் சிறிய வித்தியாசம் காணப்படுவதே தற்போதைய முட்டுக்கட்டைக்கு காரணமாக அமைந்துள்ளது. நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணிக்கு 106 ஆசனங்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 95 ஆசனங்களும் கிடைத்தன. எனினும் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணிக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதனை பேரம் பேசுவதற்காக பயன்படுத்துகின்றது.
எனினும் ஜனாதிபதியிடம் இந்த வாரம் கையளிக்கப்படவுள்ள ஐக்கிய நாடுகளின் போர்க் குற்ற விசாரணை அறிக்கை குறித்து ஆராய்வதற்காக அமெரிக்காவின் தென்னாசியா மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவி இராஜாங்க செயலாளர் நிசா பிஸ்வால் கொழும்புக்கு இன்று வருகை தரவுள்ளார். அவரின் வருகைக்கு முன்பாக வெளிவிவகார, நீதி மற்றும் புனர்வாழ்வு அமைச்சர்கள் பதவியேற்பை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.இதன் பிரகாரமே இந்த மூன்று அமைச்சுகளும் கடந்த நல்லாட்சி அரசில் அங்கம் வகித்தவர்களுக்கு வழங்கப்பட்டது.
முன்னர் போர் நடைபெற்ற பகுதிகளில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட 2000 ஏக்கர் நிலத்தை மக்களிடம் கையளித்துள்ளதை தான் போரில் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்க்ளுக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என பிஸ்வாலிடம் அரசு காண்பிக்கலாம். இதனை தமிழரான மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் விளக்கமளிப்பார் எனவும் இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
(த)

# தேசியப்பட்டியல் நியமனம் கூட்டமைப்பின் முடிவல்ல

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25
தமிழ் தேசிய கூட்டமைப்பால் தேசிய பட்டியல் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான முடிவு என்பது கூட்டமைப்பின் முடிவல்ல என்றும் அது தன்னிச்சையாகவும் ஒருதலைப்பட்சமாகவும் தமிழரசுக் கட்சியால் எடுக்கப்பட்ட முடிவு என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
யாழ்.மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்ட சுரேஸ் பிரேமச்சந்திரன் தோல்வியடைந்ததையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் ஒரு கட்சியின் தலைவரான (ஈ.பி.ஆர்.எல்.எப்) அவருக்கு தேசிய பட்டியலில் இடமளிக்க வேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் அங்கம் வகிக்கும் மற்ற கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.
ஆயினும் அந்தக் கோரிக்கை தொடர்பில் சரியான முடிவு எடுக்காமல் தமிழரசுக்கட்சி தனது விருப்பத்துக்கு இரண்டு பேரை தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நியமித்துள்ளது என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்
இந்தக் கோரிக்கை தொடர்பில் திருகோணமலையில் இரண்டு முக்கிய பேச்சு நடைபெற்றிருந்த போதிலும், பேச்சுக்கு அமைவாக முடிவு எடுக்கப்படவில்லை என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கான தேசியப் பட்டியலுக்கு தமிழரசுக் கட்சியில் இருக்கும் சில நபர்கள் தமது கட்சியின் இரண்டு உறுப்பினர்களை நியமித்திருப்பது, கூட்டமைப்பில் இருக்கும் தமிழரசு கட்சி தவிர்ந்த மற்றக் கட்சிகளுக்கு ஏற்புடைய செயலல்ல. எல்லோரும் சேர்ந்து விதை விதைப்பதும், அறுவடை செய்யும்போது தமிழரசுக் கட்சி மட்டும் செய்துகொண்டு போவது என்பதும் ஆரோக்கியமான அரசியலுக்கும் நல்லதல்ல ஒரு கூட்டமைப்பு தத்துவங்களுக்கும் நல்லதல்ல, ஆனால் இதனை மிகவும் வெட்கம் கெட்டதனமாக தமிழரசு கட்சி தொடர்ந்து செய்கிறது என்பதுதான் ஒரு விடயம் என்றும் தெரிவித்துள்ளார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.
அதேசமயம், இந்த பிரச்சினை குறித்து தமது கட்சி இரண்டொரு தினங்களில் விரிவானதொரு அறிக்கையை வெளியிடவுள்ள தாக தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன், இதுகுறித்த விரிவானதொரு நேர்காணலை வழங்குவதற்குத் தற்போது தான் தயாரில்லை என் றும், சுருக்கமானதொரு கருத்தை மட்டுமே இப்போது தன்னால் தெரி விக்க முடியும் என்றும் தெரிவித் துள்ளார்.
அதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேசியப் பட்டியல் நியமனங்கள் தொடர்பில் எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களையும் சர்ச்சைகளையும் அதன் தலைவர் இரா. சம்பந்தன் புறந்தள்ளியுள்ளார்.
மிகவும் ஆழமாக சிந்தித்து விவாதித்த பிறகே கூட்டமைப்பின் சார்பில் துரைரட்ணசிங்கம் மற்றும் சாந்தி சிறீஸ்கந்தராஜா ஆகியோருக்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கும் முடிவு எடுக்கப்பட்டது என சம்பந்தன் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.
சில கொள்கைகளின் அடிப்படையிலேயே அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு ஒவ் வொரு இடங்கள் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது, கூட்டமைப்பின் சார்பில் பெண் ஒருவர் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது எனவும் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.
குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே சாந்தி தோல்வியடைந்திருந்தார் என்பதும், யாழ். தேர்தல் மாவட்டத்தைக் காட்டிலும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் குறைந்த அளவுக்கே கூட்டமைப்பின் சார்பில் உறுப்பினர்கள் தேர்தெடுக்கப்பட்டனர் என்பதும் அவரது தேர்வுக்கு ஒரு காரணம்.
கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் அம்பாறை தேர்தல் மாவட்டங்களிலேயே மிகக் குறைவான உறுப்பினர்கள் தேர்வானதால் அப்பகுதிக்கு ஒரு இடம் வழங்கும் முடிவு எடுக்கப்பட்டது என்றும் சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.
வட மாகாணத்துக்கான இடத்தை முடிவு செய்யும்போது யாழ் தேர்தல் மாவட்டத்தில் ஏற்கனவே ஐந்து உறுப்பினர்கள் அங்கு தேர்வாகியுள்ள நிலையில், குறைந்த வாக்கு வித்தியாசத்தில் ஆறாவது இடத்தை தவற விட்டவரை புறந்தள்ளி அவருக்கும் குறைவான வாக்குகள் பெற்று அடுத்த இடத்தில் இருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு இடமளிப்பது குறித்து பல கேள்விகள் எழுந்தன என்றும் தெரிவித்துள்ளார் கூட்டமைப்பின் தலைவர்.
தேசியப் பட்டியல் நியமனங்கள் குறித்து கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவை விமர்சித்துள்ள சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு பதில் கூற வேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்றும் சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-ரி)

# விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனத்தை நிறுத்துமாறு மனு கையளிப்பு

கிளிநொச்சி, ஓக.25
வடமாகாணத்தில் உள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவிக்கான நியமனம் பொருத்தமற்றதும், முறையற்றதும் என்று தெரிவித்தும் குறித்த நியமனத்தை நிறுத்தக் கோரியும் கிளிநொச்சி மாவட்ட விவசாய சம்மேளனத்தினர் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் நேற்று மனுக் கையளித்தனர்.
விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சையில் வடக்கில் இருந்து சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் யுவதிகள் பங்கு கொண்டிருந்த போதும் தற்போது வடக்கு மாகாணத்தில் குறித்த வெற்றிடத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள 361 பேரில் 332பேர் சிங்கள இளைஞர்கள், யுவதிகள் என்றும் 29 பேர் மாத்திரமே தமிழர்கள் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.
எனவே இந் நியமனத்தை உடன் இடை நிறுத்தி வடக்கில் உள்ள தமிழ் இளைஞர்கள், யுவதிகளை இந்த வெற்றிடத்துக்கு உள்வாங்குமாறு தெரிவித்து ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம் கையளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிம் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனத்தினர் குறித்த மனுவைக் கையளித்தனர்.
(ற-21)



# விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனத்தை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, ஓக.25
விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் நியமனத்தில் வடக்கில் 92 விகிதம் சிங்களவர்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் காலை முல்லைத்தீவில் கமநல சேவைத் திணைக்களத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.
'அரசே எமக்கு அநீதி இழைக்காதே நல்லாட்சியின் வெளிப்பாடு இதுதானா?', 'எமது வேலை வாய்ப்பு எமக்கே வேண்டும்', 'வடக்கு மாகாண வெற்றிடங்களுக்கு தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்க் மாவட்டத்துக்கான வெட்டுப்புள்ளிக்கு வேலை வாய்ப்பை வழங்க எமது மொழி தெரியாத உத்தியோகத்தர் எமக்கு வேண்டாம்' என்ற பாதாகைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதம முகாமைத்துவ உதவியாளரிடம் மாகாணசபை உறுப்பினர் கே. சிவநேசன் ஊடாக மனு ஒன்றையும் வழங்கினர்.
இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டதுடன் வடமாகாண சபை உறுப்பினர் கே.சிவநேசன உட்பட சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.
முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்குச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதிக்கான மனுவை அரச அதிபர் அலுவலகத்தில் இல்லாத காரணத்தால் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் மாகாண சபை உறுப்பினர் கே.சிவநேசன் ஊடாக கையளித்தனர்.
அதேவேளை, நியமனம் வழங்கப்பட்டவர்களில் நேற்று 30 பேர் கடமையில் இணைந்துகொண்டனர் என்று முல்லைத்தீவு கமநல சேவை திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
(ற-102)


தெல்லிநகர் துர்க்காதேவி ஆலய
வேட்டையொடு கைலாயவாகனம் பாடும்
இன்று (25.08.2015) செவ்வாய்க்கிழமை



தெல்லிநகர் துர்க்கையருள் வண்ணத்தைப் பாடும்
தேர்ந்தவள்தான் ஆடும் திரு வேட்டை பண்பாடும்
வல்ல தசக் கீரிவனவன் எடுத்த கைலையின்
எழில் பாடும் தெல்லி விஷ்ணு துர்க்கையைப்பாடும்.
பத்துத்தலை இராவணன்தன் வலியொடுக்கிய
பரமனருட் கருணையதன் திறம் விளங்கிட
முத்துநிகர் கைலாய வாகனத்தேறி
பெரும் வீர சக்தி விஷ்ணு துர்க்கையைப்பாடும்.
இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.
அனுசரணை: கைலாச வாகன திருவிழா உபயகாரர்
திருமதி. ச. சபாநாதன்
மல்லாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குடிதண்ணீர் திட்ட முதற்கட்ட பணி ஆரம்பமானது

## குளப் புனரமைப்புக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது

கிளிநொச்சி, ஓக.25
ஆசிய அபிவிருத்தி வங்கியாலும், இலங்கை அரசாலும் வழங்கப்பட்ட 2ஆயிரத்து 114 மில்லியன் ரூபா செலவில் வடக்கு மாகாண மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சால் மேற்கொள்ளப்டும் கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் புற மற்றும் மேற்புற சாய்வை புனரமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா நேற்று கிளிநொச்சி இரணைமடுவில் நடைபெற்றது.

இரணைமடு ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி, குளத்தின் கரையில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் ஆகியோரால் குள புனரமைப்பிற்கான அடிக்கற்கள் நடப்பட்டன.



இந்த விழாவில் வட மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராசா. வடக்கு மாகாணசபை உறுப்பினர் தவநாதன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், திட்ட உதவிப் பணிப்பாளர்கள், கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்ட பணிப்பாளர், அரச அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற–21)



# சிறுவர் இல்லங்களுக்கு திடீரென சென்று பார்வையிட்ட நீதிவான்

## அங்குள்ள பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்

கிளிநொச்சி, ஓக.25
கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வரும் ஐந்து சிறுவர் இல்லங்களுக்கு நேற்றுமுன்தினம் மாலை திடீரெனச் சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வஹாப்தீன் சிறுவர் இல்லங்களின் நிலமைகள் தொடர்பாகப் பார்வைட்டு சிறுவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

சிறுவர் இல்லங்களில் சிறுவர் தங்குமிடம், சமையல் கூடம், உணவு பரிமாறும் இடம், கல்வி கற்கும் பகுதிகள், குடிநீர் உள்ளிட்ட சகல பகுதிகளையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு சிறுவர்களுடன் அவர்களுடைய அடிப்படை விடயங்கள் தொடர்பாக அவர் கேட்டறிந்தார்.

பிற்பகல் 3 மணியளவில் டீ.08 உருத்திரபுரத்தில் அமைந்துள்ள திருக்குடும்ப சிறுவர் இல்லம், காந்தி சிறுவர் இல்லம், ஜெயந்தி நகரில் அமைந்துள்ள மகாதேவா சைவச் சிறுவர் இல்லம், திருவையாற்றில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் இல்லம், கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள கருணா நிலையம் ஆகிய சிறுவர் இல்லங்களை அவர் பார்வையிட்டார்.

அதன்போது கிளிநொச்சியில் உள்ள ஒரு சிறுவர் இல்லத்தின் சமையல் அறை மற்றும் சிறுவர்களின் அடிப்படை விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துமாறு மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இதன்போது மாவட்ட சிறுவர் நன்னடத்தையதிகாரி முத்துக்குமாரும் உடன் சென்றிருந்தார். (ற–21)

# மோ.சைக்கிள் தீக்கிரை



மட்டக்களப்பு, ஓக.25
மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு சின்ன உப்போடையில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கி ளொன்று இனந்தெரியாதோரால் நேற்று அதிகாலை தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு சின்ன உப்போடை 2ஆம் குறுக்குத் தெருவிலுள்ள வீட்டுக் காணிக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த யமஹா லேடிஸ் மோட்டார் சைக்கிளே அதிகாலை ஒரு மணியளவில் இனந்தெரியாதோரினால் தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளது.

எனினும் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எரியூட்டப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள் சுமார் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரணைமடு நீர் விவகாரம் திட்டமிட்டுப் பரப்பிய வாதம்

## வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25
கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுடைய விவசாய தேவையை பூர்த்திசெய்யாமல் இரணைமடு குளத்தில் இருந்து ஒருசொட்டு நீரையேனும் தங்களுக்கு கொண்டு வருமாறு யாழ்ப்பாணத்தில் இருந்து எந்த ஒரு பொதுமகனும் கூறவில்லை. அதே போன்று கிளிநொச்சி விவசாயிகள் யாரும் யாழ்ப்பாணத்திற்கு தண்ணி தரமாட்டோம் என்று சொன்னதும் இல்லை. – இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன்.

கிளிநொச்சி இரணை மடுவில் நேற்று நடைபெற்ற இரணைமடு குளத்தினுடைய புனரமைப்பின் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தங்களுடைய நலன் சாா்ந்த, தங்களுடைய துறை சார்ந்த நலன்களை பெற்று கொள்வதற்காக சில படித்த மனிதர்களினால் திட்டமிட்டு பரப்பப்பட்ட ஒரு வாதமே தவிர உண்மையில் யாழ்ப்பாண மக்கள் யாரும் இரணைமடுவில் இருந்து தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று இதுவரைக்கும் கேட்டது இல்லை. அவ்வாறு கேட்டிருந்தால் நிச்சயமாக நான் நினைக்கின்றேன் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தேர்தலில் தோற்று போயிருக்கக் கூடும்.

யாழ். மாவட்டத்தில் நிச்சயமாக கிளிநொச்சி மாவட்டத்தில் விழுந்த வாக்குகளை விட அவருக்கு அங்கு தான அதிகமான வாக்குகள் விழுந்திருக்கின்றது. ஆகவே இது ஒரு அறிவியல் சார்ந்த அறிவு சார்ந்த விடயம். இரணைமடு குளம் என்பது எங்களுடைய வடக்கு மாகாணத்தினுடைய ஒட்டு மொத்த தமிழர்களுடைய இருப்பு சார்ந்த விடயம். கிளிநொச்சியில் இருக்கும் இரணைமடு குளத்தை நம்பி பயிர் செய்கின்ற கிளிநொச்சி விவசாயிகளுடைய பிரச்சினை அல்ல இது. எங்களைப் பொறுத்த வரைக்கும் ஒட்டு மொத்த தமிழ் இனத்துக்கும் உணவை வழங்கவேண்டிய ஒரு மிகப்பெரும் உணவு களஞ்சியமாக திகழப்போகின்ற ஒரு மாவட்டத்திற்குரிய நீர் வளம். இங்கு விவசாயம் செய்கை பண்ணப்படாது போனால் நிச்சயமாக பாதிக்கப்படப் போவது ஒட்டு மொத்த வடக்கு மாகாணமும் என்பது எங்களுடைய எல்லோருடைய என்ணத்திலும் பிரதி பலித்திருக்கின்றது.

ஆகவே இது இனிமேலும் ஒரு விவாத பொருளாக மாறாது. அதே சமயம் இங்கிருக்க கூடிய விவசாயிகள் ஒவ்வொருவரும் தாங்கள் யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் தர மாட்டோம் என்று சொன்னது கிடையாது. ஆரம்பத்தில் நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆனால் அந்த நிபந்தனை கூட எங்களை போன்றவர்களுக்கு தரப்பட்ட தவறான தகவல்கள்தான்.– என்றார்.(ற–21)

# இரணைமடுக் குளம் புனரமைப்படாதமை நாம் நசுக்கப்படுவதை உணர்த்துகின்றது

## வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுல ராசா தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக.25
மின்னேரியா, அனுராதபுரம் போன்ற நாட்டின் . பல பாகங்களிலேயும் உள்ள குளங்களை எல்லாம் அபிவிருத்தி செய்த அரசு தமிழர்களுடைய சொத்தாக உள்ள இரணை மடு குளத்தை அபிவிருத்தி செய்யாமல் இருந்ததன் காரணம் நாங்கள் நசுக்கப்பட்டமையே. – என்று தெரிவித்தார் வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுல ராசா.



கிளிநொச்சி இரணைமடுவில் நேற்று நடைபெற்ற இரணைமடு குள புனரமைப்பின் ஆடிக்கல் நாட்டும் விழாவில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நீங்கள் ஏ–9 வீதி வழியாக வந்தால் இங்கே சேர்.பொன் இராமநாதனுடைய கட்டடத்தை காணலாம். அது எவ்வாறாக இருக்கின்றது என்பதை பார்க்கலாம். அவருடைய காணித்துண்டு தற்போது துண்டங்களாக பிரித்து அதிலே கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இராமநாதன் பவுண்டேசனுக்குரிய ஒரு பொது சொத்து இப்போது துண்டங்களாக வெட்டப்பட்டுள்ளது. இதை ஏன் கூறுகின்றேன் என்றால் இந்த இரணைமடுவும் எங்களுக்குரிய ஒரு பொது சொத்து. அதை நாங்கள் சரியான முறையிலே அனுட்டானம் செய்ய வேண்டும். அதனுடைய உச்ச பயனை நாங்கள் பெற வேண்டும் என்பதற்காவே இந்த திட்டத்திலே ஈடு படுகின்றோம்.

இதை ஏன் இப்பொழுது செய்கின்றோம்? 1960ஆம் ஆண்டு ஏன் அதை அபிவிருத்தி செய்யவில்லை?, 1955ஆம் ஆண்டு மின்னேரியா, அனுராதபுரம் ஆகியவற்றில் உள்ள குளங்களை எல்லாம் புனர்நிர்மாணம் செய்யும் போது அரசு இரணைமடுக் குளத்தை ஏன் அபிவிருத்தி செய்யவில்லை?. எங்களுடைய அரசில்வாதிகள் எங்காவது போனார்களா?, அபிவிருத்தி செய்யாமைக்கான காரணம் என்ன?. இதை தான் நாம் சொல்கின்றோம் எங்களை போட்டு நசுக்குகின்றார்கள் என்று.

அருமையான ஒரு சந்தர்ப்பம் எங்களுக்கு கிடைத்திருக்கின்றது. இந்த திட்டத்தின் மூலம் பயன் பெறுவது மக்கள் தான். இந்த பிரதேசம் மட்டும் அல்லாமல் வடபுலத்தில் இருக்கும் தமிழர்கள் அனைவருக்கும் இந்த நீர் பயன்பட போகின்றது.– என்றார். (ற–21)

# வீதியில் கஞ்சா விற்ற குடும்பஸ்தர் கைது

கொழும்பு, ஓக.25
வீதியில் வைத்து கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவரை கைது செய்துள்ளனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவன்கேணி எனும் இடத்தில் கஞ்சா விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபரிடமிருந்து 3 ஆயிரத்து 850 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே குறித்த நபரைத் தாம் கைது செய்ததாகவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேக நபரை நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிசார் தெரிவித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பட்டர்' கேக்குக்கு ஐ.ம.சு.மு. 'ஐசிங்' பெறத் தவறிவிட்டது

## முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா கூறுகின்றார்



கொழும்பு, ஓக.25
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தோல்விக்கு மகிந்த ராஜபக்சவும், முன்னணியின் கட்சித் தலைவர்களும், சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவுமே பொறுப்பேற்க வேண்டும் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் சுதந்திரக்கட்சியின்ஊடகப்பேச்சாளரும்,முன்னாள் அமைச்சருமான டிலான் பெரேரா. 'பட்டர்' கேக்கைத் தயாரித்த ஐ.ம.சு.மு. ஜனாதிபதியிடமிருந்து 'ஐசிங்'கை பெற்றுக் கொள்ளவில்லை. எனவே தோல்விக்கு ஜனாதிபதி பொறுப்பல்ல என்றும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மகிந்த ராஜபக்ச குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடாமல் கம்பகா மாவட்டத்தில் போட்டியிட்டிருக்கலாம். அவர் குருநாகலை தேர்ந்தெடுத்தது பிழையாகும்.
கம்பகா மாவட்டத்தில் போட்டியிட்ட பிரசன்ன ரணதுங்க ஐ.ம.சு.முவில் மகிந்த – மைத்திரி அணியென்ற பிரிவினையை ஏற்படுத்தி முன்ன ணியை பின்னடையச் செய்துவிட்டார்.
இந்த நிலையில் மகிந்த கம்பஹாவில் போட்டியிட்டிருக்கலாம். 'பட்டர்' கேக்கை தயரித்த ஐ.ம.சு.மு. ஜனாதிபதி மைத்திரிபாலவிடமிருந்து 'ஐசிங்'கை பெற்றுக் கொள்ளவில்லை. இதுவே தோல்விக்குக் காரணமாகும்.
தோல்விக்கு ஜனாதிபதி பொறுப்பல்ல. மகிந்தவும், முன்னணியின் கட்சித் தலைவர்களும், சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவுமே தோல்விக்கு பொறுப்பேற்க வேண்டும்.
தேர்தலுக்கு முன்பதாகவே மகிந்தவை போட்டியிட வேண்டாம். சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகள் கிடைக்காது என ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தார். ஆனால் அதற்கு செவிசாய்க்கப்படவில்லை.
நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐ.ம.சு. முவோ, ஐ.தே.கவோ பெரும்பான்மை வெற்றி பெறவில்லை. எனவே இரு தரப்பினரும் ஆட்சியமைக்க முடியாது. இவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலேயே ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும். இன்று அவ்வாறானதொரு ஆட்சியே ஏற்படுத்தப்படவுள்ளது. எனவே இதனை தேசிய அரசு எனக் கூறமுடியாது.
நாட்டின் தேசிய பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து ஏற்படுத்தப்படுவதே தேசிய அரசாகும். எனவே இந்த அரசு ஜனாதிபதி மைத் திரி தலைமையிலான அரசாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிக ஆசனங்கள் கிடைத்திருந்தால் அதற்கே எதிர்க்கட்சி தலைமை வழங்கப்பட வேண்டும்.
இதனை இனவாத ரீதியாக நோக்கக்கூடாது.– என்றார். (ற)

## மைத்திரியாலேயே பறிபோனது ஆட்சி

### வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வருவதை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவே தடுத்தார் என்று வாசு தேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.
நாராஹென்பிட்டி அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெறும் எனக் கூறினார்கள், ஆனால், மைத்திரி முன்னணியை தோல்வியடைய செய்தார்.
அத்துடன் மைத்திரிபால சிறிசேன, ஒழுக்கப் பிரச்சினையை மையப்படுத்தி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பணிய வைக்க முயற்சித்து வருகிறார்.
மனச்சாட்சிபடி செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒழுக்கப் பிரச்சினையை பயன்படுத்தி தடுக்க முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். – என்றார். (ற)

## மகிந்தவின் கூட்டத்துக்கு ரூபா 132 லட்சம் அரச நிதி

கொழும்பு, ஓக.25
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தமது ஒரு பரப்புரைக் கூட்டத் துக்காக ரூபா 132 லட்சம் அரச நிதியை செலவிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
கடந்த வருடம் டிசம்பர் மாதம் 30ஆம் திகதி நீர்கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்துக்கே இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பெரிய ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இந்த விடயம் குறித்து தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.
கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், பொதுமக்களின் ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட பல நிதிகளைக் கொண்டு மஹிந்த தரப்பினர் தேர்தல் பரப்புரைய்ய முன்னெடுத்திருந்தனர் என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. (ற)

## சுசில் பிரேமஜயந்த எமக்கு துரோகம் இழைத்துள்ளார்

### சாடுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஓக.25
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்த தற்போது எமக்குத் துரோகம் இழைத்துள்ளார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீர வன்ஸ தெரிவித்துள்ளார்.
நாராஹன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் நியமனத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.
முன்னணியின் நிறைவேற்றுக் குழுவில் தேசிய சுதந்திர முன்னணி இல்லாத நிலையில், சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாது. எனினும் நிறைவேற்றுக் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் – என்றும் தெரிவித்துள்ளார். (ற)





## 7 ஆம் திருவிழா

### மானிடமும் தமிழும் வாழ அருள்வாய்

அழகென்றால் அவன்தான் முருகன்
தமிழென்றால் அவன்தான் குமரன்
பழமென்றால் அவன்தான் பழனி
கிழம் என்றால் அவன்தான் விருத்தன்
நல்லை நகர்ப்பதியில் நாடும் அடியார்
தொல்லை தனை நீக்கி அருள் சுரந்து
வல்வினை தீர்க்கும் ஞானகுருவே
நல்லவை யாவும் நாம் பெற்றிடவே
அனுதினமும் உன் அழகு தரிசனம்
காணும் பேறு கிடைத்திடவே வலம் வருவாய்
நானும் உன் கழலடி பணிந்து வேண்டினேன்
மானிடமும் தமிழும் மாண்புற வாழ்ந்திடவே

*வாகினி கிருபாகரன்*

### வெள்ளி வேலாயுதன்

அன்னை உமைபாலகன் ஆறுமுக வேலவன்.
இன்னல்கள் தீர்ப்பவன் ஈடிணை அற்றவன்.
உண்மைப் பொருளானவன் ஊழ்வினைகள் தீர்ப்பவன்.
எல்லாம் உணர்ந்தவன் ஏகமாய் உறைபவன்.

ஒன்றாய்ப் பலவாய் நின்றவன் 'ஓம்' காரமானவன்.
ஔவைக்கருள் செய்தவன் ஐந்துகரன் சோதரன்
அகத்தியமாமுனி காதில் அருந்தமிழைச் சொன்னவன்
ஆடுமயில் வாகனன் அன்பால் துயர் தீர்ப்பவன்.

ஆறுபடைவீடு கொண்ட ஆறு தலை ஆண்டவன்.
ஆவினன் குடி வாழும் ஆதிசிவன் புத்திரன்.
திருத்தணிகை தன்னில் சிலையாய் நின்றருள்பவன்.
திருவேரகம் தன்னில் உறை சிங்கார வேலவன்.

திருப்பரம் குன்றமதில் சேவிப்பார்க் கருள்பவன்.
செந்தூரில் வாழ்கின்ற தங்க வேலாயுதன்.
தந்தைக்கு மந்திரத்தைத் தானறிந்து சொன்னவன்.
தகப்பன் சாமியென்று தனிப் பெயர் பெற்றவன்.

சூரனை வதைத்தவன் சூழும் வினைதீர்ப்பவன்.
ஆறுதலைச் சாமியாய் ஆறுதலைத் தந்தவன்.
வள்ளி தெய்வயானை தனை வலமிடமாகக் கொண்டவன்.
நல்லூரில் வாழ்கின்ற வெள்ளி வேலாயுதன்.

*கந்த பேரின்பம்.*

### நல்லூர் கந்தனிடம் எடுத்துச் சொல்லடி தோழி

பல்லவி
நல்லூர் கந்தனிடம் எடுத்துச் சொல்லடி - சகியே
இந்தக் கணம் வராவிடில் மனம்மிக வாடுமென்று

*அனுபல்லவி*
மாலைப் பொழுதும் மயில் தோகை அழகும் என்னை
வெந்தழல் நெருப்பாக அனுதினமும் வாட்டு தென்று

*சரணம்*
பன்னிரு தோளழகும் பரந்த விழி அழகும்
கண்டதும் என்மனது பாகாய் உருகுதடி
கனவில் வந்து என்னிடம் காதல் மொழி பேசிய
கந்தனவன் இன்னும் இங்கு வராதது ஏனென்று

*திருமதி மலர்விழி கனகசபை*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பணிகளில் மேம்போக்காகச் செயல்படும் மனநிலையால் சிரமம் வரலாம்; கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, பணவரவு சுமாராக இருக்கும். மனைவி கேட்டதை வாங்கித் தர முயற்சிப்பீர்கள். வாகனம் இயக்கும் போது கவனம் நல்லது.

**இடபம்:** இயன்ற அளவில் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்துப் புதிய சாதனை இலக்கை அடைவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம்:** விட்டுக் கொடுக்கும் மனதுடன் செயற்படுவீர்கள். ஆதாய பலன் பெற நல்ல வாய்ப்பு தேடிவரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட அபிவிருத்தி பணி நிறைவேறும். பணவரவில், ஒரு பகுதியைச் சேமிப்பீர்கள்.

**கடகம்:** திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். புதியவரை முழுமையாக நம்பி செயற்படுவதில் கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் சிறு இடையூறு வந்து பின்னர் சரியாகும். சேமிப்புப் பணத்தை எடுத்து செலவழிக்கும் நிலை வரலாம்.

**சிங்கம்:** செயல்களில் சிறு தடுமாற்றம் ஏற்படலாம். தொழிலில் நிறைவேற்ற வேண்டிய பணியை ஆர்வத்துடன் மேற்கொள்ளவும். புதிய முயற்சிகளில் அதிக செலவு ஏற்படலாம். உடல்நிலையில் சிறு தொந்தரவு ஏற்பட்டு விலகும்.

**கன்னி:** போட்டி, பந்தயத்தில் நன்மை பெற வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். தாராள பணவரவால் சேமிக்க வழியுண்டு. மங்கள நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** குழப்பமான மனதுடன் செயற்படுவீர்கள். எதிர்கால நலன் சார்ந்த பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய அதிக உழைப்பு அவசியம். பொருள்களை வாங்கும் போது ஏமாற நேரிடலாம்; கவனமாய் வாங்கவும்.

**விருச்சிகம்:** நண்பர், உறவினர்களின் அன்பைப் பெறுவீர்கள். செயல்களில் சாதனை நிகழ்த்த வாய்ப்புத் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் இடுவீர்கள். திருப்திகரமான பணவரவு வரும்.

**தனுசு:** செயல்களில் ஆரவாரம் இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. உறவினர்களின் ஆலோசனை நல்வழி பெற உதவும். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலையைச் சரி செய்வீர்கள். குடும்பச் செலவுக்கு தேவையான பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** நண்பர்களின் உதவியால் எதிர்பார்த்த நன்மை ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சியால், நல்ல இலாபம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு ஆதாய வருமானம் கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்

**கும்பம்:** இனிய பேச்சால் பல்வேறு நன்மைகளைப் பெறுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உபரி வருமானம் கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான முக்கிய பொருள்களை வாங்குவீர்கள்.

**மீனம்:** உங்கள் மனம் வருந்தும் வகையில் சிலர் செயல்படுவர். எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உடல்நலத்துக்கான மருத்துவச் செலவு வரலாம்.

# பேய்கள் மட்டுமே வசிக்கும் கிராமம்

நவீன அறிவியல் வசதிகள் நிறைந்த இந்தக் காலத்தில் வேலைவாய்ப்புக்காகவும், கல்வி மற்றும் பிற வசதிகளுக்காகவும் மக்கள் கிராமங்களை விட்டு நகரங்களுக்குச் செல்வது வாடிக்கையான ஒன்று தான். ஆனால் சுமார் 300 வருடங்களுக்கு முன்னர் 85 கிராமங்களைச் சேர்ந்த மக்களும் ஒட்டுமொத்தமாக கிராமத்தை விட்டுச் சென்ற சம்பவம் உங்களுக்குத் தெரியுமா? ஆம் அந்தக் கிராமத்தின் பெயர் குல்தரா. ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்சல்மெர் என்னும் மாவட்டத்தில் உள்ளது இந்தக் குல்தரா கிராமம். எங்கு திரும்பினாலும் மக்கள் வாழ்ந்ததற்கான எச்சங்கள் மட்டுமே காணப்படும் ஒரு சபிக்கப்பட்ட கிராமம். இந்தக் கிராமத்தின் வரலாறு 1291ஆம் ஆண்டில் இருந்து தொடங்குகிறது. பளிவால் பிராமணர்கள் என்ற சமூகத்தினர் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த கிராமம் இது. இதனுடன் இணைந்து சுமார் 84 கிராமங்கள் இருந்தன.

சலிம் சிங் என்ற திவான் கிராமத் தலைவரின் மகளின் அழகில் மயங்கி அவளை அபகரிக்க திட்டமிட்டான். அதன்படி அந்தப்பெண்ணைத் தனக்கு திருமணம் செய்து தரவில்லை என்றால் மொத்த கிராமத்தையும் அழித்து விடுவதாக எச்சரித்துள்ளான். அவனுக்குத் தக்க பாடம் புகட்ட நினைத்த 85 கிராம மக்களும் 1825 ஆம் ஆண்டில் அனைவரும் கிராமத்தை விட்டு எங்கோ சென்றுவிட்டனர் என்று இந்தக் கிராமத்தின் வரலாறு கூறப்படுகிறது. அது மட்டுமில்லாமல் இந்தக் கிராமம் மனிதர்கள் வாழ்வதற்கு தகுந்ததாக இருக்கக்கூடாது என்று சாபமிட்டுச் சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. அதன்படி கடந்த 300 வருடங்களாக இந்தப்பகுதியில் மனிதர்கள் எவரும் வசிக்கவில்லை என்றும்–அதையும் மீறி வசிக்க முயற்சி செய்தால் இரவு நேரங்களில் அமானுஷிய உருவங்கள் தெரிவதாகவும், விநோத குரல்கள் கேட்பதாகவும் கூறப்படுகிறது.

இதனைப் பலரும் அனுபவித்துள்ளதாகவும் கூறுகின்றனர். எனினும் இந்தப்பகுதியைப் பார்வையிடுவதற்காக ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து சென்று கொண்டு தான் இருக்கின்றனர்.

# பேஸ் புக்கில் பிடித்தவை...




















# இரட்டை வேடத்தில் தனுஷ்

கோலிவூட்டில் தற்போதைய பிரபலமான நடிகராக வலம் வருபவர் தனுஷ். இவருடைய நடிப்பில் வரும் படங்கள் இரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெறுவதால், அடுத்தடுத்து தனுக்கு படவாய்ப்புகள் வந்த வண்ணம் உள்ளன. இவர் தற்போது வேல்ராஜ் இயக்கத்தில், விஜபி–2 என்ற படத்தை நடித்து முடித்துள்ளார். தற்போது பிரபு சாலமன் இயக்கும் பெயரிடப்படாத படத்தில் நடித்து வருகிறார். இந்தப்படத்தில் இவருக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடித்து வருகிறார். மேலும், கருணாகரன், தம்பி ராமையா ஆகியோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகின்றனர். நடிகர்–தயாரிப்பாளர்–பாடகர் எனத் தமிழ் சினிமாவில் பிசியாக வலம் வரும் தனுஷ், பிரபு சாலமன் படத்துக்குப் பின்னர் துரை.செந்தில்குமார் இயக்கும் புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார். துரை.செந்தில்குமார் எதிர்நீச்சல், காக்கிச்சட்டை ஆகிய படங்களை இயக்கியவர். இவர் இயக்கிய எதிர்நீச்சல் படத்தை தனுஷ் தான் தயாரித்திருந்தார். தற்போது தனுஷ்–துரை.செந்தில் குமார் இணையும் படத்துக் கான ஆரம்ப கட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்தப் படத்தில் தனுஷ் இரட்டை வேடத்தில் நடிக்கவிருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. அதாவது, கதைப்படி தனுஷ் இந்தப்படத்தில் ஒரே பிரசவத்தில் பிறந்த இரட்டை சகோதரர்களாக வலம் வருகிறாராம். அவருடைய இரசிகர்களுக்கு இந்தப் படம் ஒரு புதிய அனுபவத்தைக் கொடுக்கும் என்று படக்குழுவினர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். தமிழ் சினிமாவில் 20 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்து முடித்து விட்ட தனுஷ், தற்போது இந்த படத்தின் மூலம் தான் முதன்முதலாக இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுத் திட்டம் தொடர்பான கதைகள் பல புனையப்பட்டவையே

## வடக்கு அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக.25

நாங்கள் வடக்கு மாகாண முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுடன் இந்த இரணைமடு திட்டத்திற்கு நிதி வழங்குகின்ற ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளை கொழும்பில் சென்று சந்தித்திருந்தோம். அப்போது தான் இரணைமடுக் குளத்தைப் பற்றி இவ்வளவு காலமும் வெளிவந்த கருத்து முரண்பாடுகள், சர்ச்சைகள் எல்லாம் ஒவ்வொருவருடைய விருப்பங்களுக்கும், தங்களுடைய நலன்களைக் காப்பாற்றி கொள்ளுவதற்காகவும் புனையப்பட்ட கதைகள்ளும் என்பது தெரிந்தது. – இவ்வாறு தெரிவித்தார் – வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கர நேசன்.

நாடாளு மன்ற உறுப்பினர்களில் வடக்கு மாகாண முதலமைச்சருக்குப் பிடித்த நாடாளுன்ற உறுப்பினர் யார் என்றால் அது சிறிதரன் தான் என்று நான் முதலாவது பட்டியலில் குறிப்பிடுவேன். – என்றும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டுக்கான புனரமைப்பின் அடிக்கல் நடும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாங்கள் வடக்கு மாகாண முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுடன் இந்த இரணை மடு திட்டத்திற்கு நிதி வழங்குகின்ற ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளை கொழும்பில் சென்று சந்தித்திருந்தோம். அப்போது தான் இரணைமடுக் குளத்தினைப் பற்றி இவ்வளவு காலமும் வெளிவந்த கருத்து முரண்பாடுகள், சர்ச்சைகள் எல்லாம் ஒவ்வொருவருடைய விருப்பங்களும், தங்களுடைய நலன்களைக் காப்பாற்றி கொள்வதற்காக புனையப்பட்ட கதைகள் என்பது தெரிந்தது.



உண்மையில் சாவகச்சேரியில் நடந்த ஒரு கூட்டத்தில் முதலமைச்சருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கும் இந்த இரணைமடு தொடர்பான ஒரு வாதப் பிரதிவாதம் ஏற்பட்டது. அந்த விவாதம் இருவருக்கும் முரண்பாடான நிலையை தோற்றுவிக்குமோ என்று கூட பலரும் நினைத்திருந்தார்கள்.

ஆனால் உண்மையில் எங்களுடைய முதலமைச்சரை பொறுத்த வரையில் அவருடைய அருகாமையில் இருந்து பணியாற்றுவதற்கு கிடைக்கின்ற வாய்ப்பை நாங்கள் பெரும் பேறாகத்தான் கருதுகின்றோம்.

தான் சிலவேளை எடுக்கின்ற முடிவுகளில் ஏதாவது அவருக்கு அதிருப்தி இருக்குமாக இருந்தால் நிச்சயமாக அதை அவர் மீளாய்வு செய்வார். அவ்வாறு மீளாய்வு செய்த சமயத்தில் தான் சிறீதரனுடைய விவாதம் தொடர்பாக எங்களுடைய கருத்துக்களுடன் ஒத்துப் போக வேண்டி வந்தது. இன்று நான் நினைக்கின்றேன் நாடாளுமன்ற உறுப்பினர்களில் முதலமைச்சருக்கு மிகவும் பிடித்தமானவராக இருப்பவர் யாரென்று சொன்னால் அது நிச்சயமாக சிறீதரன் என்றுதான் நான் கூறுவேன். எங்களுக்கு நீதியான, நேர்மையான நல்லாட்சியைத்தர வேண்டும் என்றிருக்கக் கூடிய ஒரு முதலமைச்சர் இருக்கின்ற படியாலே தான் நாங்கள் இன்று இந்த திட்டத்தையும் கூட செயற்படுத்தகூடிய சூழ்நிலை இருந்திருக்கின்றது. – என்று அவர் தெரிவித்தார்.

(ற–21)

# சந்தேகநபர்களின் உறவினருக்கு புலனாய்வு பிரிவால் அச்சுறுத்தல்

## சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் தெரிவிப்பு

மன்னார், ஓக.25

மன்னார் முருங்கன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று கூறப்படும் இரு சந்தேக நபர்களும் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் குறித்த இரு சந்தேக நபர்களின் கிராமத்துக்குச் சென்ற புலனாய்வுத் துறை யினர் அவர்களின் உறவினர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று சட்டத்தரணி பிரிமூஸ் சிறாய்வா ஊடாக மன்னார் நீதி மன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இசைமாளத்தாழ்வு கிராமத்தைச் சேர்ந்த இரு சந்தேக நபர்கள் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவித்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை முருங்கன் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டு முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

சம்பவ தினமான வெள்ளிக் கிழமை இரவு 10.30 மணியளவில் முருங்கன் பொலிஸ் நிலையத்தின் கீழ் பகுதியில் தடுத்து வைக்கப் பட்டிருந்த குறித்த இரு சந்தேக நபர்களும் முருங்கன் பொலிஸ் நிலையத்தின் மேல் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு கடுமையாக பொலிஸாரால் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப் படுகின்றது. குறித்த இரு சந்தேக நபர்களில் ஒருவர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த இரு சந்தேக நபர்களும் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இரு சந்தேக நபர்கள் சார்பாகவும் சட்டத்தரணிகளான எஸ்.பிரிமூஸ் சிறாய்வா மற்றும் எம்.சதக்கத்துள்ளா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்று தெரிவித்துக் கைது செய்யப்பட்ட குறித்த இரு சந்தேக நபர்களும் முருங்கன் பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றும், குறித்த இரு சந்தேக நபர்களில் ஒருவரின் கண், முகம் பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதோடு வாய் உதட்டுப்பகுதியில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் சட்டத்தரணிகள் நீதவானின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த இரு சந்தேக நபர்களையும் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்த்து சட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையை பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறும், குறித்த சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறும் மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நேற்றுத் திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது குறித்த இரு சந்தேக நபர்களின் கிராமமான மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இசைமாளத்தாழ்வு கிராமத்துக்கு நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சென்ற முருங்கன் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் புலனாய்வுத்துறையினர் அங்குள்ள மக்களை அச்சுறுத்தியுள்ளனர்.

குறித்த இரு சந்தேக நபர்களாலும் எமக்கோ அல்லது எமது பொலிஸாருக்கோ எதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா ஊடாக உறவினர்கள் பொலிஸ் புலனாய்வுத்துறையினர் விடுத்த அச்சுறுத்தல் தொடர்பாக மன்னார் நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த கிராமத்திற்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்த பொலிஸ் புலனாய்வுத்துறையினர் இருவரும் யார்? இவர்கள் ஏன் சாட்சியாளர்களின் உறவினர்களை அச்சுறுத்தினர்? என்ற விடயங்களை சமர்பிக்குமாறும், முருங்கன் பொலிஸ்நிலையத்தில் குறித்த இரு சந்தேக நபர்களையும் தாக்கியதாக கூறப்படும் முருங்கன் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகர் உட்பட நான்கு பேருக்கும் எதிராக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது தொடர்பான அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர், முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் இருவரதும் வைத்திய அறிக்கையைப் பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறு உரிய தரப்பினருக்கு மன்று உத்தரவிட்டுள்ளதோடு குறித்த இரு சந்தேக நபர்களையும் தலா 50 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல மன்னார் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ற–56)

# வெடிக்காத மோட்டர் குண்டுகள் மீட்பு

தென்மராட்சி, ஓக.25

சாவகச்சேரி சரசாலை வடக்கு கொம்பிக்குளம் மயானத்தை அண்டியுள்ள பகுதியில் வெடிக்காத நிலையில் இரண்டு மோட்டார் குண்டுகள் நேற்றுமுன்தினம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் ஆடுகளைச் தேடிச் சென்ற நபர் வெடிக்காத நிலை யில் இரு குண்டுகள் காணப்பட்டதையடுத்து சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் குண்டுகள் காணப்பட்ட இடத்தில் பாதுகாப்பை ஏற்படுத்தி படையினரின் வெடிப் பொருள்கள் அகற்றும் பிரிவினர் மூலம் குண்டுகளை அப்புறப்படுத்த அனுமதிக்குமாறு சாவகச்சேரி நீதி மன்றில் அறிக்கையிட்டுள்ளனர்.

நீதிவானின் பணிப்பின் பிரகாரம் படையினரால் குண்டுகள் அப்புறப் படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ற–9)

# சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மட்டக்களப்புக்கு நேற்று பயணம்



கொழும்பு, ஓக.25

சுகாதார அமைச்சு அதிகாரிகள் குழு ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்புக்குச் சென்றுள்ளது.

இக்குழுவினர் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் ஆரோக்கிய நட்பு நிலையம் மற்றும் இருதய கிளினிக் ஆகியவற்றின் வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தையும் பார்வையிட்டனர்.

அதன் பின்னர் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில், ஆரோக்கிய நட்பு நிலையத்தினதும் , இருதய கிளினிக் பிரிவினதும் குறை நிறைகளைக் கேட்டறிந்ததுடன் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் அறிந்து கொண்டனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பி.ஜி. மஹிபால தலைமையிலான குழுவினருட னான இச்சந்திப்பில், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். முருகானந்தம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். சதுர்முகம் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(ற)

# மண்ணுக்குள் புதையுண்டவர்கள் காப்பாற்றப்பட்டனர்

இயந்திரம் மூலம் குழாய்க் கிணறு அமைத்துக் கொண்டிருந்தவேளை திடீரென மண் இறங்கியதால் குழாய்க் கிணறு அமைக்கும் பணியில் ஈடுபட்ட மூவர் மண்ணுக்குள் புதையுண்டனர். அங்கு நின்றவர்கள் உடனடியாகச் செயற்பட்டதால் மூவரும் உயிருடன் காப்பாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருசுவில் விடத்தற்பளையில் நடந்துள்ளது.

அப்பகுதியில் உள்ள காணியொன்றில் இயந்திரம் மூலம் குழாய்க் கிணறு அமைக்கும் பணி இடம்பெற்ற வேளையில் கிணறு அமைத்த பகுதியில் திடீரென மண் இடிந்து உள்ளே சென்றுள்ளது. அதன்போது அருகே நின்ற மூவர் 6 அடி ஆழமான குழிக்கள் வீழ்ந்துள்ளனர். உடன் நின்றவர்கள் உடனடியாகச் செயற்பட்டதால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ற–9)

# வீட்டுக்குள் புகுந்து திருட்டு: 68 வயது மூதாட்டிக்கு மறியல்

தென்மராட்சி, ஓக.25

தேர்தல் தினத்தன்று வீட்டின் ஜன்னல் வழியாக உள்நுழைந்து 2 லட்சத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணத்தைத் திருடினார் என்று சந்தேகிக்கப்படும் 68 வயது மூதாட்டி உட்பட மூவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி வான் உத்தரவிட்டார்.

கடந்த 17 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் படித்த மகளிர் திட்டத்தில் உள்ள வீடொன்றில் தேர்தல் முடிவுகளை வானொலியில் கேட்டு விட்டு படுத்தவர்களின் வீட்டின் அறையின் ஜன்னல் ஊடாக உள்நுழைந்து அங்குள்ள அலுமாரியில் காணப்பட்ட தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

திருட்டுப் போன விடயம் மறுநாள் காலையிலே தெரியவந்ததும் இது சம்பந்தமாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அதே பகுதியைச் சேர்ந்த 68 வயது மூதாட்டி உட்பட மூவரைப் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் நீதிவான் முன்னி லையில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மூவரையும் செப்ரெம்பர் இரண் டாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ற–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்துணவுப் பொதி விவகாரம்: விசாரணை நடத்துமாறு கடிதம்

வலி.வடக்கு, ஓக. 25

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கடந்த மாதம் கர்ப்பிணிகளுக்கு சத்துணவுப் பொதி வழங்குவதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குழறுபடி தொடர்பில் சங்க முகாமையாளர் மற்றும் கிளை முகாமையாளரை இடைநிறுத்தி விசாரணை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளரால் சங்கப் பணிப்பாளர் சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு கடந்த வாரம் சங்கப் பணிப்பாளர் சபைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் பணிப்பாளர் சபையின் ஓர் உறுப்பினர் மட்டுமே சமுகமளித்திருந்தார் என்றும் அதனால் முடிவேதும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் பணிப்பாளர் சபையின் அடுத்த கூட்டத்தில் இது தொடர்பில் காத்திரமான முடிவை எடுக்க முடி யும் என்று பணிப்பாளர் சபை உறுப் பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (ற-86)

# வவுனியா முகாம் மக்களை குடிமர்த்துவதற்கு நடவடிக்கை

## வடக்கு அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, ஓக.25

வவுனியாவில் உள்ள இரு நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வட மாகாண சுகாதார, புனர்வாழ்வு, சமூக சேவைகள் அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள வட மாகாண சுகாதார அமைச்சின் உப அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது அமைச்சின் கீழ் சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக சேவைகள், புனர்வாழ்வு, பெண்கள் விவகாரம், சிறுவர் நன்னடத்தையும் பராமரிப்பும் உட்பட 6 திணைக்களங்கள் செயற்படுகின்றன.

2015 ஆம் ஆண்டுக்குரிய நிதியில் சுமார் 53 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அதில் 40 மில்லியன் ரூபா புனர்வாழ்வுக்கும் 12 மில்லியன் ரூபா பெண்கள் அபிவிருத்திக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் மறுவாழ்வுக்கு அல்லது வாழ்வாதாரத்துக்குரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், புனர்வாழ்வுத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் அவசரமானது என கருதப்படும் திட்டங்களாக- வவுனியா மாவட்டத்திலும், யாழ். மாவட்டத்திலும் நீண்ட காலமாக மக்கள் தங்கியிருக்கின்ற முகாம்களை மழை காலத்துக்கு முன்னர் செப்பனிட்டு கூரைகளை திருத்தி மழைக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் மாற்றும் தற்காலிக வேலையையும் முன்னெடுத்துள்ளோம்.

அதேவேளை எமது மாகாணத்தில் பலருக்கு மலசலகூடம் இல்லாமை பிரச்சினை உள்ளது. எனவே மலசலகூடங்களை அமைக்கும் பணியையும் இந்த நிதியின் ஊடாக மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். அதில் விசேட தேவைக்குட்பட்ட - சாதாரண மலசல கூடங்களை பாவிக்க முடியாதவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும். அந்த நிதியில் விசேட தேவைக்குரியவர்களுக்கான மலசல கூடத்தை அமைக்க முடியும்.

அதேவேளை சுகாதார அமைச்சின் ஊடாகவும் 12 மில்லியன் ரூபாவை மலசலகூடங்கள் அமைப்பதற்காக ஒதுக்கியுள்ளோம். அதற்கான விண்ணப்பப்படிவத்தை ஒவ்வொருவரும் தனது பகுதிக்குரிய பொது சுகாதார பரிசோதகரிடம் சென்று பெற்று நிரப்பிக் கொடுத்து விண்ணப்பிக்க முடியும் - என்றார். (ற-402)

# இசைப்பேருரை

யாழ்ப்பாணம், ஓக.25

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெய்வீகத்தொடர் இசைப் பேருரை இடம்பெறவுள்ளது என்று நல்லூர் சைவமகா சபையினர் தெரிவித்துள்ளனர்.

முப்பதாவது வருடமாக நடைபெறும் இந்த நிகழ்வு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 28ஆம் திகதி முதல் தினமும் மாலை 6.30மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா கந்தபுராண சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தவுள்ளதாக நல்லூர் சைவமகா சபையினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

## மரண அறிவித்தல்

### திருமதி கலாநிதி பரமேஸ்வரன்



சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாநிதி பரமேஸ்வரன் 24.08.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் அரியகுட்டி - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரமேஸ்வரனின் அன்பு மனைவியும் ஜெயகாந்தன் (பிரதேச சபை -கரைச்சி), கலாவாணி, கலை யரசி, கலைச்செல்வி, தயாபரன் (வீதி அபிவிருத்தி அதிகார சபை -பருத்தித்துறை),தினேஸ்குமார் (வனவிலங்கு திணைக்களம் - மடு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுஜிதா, காலஞ்சென்ற குகன், ஜெகதீசன் (ப.நோ.கூ.ச.நீர்வேலி), ரமேஸ்வரன் (சாரதி - இ.போ.ச) ஆகியோரின் அன்பு மாமியும் கருணாநிதி, ஆனந்த நிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருந்தவநேசன், வைத்திய நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அக்ஷயன், பிரஜித், மதுமிரா, சஜானன், அபிஷனா, கௌசி கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(24.08.2015 ) திங்கட் கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கிந்துசிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
ப.ஜெயகாந்தன் (மகன்)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் இந்திரா சபாரத்தினம்



குழந்தையாக
10.02.1950

தெய்வமாக
25.08.2012

பூத்துக் குலுங்கும் முல்லைச் சிரிப்பை
நேரில் கேட்டு ஆண்டுகள் மூன்று!
ஆனாலும் அக்கா! ஆச்சரியம் ஒன்று!
நாங்கள் நினைத்த போதெல்லாம் உங்கள்
சிரித்த முகம் எங்கள் முன் தோன்றிடுதே!
இறைவன் எமக்குத் தந்த வரம்.......
இறுதி வரைக்கும் தொடர்ந்து வரும்.....

இல. 5 கல்லடி வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
" திலக வாசம்
தபாலக வீதி, சாவகச்சேரி.

# பண்டாரவன்னியன் நினைவுநாள் நிகழ்வு

முல்லைத்தீவு, ஓக.25

மாவீரன் பண்டாரவன்னியன் நினைவு நாள் இன்று செவ்வாய்க்கிழமை வவுனியாவில் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வுகள் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதல் நிகழ்வாக காலை 8 மணிக்கு வவுனியா நகரில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்படும். அதனைத் தொடர்ந்து மு.ப. 9.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெறும்.

தொடர்பியல் வித்தகரும், மூத்த ஊடகவியலாளருமான அருணா செல்லத்துரையின் பண்டாரவன்னியன் நினைவுப் பேருரையும், கவிஞர் குரும்பையூர் தா.ஜங்கரனின் தலைமையில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வழங்கும் கவியரங்கமும் நடைபெறவுள்ளன. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்க ளாக வன்னி நாடாளு மன்ற உறுப் பினர்களும், வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-102)

# நல்லூர் ஆலயச் சூழலில் புனிதத் தன்மையைப் பேணுக

## யாழ்.இந்து சமயப் பேரவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக.25

பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வளாகத்தில் புனிதத் தன்மையை பேணுமாறு யாழ். இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவம் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தக் காலப்பகுதியில் மக்கள் அதிகமாக வருவதால் அதனைப் பயன்படுத்தி சில தீயசக்திகள் புனிதத்தன்மையைக் குழப்பி வருகின்றன என்று அறியக் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்துள்ள சிலரும் இங்குள்ள சிலரும் இணைந்து ஆண், பெண் வேறுபாடு இன்றி அரைக்காற்சட்டை அணிந்து கொண்டு மதுபோதையில் காடைச்செயல்களில் ஈடுபடுவதாகவும் பலர் தம்மிடம் முறையிட்டுள்ளனர் எனவும் அவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுவோர் உடனடியாக அவற்றைக் கைவிட்டு இந்துக்களின் புனித வழிபாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

நல்லூர் சூழலில் உள்ள சிலர் கவனவீனமாக தங்களின் நாய்களை வீட்டு வளவுக்கு வெளியே திறந்து விடுவதால் நாய்களால் வீதிகள் அசிங்கமாக்கப்படுவதுடன் பல அசௌகரியங்களும் ஏற்படுகின்றன எனவும் தயவு செய்து வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்குமாறும், இந்த வேண்டுகோளை மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுப்பார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-ரி3)

# பலசரக்கு கடைக்கு பெற்றோல் குண்டு, ஒயில் வீச்சு

யாழ்ப்பாணம், ஓக. 25

தாவடியிலுள்ள பலசரக்குக் கடை ஒன்றினுள் விசமிகளால் பெற்றோல் குண்டு வீசப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் கழிவுஒயில் ஊற்றப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாவடி பாடசாலை வீதியிலுள்ள கடையொன்றினுள்ளேயே இவ்வாறு கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை குறித்த கடைக்கு பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது. அதனால் சேதம் ஏற்பட்டிருந்தது. அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அது பற்றிய விசாரணைக்காகப் பொலிஸ் நிலையத்துக்கு 5 தடவைகள் சென்றபோதும் ஆள்கள் இல்லை என்றுகூறி திருப்பி அனுப்பப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் கடை திறக்கச் சென்றபோது கடையின் முன்பாக இனந்தெரியாதோரால் கழிவுஒயில் ஊற்றப் பட்டு அசிங்கப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# அமிர்தலிங்கத்தின் பிறந்தநாள் நிகழ்வு

முன்னாள் எதிர்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் 87 ஆவது பிறந்தநாள் நிகழ்வு நாளை புதன்கிழமை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் காங்கேசன்துறை தொகுதி காரியாலயத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன் போது அமிர்தலிங்கம் எழுதிய நூல் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5)

# உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி. நூற்றாண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நடைபெறவுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

அங்கு கடமையாற்றிய அதிபர்,ஆசிரியர்களை அதன்போது கௌரவிப்பதற்கு பாடசாலை சமூகம் தீர்மானித்துள்ளது. [illegible] விபரங்களை இந்த மாத இறுதிக்குள் [illegible] அனுப்பி வைக்குமாறும், பழைய மாணவர்களை தொடர்பு கொள்ளுமாறும் பாடசாலை அதிபர் எம்.விக்[illegible] (ற-ரி5)

# சிற்பத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 25

வவுனியா வெளிக்குளம் அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தின் புதிய சிற்பத்தேர் வெள்ளோட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப 11.30 தொடக்கம் 12.30 வரை நடைபெற வுள்ளது. இந்த ஆலயத்தின் மஹோற்சவத் திரு விழா இடம்பெற்று வருகின்றது. நாளை மறுதினம் தேர்த் திருவிழாவும் 29ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது என்று ஆலய [illegible] தெரிவித்துள்ளனர்.(ற-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் ஒருவர் இந்தியாவில் கைது

## குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம் ஓக 25

ஈழத் தமிழர் ஒருவர் போலி நாணயத்தாள் மோசடி, போதை வஸ்துக் கடத்தல் மற்றும் ஆட்கடத்தலுடன் தொடர்புபட்டுள்ள குற்றச்சாட்டில் ராமநாதபுரம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

10 மாதங்கள் எடுக்கப்பட்ட பொலிஸ் நடவடிக்கையில், ஈழத்தமிழர் ஒருவர் உட்பட 4 பேரைக் கொண்ட கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது. பாம்பனை சேர்ந்த யாசர் அரபாத் (வயது – 32), டி. ரொபெர்ட் (வயது – 32), இராமேஸ்வரத்தை சேர்ந்த எம்.முருகன் (வயது – 27), இலங்கையை சேர்ந்த மார்கஸ் என்ற சிவா (வயது – 30) என்பவர்களே இவ்விதம் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இந்தக் கும்பலுக்கு மூளையாக ஈழத் தமிழர் சிவா செயற்பட்டுள்ளார் எனப் பொலிசார் தெரிவித்தனர். தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கும்பல் கடந்த ஜூலை வரை கஞ்சா கடத்தல், ஆட்கடத்தல் போன்ற குற்றச் செயலில் ஈடுபட்டு வந்துள்ளது. இலங்கைக்கு 36 கிலோ கிராம் கஞ்சா கடத்தப்பட்டு, அதற்குப் பதிலாக ரூ 9.5 லட்சம் போலி நாணயத்தாள் அமலன் என்பவரால் அனுப்பப்பட்டுள்ளது.

துணை பொலிஸ் கண்காணிப்பாளர் கே.மகேஸ்வரி அமலனைக் கைது செய்யக் கோரியுள்ளார்.

அவர்களிடமிருந்து 52 ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டன. மிகத்தரமான முறையில் போலி நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன என்றும், தடயவியல் சோதனைக்காக சென்னையில் உள்ள தடய அறிவியல் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இவை இலங்கையில் அச்சிடப்பட்டவையா அல்லது பாகிஸ்தானில் அச்சிடப்பட்டவையா என தெரியவில்லை எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

(த–ரி4)

# சனசமூக நிலையங்களுக்கு மீண்டும் நன்கொடை நிதி

மானிப்பாய், ஓக.25

கடந்த நான்கு ஆண்டுகளாக வழங்கப்படாதிருந்த சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதி, யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

வடமாகாணத்தில் 2011 ஆம் ஆண்டு முதல் யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை நிதி வழங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பாக முன்னாள் தவிசாளர்கள் இணைந்து வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

அதனையடுத்து யாழ்.குடாநாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து சனசமூக நிலையங்களுக்கும் நன்கொடை நிதி வழங்கி அவற்றின் இயங்கு நிலையை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக சகல சனசமூக நிலையங்களுக்கும் படிவம் வழங்கி விவரம் திரட்டப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–50)

# திரவிய ஸ்நபன அபிஷேகம்

யாழ்.இந்து சமயப்பேரவை வளாகத்தில் உள்ள ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானுக்கு விசேட திரவிய ஸ்நபன அபிஷேகம் 28ஆம் திகதிவெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு சிதம்பர மகாஷேத்திர சிவாச்சாரியார் வேத சிவாகம வித்யா சாகரம் சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீக்ஷிதர் அவர்களால் நிகழ்த்தி வைக்கப்படவுள்ளது.

(ற–ரி3)

# வறட்சியால் பொலனறுவையில் விவசாய நடவடிக்கை பாதிப்பு

பொலனறுவை மாவட்டத்திலுள்ள சகல பிரதான குளங்களினதும் நீர் மட்டங்கள் வறட்சியால் குறைவடைந்துள்ளன. பராக்கிரம சமுத்திரம், கிரிதளை, மின்னேரியா மற்றும் கவுடுல்ல ஆகிய குளங்களிலே இந்த நீர் மட்டங்கள் குறைவடைந்துள்ளன.

இந்த நீர் மட்டங்கள் குறைவடைந்துள்ளதால் பராக்கிரம சமுத்திரக் குளத்திலிருந்து நெற் செய்கை பண்ணபடும் 70, 500 ஏக்கர் விவசாய நிலங்களும், கவுடுல்ல குளத்திலிருந்து நெற் செய்கை பண்ணப்படும் 38, 500 ஏக்கர் விவசாய நிலங்களும், மின்னேரியா குளத்திலிருந்து நெற்செய்கை பண்ணப்படும் 44, 526 ஏக்கர் விவசாய நிலங்களும், கிரிதளை குளத்திலிருந்து நெற் செய்கை பண்ணப்படும் 7, 320 ஏக்கர் விவசாய நிலங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

இந்தக் குளங்களின் வறட்சியினால் இதுவரையில் பராக்கிரம சமுத்திரக் குளத்தின் நீர் மட்டம் 48 வீதமும், கிரிதளை குளத்தின் நீர் மட்டம் 26 வீதமும், மின்னேரியாக் குளத்தின் நீர் மட்டம் 36 வீதமும் கவுடுள்ள குளத்தின் நீர் மட்டம் 23 வீமுதம் குறைவடைந்துள்ளதாக தேசிய தகவல் கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பொலனறுவை மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மெதிரிகிரிய, குசும்பொகுன, கொடபொத்த ஆகிய பிரதேசங்களே இதன்போது கணிசமான அளவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நீரின்மை காரணமாகவே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(த)


**கடை, காணி விற்பனைக்கு**

இல. 274, காங்கேசன்துறை வீதியிலுள்ள 5.9 குளி கடை ஒன்றும் மூர்வீதி,வண்ணார் பண்ணை யில் ஒரு பரப்பு காணி வீடு, கிணற்றுடனும் மூர்வீதி, வண்ணார் பண்ணையில் ஒரு பரப்பும் 14 குளியும் வீடு கிணற்றுடனும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு : 021 490 7886

**உணவகம் வாடகைக்கு**

சுன்னாகம் புகையிரத நிலையம் வைரவர் கோயிலடி முன்பாக அமைந்துள்ள உணவகம் உணவகத்துக்கு தேவையான சமையல் பாத்திரங்கள், தளபாடங்கள், வியாபார அனுமதிப்பத்திரம் என்பவற்றுடன் (நிலம் மாபிள் பதிக்கப்பட்டது) உடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு : 076 704 3186


# வாழைக்குலை திருடர்கள் கைவரிசை மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 25

வலி.கிழக்கு பிரதேசத்தில் உள்ள வாழைத்தோட்டங்களில் வாழைக்குலைகளைக் களவாடிச் செல்லும் திருடர்களின் கைவரிசை மீண்டும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நள்ளிரவு வேளையில் தோட்டங்களுக்குச் செல்லும் திருடர்கள் அங்குள்ள வாழைக்குலைகளை மிகவும் தந்திரமாக வெட்டிச் செல்கின்றனர் என்றும் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் கடந்த சில மாதங் களாக நடைபெற்று வருகின்றன என்றும் விவசாயிகள் கூறுகின்றனர். திருட்டைத்தடுக்கும் முகமாக தோட்டங்களில் விவசாயிகள் இரவில் காவல் கடமைகளில் ஈடுபட்டும் வந்துள்ளனர்.

தற்போது வாழைப் பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதை அடுத்து வாழைப்பழத்துக்கு பற்றாக்குறையும் தட்டுப்பாடும் நிலவி வருகின்றது. இந்த விலை அதிகரிப்பை அடுத்து திருடர்கள் மீண்டும் இந்த வாழைக்குலைத் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட ஆரம்பித்துள்ளனர். கோப்பாய், சிறுப்பிட்டி, நவக்கிரி, நீர்வேலி, உரும்பிராய், புன்னாலைக் கட்டுவன் போன்ற பகுதிகளில் உள்ள தோட்டங்களிலேயே கூடுதலாக வாழைக்குலைகள் களவாடல் இடம்பெறுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–17)


**வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி**

**கோப்பாய் எரிபொருள் நிலையத்தின் அலுமினிய வேலைகள் மற்றும் கண்ணாடி பொருத்துதல்**

மேற்படி நிலையத்தின் வேலைக்கு பொருத்தமானவர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பம் கோரப் படுகிறது. விண்ணப்பங்களை தலைமைக்கந்தோரில் வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி: 10.09.2015 ஆகும்.

(13.08.2015ஆம் திகதிய இயக்குநர்சபை கட்டளைப்படி)

பொது முகாமையாளர்
வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.

**காணி விற்பனைக்கு**

பலாலிவீதி,தபால் பெட்டி சந்திக்கருகில் நி.பர. 2 குளி 12.37 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
077 977 3375, 0047 400 42067

**CAR FOR RENT**




**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா**

**மூத்தோர் கௌரவிப்பு**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கல்லூரியில் இருந்து இளைப்பாறிய அதிபர்கள், பிரதிஅதிபர்கள், உபஅதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கு முகமாகவும்

எமது கல்லூரியில் கற்று 75 வயதைத்தாண்டிய பழைய மாணவர்களின் சேவைகளையும் கௌரவிக்கும் முகமாகவும்

125 ஆவது ஆண்டின் நிறைவு விழாவில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றினை நடத்த எண்ணியுள்ளோம். ஆகவே தங்களது பெயர் விவரங்களை உடனடியாக எமது கல்லூரியின் பிரதி அதிபர் ந.பரமேஸ்வரன் அவர்களிடம் நேரடியாகவோ அன்றேல் தபால் மூலமாகவோ02.09.2015 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றேன்.

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்.




**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்(ஹரோ, UK) இல் பணியாற்ற**

**ஆலய சிவாச்சாரியார்கள் தேவை**

**தகைமைகள்:** விண்ணப்பதாரர் சிவாச்சாரியார் (குருக்கள்) பட்டம் பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்

**கடமைகள்:** ஆகம விதிப்படி ஆலயத்தில் பூஜை செய்தல்.

**வேதனம்:** விண்ணப்பதாரர்களின் சிறப்புத் தகைமைகளை கவனத்தில் கொண்டு வேதனம் நிர்ணயம் செய்வதுடன், அடியார்கள் வழங்கும் தட்சணை, பங்கிட்டு வழங் கப்படும்.

தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 04.09.2015

விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

அனுப்ப வேண்டிய விலாசம்:
வி.சச்சிதானந்தன்
366, கண்டி வீதி, அரியாலை
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வவுனியா


இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள ஒரு நகரம் வவுனியா ஆகும். இது வவுனியா மாவட்டத்தின் தலை நகரமும் ஆகும். இதன் எல்லைகளாக மன்னார், முல்லைத்தீவு, அநுராதபுரம், திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ளன. இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நடந்த உள்நாட்டுப் போரினால் மக்கள் இடம் பெயர்ந்து இந்தப்பகுதியில் குடியேறினார்கள். இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் மிகவும் வளர்ச்சியடைந்த நகரமாக இது அமைந்துள்ளது. ஈழப் போரின் போது வன்னிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் பல்லாயிரக்கணக்கானோர் இந்த மாவட்டத்திலேயே உள்ளனர்.

வவுனியாவில் நான்கு மதங்களுக்குமான வழிபாட்டுத் தலங்கள் உள்ளன.





# வர்ணம் தீட்டலாம் வாங்க



# திருப்தி இல்லாத எலி

ஒரு நகரத்தில் மந்திர, தந்திரம் அறிந்த ஒரு சாமியார் வசித்து வந்தார். அவரிடம் ஒரு எலி வந்தது. அவரைப் பார்த்து, மகாத்மாவே, எனக்குப் பூனைகளைக் கண்டால் மிகவும் பயமாக இருக்கிறது. அதனால் எனது வளையை விட்டு என்னால் வெளியே வர முடியவில்லை. தயவு செய்து என் மீது கருணை வைத்து என்னைப் பூனையாக மாற்றி விடுங்கள் அப்போதுதான் நான் நிம்மதியாக வெளியே சுற்ற முடியும் என்றது.

எலி கூறியதைக் கேட்டவுடன், சாமியாருக்கு எலி மீது இரக்கம் ஏற்பட்டது. அதனால் தன்னுடைய மந்திர சக்தியினால் அந்த எலியைப் பூனையாக மாற்றிவிட்டார். பூனையாக மாறிய அந்த எலி, சாமியாருக்கு நன்றி கூறிவிட்டு மகிழ்ச்சியாகச் சென்றது.


சில நாள்களுக்குப் பிறகு, பூனையாக மாறிய அந்த எலி, சாமியாரிடம் வந்து, எனக்கு இப்போது பூனைகளைக் கண்டால் பயமில்லை. ஆனால், நாய்கள் மிகவும் தொல்லை தருகின்றன. நாய்களைப் பார்த்தால்தான் பயமாக இருக்கிறது. எனவே என்னை நாயாக மாற்றி விடுங்கள் என்றது. உடனே சாமியார் அதை நாயாக மாற்றினார். சில நாள்களுக்குப் பிறகு நாயாக மாறிய அந்த எலி, மீண்டும் சாமியாரிடம் வந்து, சுவாமி, நான் நாயாக இருந்தாலும் காட்டுக்குச் செல்ல முடியவில்லை.



காரணம். அங்கே ஒரு பயங்கரமான கொடிய சிங்கம் வசிக்கிறது. அதைப் பார்த்தால் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. அத னால், என் மேல் கருணை வைத்து நீங்கள் என்னையும் ஒரு சிங்கமாக மாற்றிவிட்டால், உங்களுக்குப் புண்ணியமாகப் போகும் என்றது. சாமியார் இந்த முறை விருப்பமில்லாமலேயே நாயாக இருந்த அந்த எலியைச் சிங் கமாக மாற்றினார். சிங்கமாக மாறிய அந்த எலி கர்ஜித்துக் கொண்டே, காட்டுக்குள் சென்று விட்டது. சிங்கமாக மாறிய பிறகும் கூட அதற்கு திருப்தி ஏற்படவில்லை. அது மீண்டும் சாமியாரிடம் வந்து, சுவாமி, சொல்லப் போனால் காட்டில் நான் தான் மிகுந்த பலசாலியாக இருக்கிறேன். ஆனாலும் வேட்டையாடுபவர்களைக் கண் டால் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது.

நீங்களே சொல்லுங்கள்... இப்போது நான் என்ன செய்வது? என்று கூறி வருத்தப்பட்டது. எலிக்கு இருந்த சின்னச் சின்ன ஆசைகளை அறிந்த, அந்தச் சாமியார் மிகவும் சோர்ந்து போனார். சிங்கமாக இருந்த எலியை மீண்டும் பழைய படியே எலியாக மாற்றிவிட்டு, இனி, உனக்கு எதுவும் ஆகாது. உனக்குள்ளே எலியினுடைய ஆத்மாதான் இருக்கிறது. அதனால் நீ எலியாகவே இரு – என்றார். எலி பழையபடி தனது உருவத்தைப் பெற்றுக்கொண்டு, சாமியாரிடம் ஒன்றும் பேசாமல் அங்கிருந்து சென்றுவிட்டது. திருப்தி இல்லாதவர்கள் யாராக மாறினாலும், எங்கு இருந்தாலும் நிம்மதியாக வாழ முடியாது. போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து என்ற பழமொழிக்கு ஏற்ப வாழக் கற்றுக்கொண்டால், எமக்கு ஒருநாளும் துன்பம் இல்லை.

# மன இறுக்கத்தைத் தளர்த்த வழிகள்!



**1. சத்தான உணவைச் சாப்பிடுங்கள்**

கவனியுங்கள்... ருசியான உணவு என்று குறிப்பிடவில்லை.சத்தான, இயற்கையான உணவு வகைகளைச் சாப்பிடும் போது மூளை எப்போதும் சுறுசுறுப்பு நிலையிலேயே இயங்குகிறது. பதப்படுத்தப்பட்ட, ரின்களில் அடைக்கப்பட்ட உணவுகளைச் சாப்பிடும் போது உடல் ஒருவித மந்த நிலையை அடைகிறது. இதனால் நாம் செய்யும் செயல்களில் எமக்குத் திருப்தி ஏற்படுவதில்லை.

**2. நன்றாகத் தூங்குங்கள்**

நல்ல ஆழ்ந்த தூக்கம் அனைத்து மனிதர்களுக்கும் அவசியம். பகலில் நாம் செய்யும் வேலைகளால் களைப்புறும் உடல் உறுப்புக்கள் தூக்கத்தில் மட்டுமே ஒரு நிலை அடைகின்றன. தூக்கத்தில் மட்டுமே ஒரு பகுதி மூளை அவற்றைச் சரி செய்யும் பணியைச் செய்வதால் நல்ல தூக்கம் அவசியம். அது இல்லையேல் உடல் நலக் குறைவு நிச்சயம். இளைஞர்களுக்கு ஆறிலிருந்து எட்டுமணி நேரத் தூக்கம் அவசியம்.

**3. நடவுங்கள்! ஓடுங்கள்!**

தினமும் அதிகாலை எழுந்தவுடனோ அல்லது மென்மையான மாலை வேளைகளிலோ மெல்லோட்டம் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.அல்லது கைகால்களை வீசி விரைந்து நடக்கலாம். இது உங்கள் உடல் இறுக்கத்தைப் பெருமளவு தளர்த்தும். மனம் உற்சாகம் பெறும். ஆரம்பத்தில் அதிகாலை எழுந்ததும், உடற்பயிற்சிக்குச் செல்லவேண்டுமா? எனத் தோன்று வதும் இயல்பு. பத்து நாள்கள் விடாமல் சென்று பாருங்கள். 40 வயது உடையவர் 20 வயது இளைஞனைப் போல் உற்சாகமாக வேலை செய்வீர்கள்.

**4. ஓய்வெடுங்கள்**

பணியிடையே அவ்வப்போது ஓய்வெடுங்கள். ஓய்வெடுத்தல என்பது வேலையை நிறுத்திவிட்டு அரட்டை அடிப்பதல்ல. கண்களை மூடி நன்றாக மூச்சை ஆழ்ந்து இழுத்து, சற்று நிறுத்தி, மெல்ல விடுங்கள். கடினமான, மிகக்கவனமான வேலைகளைச் செய்வோர் செய்யும் சுவாசம் ஆழ்ந்து இல்லாமல் மேம்போக்காக இருக்கும். அதனால் மூளைக்கு சரியாக பிராணவாயு செல்லாமல் தலைவலி, உடல் சோர்வு ஏற்படும். ஒரு மணிநேரக் கடின வேலைக்கு ஐந்து நிமிட ஓய்வு போதுமானது.

**5. சிரியுங்கள்**

மனம்விட்டுச் சிரியுங்கள். மனம்விட்டு என்பதற்கு ஆழ்ந்த அர்த்தமுண்டு. சிரிக்கும்போது மனதில் எந்தவித எண்ணங்களும் இருக்கக் கூடாது.சிரிக்கும்போது நன்றாக முழுமையாக ரசித்துச் சிரிக்க வேண்டும். வேறு ஏதேனும் சிந்தனை தோன்றி பட்டென்று சிரிப்பை நிறுத்தும்போது வேறு விளைவுகளை ஏற்படுத்தும். எப்பொழுதும் சிரித்து இன்முகம் காட்டுபவர் முகத்தில் ஒருவித பொலிவு இருக்கும். அது மற்றவர்களை உங்கள் பால் கவர்ந்திழுக்கும்.

**6. மனம் விட்டுப் பேசுங்கள்**

மனம் விட்டுப்பேசுங்கள், எல்லோரிடமும், எல்லா நேரமும், தெரிந்த எல்லாவற் றையும் பேசிக் கொண்டிருக்காதீர்கள். எவரிடம் பேசினால் உங்களுக்கு ஆன்ம திருப்தி கிடைக்கிறதோ, அவர்களிடம் மனம் விட்டுப் பேசுங்கள். அவர்கள் சொல்லும் வார்த்தை கள் உங்கள் மனதுக்குத் தெளிவைத் தரும்.

**7. உங்களால் மாற்ற முடியாதவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள்**

இந்த உலகத்தில் ஒருவரே எல்லாவற்றையும் தனது வாழ்நாளில் ஒழுங்குபடுத்திவிட இயலாது. அது தேவையில்லாததும் கூட. மலையைத் தலையால் முட்டி உடைக்க முடியாது. ஆனால் சிறு பாறையைப் பெயர்த்தெடுக்க இயலும். சமூகத்தில் உங்களால் முடிந்த சிறுசிறு வேலைகளைச் செய்யுங்கள்.மற்றவர்களையும் அதற்கு உற்சாகப்படுத்துங்கள்.

**8. தெளிவாகச் செய்யுங்கள்**

எந்தச் செயலைச் செய்தாலும் முழுமையான ஆத்மார்த்தமான ஈடுபாட்டுடன் செய்யுங்கள். வேண்டா வெறுப்பாக ஒரு வேலையைச் செய்வதை விட, அதைச்செய்யாமல் இருப்பதே மேல். எந்த ஒரு நிறுவனத்தில் வேலை செய்தாலும் செய்யும் வேலையை மட்டும் காதலியுங்கள், நிறுவனத்தை அல்ல. நிறுவனம் உங்களைத் தூக்கிவிடும் அல்லது கவிழ்த்துவிடும், ஆனால் ஈடுபாட்டுடன் காட்டிய வேலை திருப்தியை மட்டுமல்ல, நல்ல அனுபவத்தையும் தரும்.

**9. விளையாடுங்கள்**

உங்கள் நேர நிர்வாக அட்டவணையில் விளையாட்டுக்கும் இடம் ஒதுக்குங்கள். கோயிலுக்குச் செல்வதைவிட உதைப்பந்தாட்டம் விளையாடுவது மேலானது என விவேகானந்தரே கூறியிருக்கிறார். விளையாட்டு, உடலுக்கு மட்டுமல்ல மனதுக்கும் உற்சாகம் தரும்.

**10. மற்றவர்களையும் கவனியுங்கள்**

உங்கள் விருப்பங்களையும், உங்கள் தேவைகளையும் மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்காதீர்கள். அது மன உளைச்சலில் கொண்டு போய்விடும். எமது விருப்பு, வெறுப்புகளுக்கு எல்லைகளே கிடையாது. உங்களைச் சுற்றியிருப்பவர்களையும் கவனியுங்கள். எவருக்கேனும் உதவி தேவைப்பட்டால் தயங்காமல் செய்யுங்கள், பிரதி பயனை எதிர்பாராமல் உங்களுக்கே தெரியாமல் அது திரும்பி உங்களுக்குக் கிட்டும்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dropbox அறிமுகப்படுத்தும் புதிய வசதி

கிளவுட் ஸ்டோரேஜ் எனப்படும் ஒன்லைன் சேமிப்பு வசதியை வழங்கி வரும் Dropbox ஆனது தற்போது புதிய வசதி ஒன்றை பயனர்களுக்காக அறிமுகம் செய்துள்ளது. அதாவது இதுவரை காலமும் வீடியோ, புகைப்படங்கள், ஏனைய கோப்புக்களை மட்டும் சேமிக்கக்கூடிய வசதியை வழங்கி வந்ததுடன் முதன்முறையாக இணையத்தள முகவரிகளை (URLs) சேமிக்கக்கூடிய வசதியினை அறிமுகம் செய்துள்ளது.

அதிலும் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் இணைய முகவரியை அவசியம் எனின் Drag and Drop முறை மூலம் இலகுவாக சேமிக்கக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும். மேலும் இந்த வசதியை ஒன்லைன் மற்றும் டெக்ஸ்டாப் அப்பிளிக்கேஷன் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

# அதிரடி வசதிகளுடன் அறிமுகமாகவுள்ள HTC O2



சம்சுங் மற்றும் அப்பிள் நிறுவனங்களுக்கு போட்டியாக குறுகிய காலத்தில் வளர்ந்து வரும் HTC நிறுவனம் HTC O2 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியை அடுத்த வருடம் அறிமுகம் செய்யவுள்ளது.

Snapdragon 820 Processor இனைக் கொண்டதாக வடிவமைக்கப்படும் இந்தக் கைப்பேசியானது அன்ரோயிட் 6.0 இயங்குதளம் உட்பட பிரதான நினைவகமாக 4GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

மேலும், இதன் திரையானது 2560 x 1440 Pixel உடைய QHD தொழில்நுட்பத்தை கொண்டதாகவும், 3500mAh மின்கலம், 20 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமராவைக் கொண்டிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

# நாமகள் பாலர் பாடசாலை புதிய கட்டடத் திறப்பு விழா





தென்மராட்சி, ஓக.25

சாவகச்சேரி சங்கத்தானை நாமகள் பாலர் பாடசாலைக்கான கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

பாலர் பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் சங்கத்தானை மக்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மற்றும் பாலர் பாடசாலை நிறுவுநரின் மனைவியும் முன்னாள் இப் பாடசாலையின் ஆசிரியருமான திருமதி நா.தர்மலிங்கம் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 45 வருடங்களாக தனியார் கட்டடமொன்றில் இயங்கி வந்த பாலர் பாடசாலைக்கு சங்கத்தானையைச் சேர்ந்த தர்மதுரை கண்ணதாசன் என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் பாடசாலையின் பழைய மாணவர்களும் அந்தக் கிராம மக்களும் இணைந்து வழங்கிய நிதிப் பங்களிப்பால் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலை நிறுவுநரும் பாலர் பாடசாலையின் முன்னாள் ஆசிரியையுமான திருமதி நா.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன், பாடசாலையின் பழைய மாணவனும் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவருமான தனபாலசிங்கம் சதீஸ்குமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாகவும் பிரிவு ஓய்வுநிலை கிராம அலுவலர்.சி.க. வேலாயுதபிள்ளை, பாடசாலையின் பழைய மாணவனும் தற்போது புலம்பெயர் நாடொன்றில் வசிக்கும் த.பரமானந்தம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ற-9)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் தத்தளித்த 4,400 பேர் மீட்பு

## இத்தாலி கடற்படை தகவல்



ரோம்,ஓக.25

லிபியாவிலிருந்து புலம் பெயர்ந்து, ஐரோப்பாவுக்குச் சென்ற வேளை நேற்று முன்தினம் கடலில் தத்தளித்த 4 ஆயிரத்து 400 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக இத்தாலிக் கடற்படை தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கானவர்கள் லிபியாவில் இருந்து கடத்தல்காரர்களின் படகுகள் மூலம் சென்றுள்ளனர். அவர்கள் இத்தாலி அருகே மத்திய தரைக்கடலில் தத்தளித்தனர். மிகவும் ஆபத்தான நிலையில் சுமார் 12 படகுகளில் இருந்தவர்களிடமிருந்து உதவி கேட்டு அழைப்பு வந்தது என்றும், இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுப்பட்டு 4 ஆயிரத்து 400 பேரை பத்திரமாக மீட்டதாக இத்தாலிக் கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்கா மற்றும் கிழக்கு ஆசியா நாடுகளில் நடைபெறும் உள்நாட்டு போர் மற்றும் வறுமை காரணமாக பலர் பிழைப்புத் தேடி ஐரோப்பாவுக்கு ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொள்ளும் போது விபத்தில் சிக்கி உயிரிழந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தற்கொலை செய்பவரை அறிய குருதிப் பரிசோதனை ஆராய்ச்சி

நியூயோர்க்,ஓக.25

உலகெங்கிலும், பல்வேறு காரணங்களால் வருடந்தோறும் லட்சக்கணக்கானோர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். இதனை முற்றிலும் தடுக்கும் நோக்கில் அமெரிக்கப் பல்கலைக்கழகம், தற்கொலை செய்துகொள்ள எண்ணுவோரின் மன ஓட்டத்தை முன் கூட்டியே அறிய குருதிப் பரிசோதனை செய்வது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவின் இண்டியானா பல்கலைக் கழகத்துக்குட்பட்ட உளவியல் ஆராய்ச்சி நிலையத்தின் நரம்பியல் துறை தலைவர் நிக்யூலெஸ்க்யூ தலைமையிலான குழுவினர் கடந்த மூன்று வருடங்களாக அதிக ஆண்களிடம் நடத்திய ஆய்வில் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்தில் உள்ளவர்களின் மனநிலையை குருதிப் பரிசோதனை மூலமாக முன் கூட்டியே தெரிந்து கொள்ளலாம் எனக் கண்டறிந்துள்ளனர்.

இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்களின் மனநிலை குறித்த கேள்விகள் தொடர்பாக அளிக்கப்பட்ட விடையில் தற்கொலை செய்ய நினைத்தவர்களைப் பற்றி 80 சதவிகிதம் சரியான முடிவுகள் கிடைத்ததாக இந்தக் குழு தெரிவித்துள்ளது.

எவருமே தற்கொலை எண்ணம் இருப்பதைப் பற்றி நேரடியாக பகிர்ந்து கொள்ள விரும்ப மாட்டார்கள் என்பதால் அவர்களிடம் தற்கொலை தொடர்பான நேரடிக் கேள்விகள் எதுவும் கேட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களது ஸ்மார்ட்போன்களில், இதற்கென உருவாக்கப்பட்ட செயலியின் உதவியாலும் இது ஊர்ஜிதமானது. இந்த மூன்றடுக்கு முறையில் நடந்த பரிசோதனைகளில் 92 சதவிகிதம் துல்லியமாக முடிவு கிடைத்துள்ளது. இவ்வாறு தற்கொலை எண்ணம் மேலோங்கி இருப்பது முன்னரே கண்டறியப்படும்போது, அவர்களுக்கு முறையான உள ஆலோசனை வழங்க முடியும். அதன்மூலம் தற்கொலைகள் தடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆய்வு தற்போது ஆண்களிடம் மட்டுமே நடத்தப்பட்டுள்ளது. இனி, வருங்காலத்தில் இதே ஆய்வு, பெண்களிடமும் நடத்தப்பட்டு அதன் முடிவுகளும் சாதகமாக வந்தால், உலகில் தற்கொலை செய்து கொள்ள எண்ணுவோரின் எண்ணிக்கையை வெறும் குருதிப் பரிசோதனையின் மூலமாகவே பெருமளவு குறைக்க வாய்ப்பு உள்ளது என நிச்சயமாக நம்பலாம். (ஐ)



## அமெரிக்காவில் பெரும் வெடி விபத்து

வொஷிங்டன்,ஓக.25

ஜப்பான் நாட்டில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத்தில் தளபாடப்பகுதியில் பெரும் வெடி விபத்து ஏற்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் வெளியேறியுள்ளனர்.

ஜப்பான் நாட்டின் சகாமி பகுதியில் அமெரிக்க நாட்டின் முக்கிய இராணுவத் தளபாடப் பகுதியில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டதாக அந்தப்பகுதி மக்கள், பொலிஸார் மற்றும் தீயணைப்புப் படையினருக்கு தகவல் அளித்தனர்.

வெடி விபத்து நடந்த பகுதியில் இருந்து கரும்புகை எழுந்ததாகவும் பலமுறை வெடிச்சத்தம் கேட்டதாகவும் சுற்றுவட்டாரப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அந்தப்பகுதி எங்கும் வெடிமருந்து மணம் இருந்ததாகவும், 10 நிமிடங்களுக்கும் மேலாக அதை உணர்ந்ததாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். 500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அந்த இராணுவ தளபாடப்பகுதியில் வெடி விபத்து நிகழ்ந்தபோது 580 பேர் பணிபுரிந்து வந்ததாகக் கூறப்படுகிறது. முதற்கட்ட விசாரணையில், சேமிப்புப் கிட்டங்கியில் ஏற்பட்ட தீ விபத்துதான் இந்த வெடி விபத்துக்குக் காரணமென கூறப்படுகிறது. சேமிப்புப்கிட்டங்கியில் பெற்றோலியப் பொருள்கள் மற்றும் வெடி மருந்துகள் அதிக அளவில் இருந்ததாகக் கூறப்படுகிறது. கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் அந்தப்பகுதியில் 3 முறை வெடி விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கும் அதிகாரிகள், ஜப்பான் நாட்டிலுள்ள இடதுசாரி தீவிரவாதிகளுக்கு இந்த விபத்துகளில் பங்கிருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர். (ஐ)

## பல்மைரா நகரில் ஆலயத்தை தகர்த் ஐ.எஸ். தீவிரவாதிகள்

டமாஸ்கஸ், ஓக.25



சிரியாவில் வரலாற்றுச் சிறப்புமிக்கபல்மைராநகரிலில்ஆலயத்தை ஐ.எஸ்.தீவிரவாதிகள் தகர்த்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சிரியா, ஈராக்கில் பல்வேறு பகுதிகளைத் தங்களது வசம் கொண்டு வந்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறியாட்டம் தொடர்ந்து நீடித்து வருகிறது. ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் உலகநாடுகள் போரிட்டு வந்தபோதிலும் முன்னேற்றம் எதுவும் காணப்படாத நிலையேயுள்ளது. ஈராக்கில் அன்பார் மாகாணம் முழுவதையும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதில் தீவிரம் காட்டிய ஐ.எஸ். தீவிரவாதிகள், ஏறத்தாழ 18 மாதம் நடத்திய சண்டைக்குப் பின்னர் அந்த மாகாணத்தின் தலைநகரான ரமாடி நகரை கடந்த மே மாதம் கைப்பற்றினர். இது ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான அமெரிக்க கூட்டு படையினருக்கு பெருத்த பின்னடைவு என்று அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது. இதே போன்று ஈராக் சிரியா இடையே உள்ள கடைசி எல்லையையும் ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடித்து விட்டனர். அங்கிருந்து சிரிய அரசுப் படைகள் பின்வாங்கின.

சிரியாவில் பல்மைரா என்னும் வரலாற்று சிறப்புமிக்க நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடித்தது அமெரிக்க கூட்டுப்படைகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில் சிரியாவில் வரலாற்று சிறப்புமிக்க பல்மைரா நகரிலில் உள்ள ஆலயத்தை ஐ.எஸ்.தீவிரவாதிகள் தகர்த்துள்ளனர். ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆலயத்தை உடைப்பது என்பது இதுவே முதல் முறையானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எகிப்து சென்றடைந்தார் சுஷ்மா சுவராஜ்

கெய்ரோ,ஓக.25

எகிப்து மற்றும் ஜேர்மனி நாடுகளில் 4 நாள்கள் அரச முறைப் பயணம் மேற்கொள்வதற்காக டில்லியில் இருந்து புறப்பட்ட இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோவைச் சென்றடைந்துள்ளார். எகிப்தில் உள்ள இந்தியத்தூதர் சஞ்ஜய் பட்டாச்சார்யா அவருக்கு உற்சாக வரவேற்பளித்தார். எகிப்து ஜனாதிபதி அப்தெல் பாத் அல்சிசி அழைப்பை ஏற்று தலைநகர் கெய்ரோ சென்றுள்ள சுஷ்மா, அந்த நாட்டின் வெளியுறவு துறை அமைச்சர் சமே ஹசன் சவுக்கி மற்றும் செயலாளர் நாயகம் நபில் எல்அராபி ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.



ஆபிரிக்க கண்டத்தில் இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி நாடுகளில் எகிப்து மிக முக்கியமானது. கடந்த நிதியாண்டில் மட்டும் 4.76 மில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு இருநாடுகளுக்கும் இடையே வர்த்தகம் நடைபெற்றது.

எகிப்தில்சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு இன்று ஜேர்மனிக்குச் செல்லும் அவர் அங்கு தங்கி தலைநகர் பெர்லினில் அந்த நாட்டுவெளியுறவு துறை அமைச்சர் பிராங்க்வால்டர் ஸ்டெயின் மியர் மற்றும் தலைவர்களைச் சந்தித்து பேசவுள்ளார். இந்தப் பயணத்தின் போது தலைவர்கள் பலரையும் அவர் சந்திக்கவுள்ளார். புதிய ஒப்பந்தங்களும் கைஎழுத்தாகவுள்ளன. (ஐ)

## ஹங்கேரி நோக்கி அகதிகள் படையெடுப்பு

ஹங்கேரி,ஓக.25



கிரேக்கத்துடனான எல்லையை மசிடோனியா திறந்து விட்ட பின்னர் நூற்றுக்கணக்கான குடியேறிகள் அந்த நாட்டின் ஊடாக வேறு நாடுகளுக்கு வெளியேற ஆரம்பித்துள்ளனர். அவர்களில் அதிகளவானோர் சிரியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹங்கேரிக்குச் சென்ற பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் வடக்கு நாடுகளுக்கு பயணிக்கும் நோக்குடன், அவர்கள் செர்பியாவிலிருந்து ரயில்கள் மற்றும் பஸ்கள் மூலம் பயணிக்கின்றனர். மசிடோனியாவில் கடந்த வாரம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. மக்கள் கூட்டத்தைத் தடுப்பதற்கு எல்லைக் காவல் படையினர் கையெறி குண்டுகள், கண்ணீர்ப்புகை பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டிருந்தனர். ஆயிரக்கணக்கான மக்களைத் திறந்த வெளியில் வைத்திருப்பதாக மனித உரிமை அமைப்புக்கள் மசிடோனிய அரசை விமர்சித்திருந்தன. இந்த நிலையில் குடியேறிகள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் ஹங்கேரியின் எல்லையில் முள்வேலியை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனினும் நாளாந்தம் குறைந்தது இரண்டாயிரம் குடியேறிகள் ஹங்கேரியை சென்றடைகின்றமை குறிப்பிடத் தக்கது. (ஐ–ரி)



## கடலுக்கு அடியில் நகரம் கண்டு பிடிப்பு

கியூபா,ஓக.25

கியூபா கடற்கரை பகுதியில் கடலின் ஆழமான பகுதிகளில் ரோபார்ட் நீர் மூழ்கி கப்பல் மூலம் ஆய்வு நடத்திய போது கடலுக்கு அடியில் பிரமாண்டமான நகரம் ஒன்று இருப்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்து உறுதி செய்துள்ளனர். அந்தப் பண்டைய நகரத்தில் பல சிலைகளும், மாபெரும் பிரமிடுகளும் மற்றும் பல்வேறு கட்டடங்களும் இருப்பதை கண்டறிந்து உள்ளனர். அதிசயம் நிறைந்த இந்த நகரம் பெர்முடா முக்கோணம் பகுதியில் அமைந்து ள்ளது. கியூபா கடலுக்கு அடியில் உள்ள இந்த நகரம், கடல் மட்டம் உயர்ந்ததால் அழிந்த நகரமாகும். அந்த நிலப்பகுதியும் கடலுக்கு அடியில் மூழ்கி உள்ளது எனக் கூறப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து மக்களின் தலையைத் துண்டிப்பேன்

## ஐ.எஸ். தீவிரவாதி கொலை மிரட்டல்

லண்டன்,ஓக.25

பிணைக்கைதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் தலை துண்டித்து கொலை செய்கின்றனர். குறிப்பாக ஒரு தீவிரவாதி இந்தச் செயலில் ஈடுபடுத்தப்படுகிறார். முகத்தை மூடியிருந்ததால் அவர் யார் என்ற அடையாளம் தெரியாமல் இருந்தது. இந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் அவர் அடையாளம் காணப்பட்டார்.

இந்த நிலையில் அந்த நபர் பேசிய வீடியோ ஒன்று அண்மையில் வெளியானது. அதில், எனது பெயர் மொகமது எம்வாசி. நான் ஐ.எஸ். (கலிபா) தலை வருடன் மீண்டும் இங்கிலாந்து திரும்புவேன். முஸ்லிம் அல்லாத வர்களைத் தலை துண்டித்து கொலை செய்து தலைகளை அள்ளிச் செல்வேன்எனமிரட்டிப் பேசியுள்ளார்.அந்த வீடியோ 1 நிமிடம் 17 வினாடிகள் ஓடுகிறது. அதில் அந்த நபர் முகம் மற்றும் உடல் முழு வதும் மூடிய நிலையில் கறுப்பு அங்கி அணிந்துள்ளார்.

இந்த வீடியோ கடந்த 2 மாதங்களுக்கு முன்பு தென்மேற்கு சிரியாவில் எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மலேசியாவில் மீண்டும் எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு



கோலாலம்பூர்,ஓக.25

மலேசியா– தாய்லாந்து எல்லையில் 24 எலும்புக்கூடுகளை மலேசியப் பொலிஸார் கண்டுபிடித் துள்ளனர். கடந்த மே மாதம் மலேசிய எல்லைப் பகுதியில் 139 கல்லறைத் தளங்களும், 100 இற்கும் மேற்பட்ட எலும்புக் கூடுகளும், 28 கடத்தல் முகாம்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த நிலையில் மீண்டும் வடக்கு மலேசிய எல்லை மாநிலமான பெர்லிஸ்சில் 29 மனித எலும்புகூடுகள் மற்றும் கல்லறைத் தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கடந்த மே மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கல்லறைத் தளங்களுக்கு அருகில் தான் இந்த எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மியான்மரில் ரொஹிங்யா முஸ்லிம்கள் மீது அண்மைக்காலமாக தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

உயிருக்குப் பயந்து தப்பித்துவரும் இவர்கள், ஆட்கடத்தல் கும்பலிடம் சிக்கியும், பசியாலும் செத்து மடிகின்றனர். இந்த எலும்புக்கூடுகள் ரொஹிங்யா முஸ்லிம்களுடையதாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# எவரெஸ்ட் சிகரம் ஏற மீண்டும் அனுமதி



காத்மண்டு,ஓக.25

நேபாளத்தின் சுற்றுலா மற்றும் கலாசாரத்துறை அமைச்சகம் நிலநடுக்கத்துக்குப் பின்னர் தற் போது முதல்முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. நிலநடுக்கத்துக் குப் பின்னர் முதல்முறையாக இரண்டு ஜப்பானிய மலையேற்ற வீரர்கள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுகின்றனர். கடந்த ஏப்ரல் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 18 மலையேற்ற வீரர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மலையேற்றமே நேபாளத்தின் மிக முக்கிய வருமானமாக இருந்து வருகிறது. உலகிலுள்ள 8 ஆயிரம் மீற்றருக்கு அதிகமான உயரம் கொண்ட 14 சிகரங்களில் 8 சிகரங்களை நேபாளம் கொண்டுள்ளது. இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் எவரெஸ்ட் சிகரம் மட்டுமல்லாது, பிரபல மலையேற்றப் பாதையான லாங்டேங் டிரெக்கிங் பாதையையும் நிலநடுக்கம் அழித்துவிட்டது. இதனால், நேபாளத்தின் சுற்றுலா வருமானத்துக்கான எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. (ஐ)

# சவூதியில் முதல் முறையாக பெண்களுக்கு வாக்குரிமை



ரியாத்,ஓக.25

பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு வந்த சவூதி அரேபியாவில், முதன் முறையாக, நகராட்சித் தேர்தலில், பெண்கள் போட்டியிடவும், வாக்களிக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து, எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சவூதியின் மூன்றாவது நகராட்சி தேர்தலில், முதல் முறையாக பெண்களும் பங்களிக்கவுள்ளனர். அதற்காக மக்கா மற்றும் மதீனாவில் பெண் வாக்காளர் தங்களது விவரங்களை பதிவு செய்யும் பணி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரசின் இந்த முடிவை பெண்கள் அமைப்பினரும் சமூக ஆர்வலர்களும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். (ஐ)

# சிறையில் மோதல்; 14 கைதிகள் சாவு

சால்வடார்,ஓக.25

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான எல் சால்வடாரில் சிறைக் கைதிகளிடையே ஏற்பட்ட மோதலில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். எல் சால்வடாரின் தலைநகர் சன் சால்வடாரில் உள்ள சிறையில் நேற்று முன்தினம் கைதிகளிடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் மிகப் பெரிய கலவரமாக உருவெடுத்தது.

கைதிகள், சிறைக்குள் மறைத்து வைத்திருந்த கத்தி, இரும்புக் கம்பி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன். ஒருவரை ஒருவர் பயங்கரமாக தாக்கிக் கொண்டனர். இதனால், சிறை வளாகமே போர்க்களம் போல் காட்சியளித்தது.

இந்த மோதலில், 14 கைதிகள் உயிரிழந்தனர். கைதிகளின் வன்மு[illegible]ற வெறியாட்டத்தை, கலவரத் தடு[illegible]பு பொலிஸாரும் சிறப்புப் [illegible]து காப்புப் படையினரும் சேர்[illegible]து அடக்கினர்.

இதைத் தொடர்ந்து, சிறைக் [illegible]ப் பைத் தொட்டிகளில் மறைத்து [illegible]க் கப்பட்டிருந்த கொல்லப்பட்ட [illegible]தி களின் உடல் களைக் கைப[illegible]றி னர். சிறைக் கலவரம் குறித்து [illegible]ரணை நடத்த, எல் சால்வடார் [illegible] உத்தரவிட்டுள்ளது. [illegible])



# ஈரானில் இங்கிலாந்து தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டது

தெஹ்ரான்,ஓக. 25

நான்கு வருடங்களுக்கு முன்பு ஈரானில் உள்ள இங்கிலாந்து தூதரகம், போராட்டக் கும்பலால் தாக்கப்பட்டதை அடுத்து மூடப்பட்டது. தற்போது அந்தத் தூதரகம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. எளிய முறையில் நடந்த அந்தத் திறப்பு விழாவில் தூதரகக் கட்டடத்தை இங்கிலாந்து வெளியுறவு அமைச் சர் பிலிப் ஹம்மொண்ட் கலந்து கொண்டு திறந்து வைத்தார். ஈரானுக்கும் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையில் கடந்த மாதம் எற்பட்ட அணுசக்தி தொடர்பான ஒப்பந்தத்தின் மூலம் அந்த நாடுகளுடனான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஈராக்கில் 23 பேர் சாவு



ஈராக்கின் கிழக்கு பாக்தாத்தில் உள்ள அன்பர் மாகாணத்தில் தற் கொலைப் படை மற்றும் ஷெல் வெடிகுண்டுகள் கொண்டு ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று நடத்திய தாக்குதலில் 17 ஈராக் வீரர்களும் 6 சன்னி பிரிவைச் சேர்ந்தவர்களும் கொல்லப்பட் டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைக்கு எதிராக சன்னிப் பிரிவினருடன் இணைந்து ஈராக் இராணுவம் போராடி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒபாமாவுக்கு நன்றி தெரிவித்தார் பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ்

பாரிஸ்,ஓக.25

பிரான்ஸில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலை அமெரிக்க நாட்டு இராணுவ வீரர்கள் முறியடித்ததைத் தொடர்ந்து பிரான்ஸ் ஜனாதிபதி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு தொலைபேசியில் உருக்கமாக நன்றி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் அதிவேக ரயில் ஒன்றில் தீவிரவாதி ஒருவர் பயங்கர ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்தியபோது, அதில் பயணித்த 3 அமெரிக்கர்கள் துணிச்சலாக செயல்பட்டு அந்தத் தாக்குதலை முறியடித்தனர்.

தாக்குதலை முறியடித்த 3 நபர்களில் இருவர் அமெரிக்க ஆயுதப் படையைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் ஆவர்.


வீரர்களின் இந்த அபாரச் செயலை அமெ ரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண் டேவும் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

இந்த நிலையில் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் ஒபாமாவை பிரான்ஸ் ஜனாதிபதி தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார்.

தங்களுடைய நாட்டு இராணுவ வீரர்களின் துணிச்சலான செயலால் ஒரு மோசமான ஆபத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அதற்காக உங்களுக்கு நான் மனதார நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தீவிரவாதத்துக்கு எதிராக இருநாடுகளும் இணைந்து போராடி வரும் இந்த நேரத்தில் இருநாடுகளின் நல்லுறவு என்றும் நீடித்திருக்கும் என பிராங்கோயிஸ் தெரிவித்துள் ளார். இதேவேளை ரயில் தாக்குதலை முறியடித்த 3 அமெரிக்கர்கள், பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் பயணிகளால் நாளை விருதுகள் வழங்கி கெளரவிக்கப்படவுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களிலும் உயர்ந்து நிற்கும் மகாத்மாக்கள்



செ. உமாசுதன்

இந்தக்கட்டுரைத்தலைப்பை நினைத்து வாசகர்கள் எவரும் குழப்பமடைய வேண்டாம். இது ஒரு மகா வாக்கியம். ஈழத்து சித்தர்கள் வரிசையிலே மிக முக்கிய அந்தஸ்தை இந்துக்கள் மத்தியிலே பெற்றுக்கொண்ட நல்லூர் தேரடிச் சித்தர் தவத்திரு யோகர் சுவாமிகளுடைய வாக்கியம் அன்பொழுகப் பேசிக் கொண்ட வாக்கியம். இந்த நாட்டைப் பொறுத்தவரை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சராசரி மனிதனிலும் பன்மடங்கு உயர்ந்து நின்ற மகாத்மாக்கள் பலர் இருந்துள்ளனர். ஒரு சிலர் பாடல்கள் மூலம் தாம் யாரென்பதை உலகத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். பலர், மக்கள் சமுதாயத்துக்கு வழி காட்டினார்கள். வேறு சிலர் தாங்கள் வாழ்ந்த காலத்தில் தம்மை வந்தடையும் மக்களின் குறைகளைப் போக்கி நல்வாழ்வு வாழ வழி செய்தார்கள். அந்த வரிசையில் தன்னை நாடி வந்த பக்தன் ஒருவனுக்கு சுவாமிகள் அதட்டலான உரைத்த குரல் வாக்கியமே இது.

கடந்த 17 ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற 8 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் சர்வதேச ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் முக்கிய பேசுபொருளாக இருந்துவந்தது, இருந்து வருகிறது. காரணம், இலங்கையின் வடக்கு–கிழக்குப் பகுதிகளிலே பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற தமிழ் பேசும் மக்கள் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக அடிமைகளாகவும், துன்பங்களின் கொடுக்குப் பிடியிலும் பேரினவாத அரசுகளின் கொடுங்கோல் ஆட்சியிலும் சிக்கித் தவிக்கின்றனர். அவர்களின் அரசியல் உரிமைகளும், அடிப்படைப் பிரச்சினைகளும் இது வரையில் கண்டு கொள்ளப்படவில்லை. மாறாக இன அழிப்புக்களும், இனக் கலவரங்களும் தான் அவர்களுக்கான தீர்வாக அரங்கேறின. அகிம்சை ரீதியிலான போராட்டங்களும், உலக அரங்கமே வியந்த ஆயுதப் போராட்டமும் தீர்வின்றி நசுக்கப்பட்டது, நசுக்கியெறியப்பட்டது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் ஏற்பட்ட உரிமை தொடர்பான வெளி இட்டு நிரப்பப்பட்டிருக்கிறது. அந்த அளப்பரிய பணியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கரங்களில் ஆயுதமாக ஏந்தி பயணித்து வந்தது. கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஒரு புதிய மாற்றம் இதற்கு உத்வேகம் தந்தது. இந்த நிலையில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் தமிழர்களுக்கு மிக முக்கிய தேர்தலாக விளங்கியது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களிலே தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருந்து 16 தமிழ்ப் பிரதிநிதிகளை ஜனநாயகம் எனும் கடலில் மூழ்கி உரிமை எனும் முத்தெடுக்க தேர்வு செய்திருக்கின்றனர். இது வரலாறு.

ஊடகங்கள் மக்கள் மத்தியிலே கருத்துருவாக்கம் செய்கின்ற மிக முக்கிய பணியை செய்து வருகின்றன. அதனடிப்டையிலே மக்கள் தங்களுடைய செயற்பாடுகளையும் தீர்மானங்களையும் சீரமைத்துக் கொள்கின்றனர். மாறாக கருத்தைத் திணிப்பதையும் ஒவ்வாத விடயங்களைக் கூறி மக்களின் ஒற்றுமையையும், இலட்சிய வழிப் பாதைகளில் முறிவுகளையும் ஏற்படுத்துவதும் சிறந்ததல்ல. மாறாக தர்மத்தின் நிலையை சீர்குலைத்து அதனைச் சீண்டிப் பார்ப்பது ஒரு சூதாட்டமே!

இந்தச்சிறப்பானகைங்கரியங்களைத் தங்களைத் தாங்களே படித்த மேதாவிகள் என்று சொல்லிக்கொள்ளும் சிலர் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் யோகர் சுவாமிகளின் குருவாசகம் ஒன்று ஞாபகத்துக்கு வருகின்றது.

இயற்கையிலே ஆத்துமா அறிவுடையது. தூய்மையானது, சரீரமோ அறியாமையுடையது, தூய்மையற்றது. இவ்விரண்டையும் ஒப்பிட்டால் இதிலும் அஞ்ஞானம் பிறிதுண்டோ.....?

யாரொருவன் தன்னை சரீரி என்று நினைக்கின்றானோ ஐயோ! அவனிலும் கீழ் மகன் யார்? யாரொருவன் தன்னுடைய சரீரமென்று சொல்கிறானோ அவன் மட்பிண்டத்தை தன்னுடையது என்ற சொன்னது போலிருக்கும்.

யாரொருவன் தன்னை பூரணனென்றும், நித்தியனென்றும், இயற்கை அறிவுடையவன் என்றும் நினைக்கிறானோ அவன் உண்மையறிவாளி. அவனுக்கு துணையாக ஒரு தெய்வமும் இல்லை. யார் ஒருவன் தன்னை ஓர் அழுக்கும் பற்றமாட்டாது என்றும், மாறுபாடு இல்லாதவனென்றும், தூய்மையிலும் தூய்மை என்று நினைக்கிறானோ அவனை அறிவாளிகள் ஞானி என்று சொல்வார்கள்.

ஆக மேற்சொன்ன கைங்கரியங்களின் சூத்திரதாரிகள் உண்மையிலேயே தங்களை சரீரி என்றும் தன்னுடைய சரீரமென்றும் சொல்பவர்களாகத் தான் இருக்கவேண்டும். மாறாக உண்மையறிவாளிகள் ஞானி என்ற தன்மைக்குள் அடங்காதவர்களே.

இதிகாசங்களிலே வருகின்ற ஒரு சில எடுத்துக்காட்டுக்களை கூறி மக்கள் மத்தியில் பிழையான தகவல்களை வழங்கி குழையடிப்பவர்களும், பாற்குட பவனிகள் எடுப்பவர்களும், நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுபவர்கள் அல்லர் நேர்த் தியற்றவர்கள். ஏதோ ஓர் அசுர சக்தியால் ஏவப்படுகின்றவே தாளங் களே.

மனிதப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் தம்மைப் புனிதப்படுத்தி இனிமையாக வாழ எளிமையான வழியாக இறைவழிபாட்டையே உரிய கடமையாகக் கொண்டுள்ளனர். இவ்வழிபாடு ஆன்மார்த்தம், பிரார்த்தம் என இருவகைப்படும். ஆன்மார்த்தம் என்பது ஒருவர் தனக்காக மட்டும் செய்யும் வழிபாடு. பரார்த்தம் என்பது மற்றவர்களுக்காக செய்யும் வழிபாடாகும்.

அந்த வகையிலே இவர்கள் தங்கள் நலன்பாராது மக்கள் நலன் தொடர்பில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். கீழ் வருகின்ற தெய்வீகக் கதையைக் கேட்டாவது இவர்கள் திருந்தட்டும். தங்களைச் சீர்படுத்தி மண்ணில் நல்ல வண்ணம் வாழட்டும்.

அகஸ்திய மகரிஷி காவேரியைக் கமண்டலத்தில் அடைத்து வைத்திருந்தார். பூவுலகுக்கு பயனளிக்க வேண்டி காக்கை ரூபத்தில் கணபதி சென்று அதைக் கவிழ்த்து விட்டார். காவேரியும் விடுதலை பெற்றாள். அகஸ்தியர் கோபத்தால் அதனை விரட்டிச் செல்ல அது சிறுவனாக மாறி ஓடியது. சிறுவனைத் துரத்திப்பிடித்து குட்ட எண்ணினார். ஆனால் பின் தான் குட்ட நினைத்தது கணபதி என்பதை ஞான திருஷ்டியால் அறிந்தார். தன் தவறை எண்ணி தன் தலையிலேயே குட்டிக்கொண்டார். இது ஒன்று.

இன்னொரு ஒருசமயம் இராவணன் கைலைக்குச் சென்று ஆத்மலிங்கத்தை வாங்கிக்கொண்டு இலங்கைக்கு திரும்பிக் கொண்டிருந்தான். அந்த லிங்கத்தை இலங்கையில் பிரதிஷ்டை செய்துவிட்டால் அவனை எவராலும் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த தேவர்கள் கணபதியைப் பிரார்த்தித்தனர். மஹா கணபதியும் தேவர்கள் பிரார்த்தனைக்கு இணங்க பிரம்மச்சாரியாக சிறுவன் வடிவம் தாங்கி இராவணன் வரும் வழியில் வந்தார். இராவணன் ஆத்மலிங்கத்தை வாங்கும்போது இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டே பெற்றுக் கொண்டான்.

1. அதைக் கீழே பூமியில் எங்கும் வைக்கக் கூடாது. அப்படி வைத்தால் மீண்டும் அதை எடுக்க முடியாது.

2. சரீர சுத்தியும் அவசியமாதலால் மலசல நிவர்த்தி சமயத்தில் கையில் வைத்துக் கொள்ளக்கூடாது.

இந்த இரு நிபந்தனைகளையும் ஏற்று வந்து கொண்டிருந்த இராவணன் சிறுநீர் கழிக்க எண்ணி எதிரில் வந்த சிறுவனிடம் லிங்கத்தை ஒப்படைத்துச் சென்றான். ஆனால் விநாயகரும் நிபந்தனை விதித்தார்.

தான் மூன்று முறை கூப்பிடுவதற்குள் வராவிட்டால் லிங்கத்தைக் கீழே வைத்துவிடுவேன் எனக் கூறி வாங்கினார். சிறுவனும் மூன்று முறை கூப்பிட்டு வராது போகவே லிங்கத்தை கீழே வைத்துவிட்டான். திரும்பி வந்த பார்த்த இராவணன் ஏமாற்றமும் கோபமும் அதிகரிக்க பையன் தலையில் குட்டினான். விநாயகர் சுயவடிவுடன் காட்சி தரவும் தனது தவறை உணர்ந்த இராவணன் தனது தலையிலே குட்டி விநாயகரை வணங்கினான்.

ஆக எத்தனையோ முறைகளில் பெரிய பெரிய அவதாரங்கள் வந்து எவ்வளவோ வேலைகளைச் செய்தும் மீண்டும் இந்த உலகம் அப்படியே இருக்கின்றது. இது ஒரு பெரிய இரகசியம். தேவரீர் இவைகள் எல்லாம் நன்கறிவீர். நானொன்றும் அறியேன். என்னை மன்னித்துக் கொள்ளும் என்ற யோகர் சுவாமிகளின் திருவாய்மொழியை உங்கள் முன் வைத்து விடைபெறுகிறேன்.

2009 இக்கு முன்பு இருந்த அவதாரங்கள் இன்று இல்லாமையே இதற்குக் காரணம். மாற்றங்களால் நன்னிலைப்பட்ட பலர் மீண்டும் ஆரம்ப நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் நன்னிலை பெற்று திருந்த வேண்டும். ஒற்றுமைக்கு பலம் சேர்க்க வேண்டும். உண்மையில் நானும் பலவற்றை அறிந்து அறியாமையை போக்க நினைக்கிறேன். என்னையும் மன்னித்துக் கொள்ளுங்கள்.

# கொமர்ஷல் வங்கியின் ஊக்குவிப்புத் திட்டம்

கொமர்ஷல் வங்கி 2015ஆம் ஆண்டுக்கான இரண்டாவது 'டைன் அன்ட் ஸ்மைல்' ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. 58 உணவகங்களில் 8 வார காலத்துக்கும் அதிகமான காலப்பகுதியில் வங்கியின் வரவு மற்றும் செலவு அட்டையுள்ள வாடிக்கையாளர்களுக்கு கவர்ச்சிமிக்க கழிவுகளை வழங்கும் வகையில் இந்தத் திட்டம் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளது.

இலங்கையின் முன்னணி ஹோட்டல்களில் உள்ள 22 உணவகங்கள், மற்றும் ஏனைய 36 பிரபல உணவகங்கள் இதில் இணைந்துள்ளன. வங்கியின் வரவு மற்றும் செலவு அட்டை வைத்திருப்பவர்களுக்கு 20 மற்றும் 30 வீத கழிவுகளை குறிப்பிட்ட காலப்பகுதியில் இவை வழங்க முன்வந்துள்ளன. ஓகஸ்ட் 10இல் தொடங்கிய இந்த ஊக்குவிப்பு காலம் ஒக்ரோபர் 10இல் முடிவடையும் என்று வங்கி அறிவித்துள்ளது.

இதில் இணைந்துள்ள உணவகங்கள் கிளப் பெந்தொட்டவின் பிரதான உணவகம், பார் பெவிலியன் உணவகம் (ஏர்ல்ஸ் ரீஜன்ஸி), கலிபோர்னியா கிரிள், கொபி ஷொப், கலதாரி ஹோட்டலின் பிளேவர்ஸ் அன்ட் ஷெஹர்சாதே, கேட்வே ஹோட்டலில் உள்ள பஸ் உணவகம், களுத்துறையில் உள்ள தசான்ட்ஸ் ஹோட்டலின் த வேவ்ஸ் பிரதான உணவகம், ஜெட்விங் பீச்சில் உள்ள தசேன்டஸ், பிளக் கோரல் மற்றும் த டெக் உணவகங்கள், ஜெட்விங் புளுவில் உள்ள த கிச்சன், சென்டர் பொயின்ட் மற்றும் கபே ஜே, ஜெட்விங் லெகூனில் உள்ள ஜெப்ரீஸ் பெவிலியன் மற்றும் புளுலெகூன், ஜெட்விங் லைட் ஹவுஸில் உள்ள சினமன்ட் ரூம் மற்றும் கார்டமெம் கபே, ஜெட்விங் ஸீ இல் உள்ள கபே ஸீ மற்றும் லெலாமா, ஜெட்விங் சென்ட் அன்ட்ரூஸில் உள்ள ஓல்ட் கோர்ஸ் ரெஸ்ரூரண்ட், ஜெட்விங் யாலவில் உள்ள த டைனிங் ரூம், அம்ரிதா மசாலா டோக், பார்ஸ் கபே மைக்கலேன்ஜலோ, சைனா டோல், பிட்ஸ் மர்கோஸா யாழ்ப்பாணம், ஜெக் ட்ரீ, ஜேட் ரெஸ்ட்ரூரண்ட, கிங்கொகனட், கினாரி லூன்டாலூ, மகாராஜா பெலஸ், மிட்ஸிஸ் ஓக்ரே ரீஜன்ஸி, பொப்பி ஹனா ஜப்பானிய உணவகம், ரஜபோஜுன், ரெட் ஸ்நெபர், கொழும்பு கோர்ட் யார்டின் ஸ்கார்லெட் ரூம், செமாண்டு, செனானி ரெஸ்ட்ரூரண்ட் கண்டி, ஷியாம் ஹவுஸ், ஸ்ட்ரீட் 360 சன்ஷைன், TGI பிரைடேஸ், வோட்டா; எட்ஜின் நான்கு உணவகங்கள் (போர்ட் வோக், போல்ஸ்டோ பை வொயிஸ், கின்ஸா எட் த எட்ஜ், த பேக்கரி) த [illegible] கொமர்ஷல் வங்கியின் கொம்டீல் திட்டத்தின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அனுகூலங்களை மேலும் மேம்படுத்தும் வகையிலேயே இந்தத் திட்டங்களும் நடைமுறை செய்யப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள பிரதான சில்லறை விற்பனை நிலையங்களில் தனது வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர் சலுகைகளை பெற்றுக் கொடுப்பதோடு கிரடிட் கார்ட் உரிமையாளர் களுக்கு வட்டியற்ற தவணைக் கொடுப்பனவு வசதிகளையும் வழங்குவதே கொம்டீல் திட்டமாகும். கொமர்ஷல் வங்கி கார்ட் உரிமையாளர்கள் நுழைவிசைவு மற்றும் மாஸ்டர் கார்ட் நிறுவனங்கள் நடத்தும் உலகளாவிய ஊக்குவிப்புத் திட்டங்களிலும் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

கொமர்ஷல் வங்கி உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக இடம்பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியாகும். அது நாடு முழுவதும் 243 கிளைகளுடனும், 615 ஏரிஎம் வலையமைப்புக் களுடனும் செயற்படுகின்றது. இதுவே நாட்டின் மிகப் பெரிய தனியார் வங்கியாகும். 2014ஆம் ஆண்டில் மிகச் சிறந்த தனியார் வர்த்தக முத்திரையாகவும் அது தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2015இல் பினான்ஸ் ஆசியா மற்றும் யுரோமணி என்பனவற்றால் இலங்கையின் மிகச்சிறந்த வங்கியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கொமர்ஷல் வங்கி ஏனைய பல சர்வதேச சஞ்சிகைகள் மூலமாகவும் கடந்த பல ஆண்டுகளில் இலங்கையின் தலைசிறந்த வங்கி என தெரிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் இலங்கையின் மிகச் சிறந்த பத்து பெருநிறுவன குடியுரிமைகளில் ஒன்றாகவும் இலங்கை வர்த்தகச் சபையால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வரும்......... ஆனா வராது

பல நாள்களுக்குப்பின்னர் இ.மி.சபை தனது முக்கியத் துவத்தை யாழ். மக்கள் மீது காட்டத் துணிந்து விட்டது என்பதை "தமது கைவரிசையைக் காட்டிவிட்டது" என மக்கள் பரவலாகப் பேசுவதிலிருந்து உணர முடிந்தது. கேட்கக்கூடியதாக இருந்தது. முன்பு கழிவு ஓயில் எனும் இரண்டாவது பூதத்தைக் கிளப்பி சுன்னாகம் வாழ் மக்களின் வாழ்க்கையை பாழடித்தனர். முதலாவது பூதம் கிறீஸ் பூதம் அந்தப் பூதம் இப்போது ஓய்வெடுக்க, இந்தப் பூதம் அதாவது அறிவிக்கப்படாத மின்வெட்டு எனப்படும் பூதம் கடந்த 18 ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் தொடங்கி அடுத்த நாள் 19 ஆம் திகதி மதியம் வரை சுமார் 19½ மணி நேரம் யாழ். குடாநாட்டின் பெரும்பகுதியை ஸ்தம்பிக்க வைத்து கின்னஸ் சாதனை படைத்துவிட்டது. தேர்தல் முடிவுகளை அறியக் காத்திருந்த மக்கள், குளிர்சாதனப்பெட்டிக்குள் வைத்த தின்பண்டங்கள் அரிய மருந்து வகைகள் எல்லாம் குப்பைக்குள் போட வைத்துள்ளது.

இ.மி.சபையினர் மின்வெட்டு ஏற்படும் போதெல்லாம் தமது தொலைபேசிச் சேவைகளையும் மறக்காது நிறுத்தி விடுகின்றனரோ என எண்ணத் தோன்றுகிறது. ஒரு தொலைபேசிச் சேவையும் செயற்படுவதாக இல்லை. கடைசியில் எமது தொலைபேசிகளின் பற்றறிகள் சார்ச் இன்றி அவசர அழைப்புகள் எடுக்கக் கூடியதாக இறங்கிப் போனது தான் மிச்சம். எவராவது அறிமுகமான இ.மி.சபை ஊழியர்களைக் கேட்டால் வரும்.... வரும் என்பார்கள். ஆனால் எமக்குத் தெரியும்வரும்.. ஆனால் வராது என்பதுதான் நாம் அறிந்த உண்மை.

அறிவிக் கப்படாத நீண்ட மின்வெட்டு பற்றிய உண்மையை இ.மி.சபை அதிகாரிகள் இ.மி.சபைக்கு பணம் செலுத்தும் நுகர்வோருக்கு அறியத்தருவது அவர்கள் கடமையல்லவா? இதுவரைஅப்படி ஏதும் நடந்ததாக அறியமுடியவில்லையே.

– கலாபூஷணம் மு.மாசிலாமணி

# உரிய காலத்தில் கிடைக்க வழியமையுங்கள்

அரச அச்சுத் திணைக்களத்தால் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் அச்சிடப்பட்டு வெளியிடப்படும் வர்த்த மானி உரிய காலத்தில் தபாலகங்களில் கிடைப்பதில்லை. வேலைவாய்ப்புக்கள் பற்றிய விவரங்களை இதன் மூலமே அறியும் இளைஞர், யுவதிகள் இதனால் இன்னல்களை எதிர்கொள்கின்றனர். கொழும்பில் வெளியாகும் வர்த்தமானி இலங்கையின் எந்தப் பிரதேசத்தையும் தபாலில் சென்றடைய ஆகக்கூடியது 4 நாள்களே ஆகும் நிலையில், 3 வாரங்களின் பின்பே வர்த்தமானிகள் தபாலகங்களுக்கு வருவதாக தபால் அலுவலர்கள் கூறுகின்றனர். இதனால் விண்ணப்ப முடிவு திகதி முடிவடைந்த பின்னரே நாம் வேலை வாய்ப்புப் பற்றி அறிகிறோம். எனவே, உரிய காலத்தில் கிடைக்க வழி செய்யுமாறு தாழ்மையுடன் உரியவர்களிடம் கேட்கின்றோம்.

*– பாதிக்கப்பட்டோர் சார்பில் இனியவன்.*

# அபாய நிலையில் காணப்படும் திறந்த கிணறு

நவாலி களையோடை அம்மன் வீதிக்கருகில் பாதுகாப்பில்லாத நிலையில் காணப்படும் கிணறு எந்தவேளையிலும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகின்றது.

மேற்படி வீதியோரத்தில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்துக்கு அண்மித்ததாகவே இந்தக் கிணறு அமைந்துள்ளது. பாதுகாப்புச் சுவர் எதுவும் இதற்கு அமைக்கப்படவில்லை. இதனால் பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பயணிகளுடன் வரும் சிறுபிள்ளைகள் ஓடியாடி விளையாடும் போது தவறுதலாக கிணற்றினுள் விழுந்து உயிரை இழக்கும் அவல நிலை காணப்படுகின்றது. மேலும் இந்தக் கிணற்றைச் சுற்றி மரங்களும் அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் கிணற்றை அடையாளம் காண்பதும் இலகுவாக இல்லாத நிலைதான் உள்ளது.


நவாலியின் பிரதான வீதி ஒன்றில் இவ்வாறானதொரு அபாய நிலை காணப்படுகின்றமை இதுவரை உரிய அதிகாரிகளின் கண்களில் தெரியவில்லை போலும். ஆகவே பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் இந்தக் கிணற்றை உடனடியான மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அல்லது கிணற்றைச் சுற்றி பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட வேண்டும்.

மேலும் மழைகாலத்தில் இங்குள்ள வயல்கள் நிறைந்து வெள்ள நீர் பாய்ந்து ஓடும்போது இந்தக் கிணறும் நிறைந்துவிடும். இதனால் கிணற்றுக்கும் வெள்ளத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் இங்கு வருபவர்கள் ஆபத்தில் மாட்டிக்கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது. ஆகவே உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கு முன்னர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானதாகும்.

– ந.தவராசா,நவாலி.




## கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# நல்ல பாடம் கற்பித்த நாடாளுமன்றத் தேர்தல்

'எது நடக்கவிருக்கின்றதோ அது நன்றாகவே நடக்கும்' என்பது பிரசித்தமான கீதாவாக்கியம். அதன் வழியே இலங்கை அரசியலில் எது நடக்க வேண்டும் என்று இருந்ததோ அது நடந்து முடிந்திருக்கிறது.

இலங்கையின் 8 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் இதனை நடத்தி முடித்திருக்கிறது. நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் இலங்கையில் நடத்தப்பட்டுள்ளது எனப் பல தரப்பினரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இதற்கு முத்தாரம் வைத்தாற்போல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூனும் தனது பாராட்டுக்கள்ளை வெளியிட்டுள்ளார்.

பொதுவாக இலங்கையில் நடைபெறும் தேர்தல்களில் வன்முறைகளும், அடாவடித்தனங்களும், மிரட்டல்களும், குண்டுவெடிப்புக்களும் என்று பெரும் அமளி துமளிகள் நடந்தேறுவது ஒரு வழக்கமாக - பழக்கமாக இருந்து வந்துள்ளது.

ஆனால், இம்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவ்வாறான அசம்பாவிதங்கள் .அதிகம் இடம்பெற்றதாகப் பதிவுகள் இல்லை என்பது மனத் திருப்தியளிக்கிறது.

அரிசி அரசியலில் இருந்து இனவாத அரசியலுக்குள் பயணித்து, அடக்குமுறை அரசியலில் நிலைத்திருந்த இலங்கையின் அரசியல் கலாசாரம் எத்தகையது என்பதையும் - இதில் இரண்டறக்கலந்து நிலை கொண்டு இருப்பவர்களது பதவி ஆசைகள் எத்தகையன என்பதையும் இத்தேர்தலின் மூலமாக துல்லியமாக மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

இந்தத் தேர்தல் மூலமாக இன்னுமொரு சங்கதியை தேர்தல் முடிவுகள் விட்டுச்சென்றுள்ளன. அதாவது, போர் நாயகர்களாக தங்களை என்றைக்கும் சிங்கள மக்கள் பார்ப்பார்கள். தாங்கள்தான் சிங்கள மக்களின் மீட்பர்கள் என்று தம்மை மிகைப்படுத்திக் கொண்டவர்களை சிங்கள மக்களே நிராகரித்துள்ளார்கள்.

அதேவேளை, தமிழ்மக்களின் அபிலாசைகளை வேரறுத்து தமது பதவி ஆசையை நிலைநாட்டத் துடித்தவர்களையும் தமிழ்மக்கள் நிராகரித்துள்ளனர். பதவியே முக்கியம் என்றும் அதற்காக எதையும் செய்யலாம் என்ற நிலைபாட்டை ஏற்க முடியாது. எமக்கு எமது சமூகம்தான் முக்கியம் என்பதை வலியுறுத்த முஸ்லிம் மக்களும் தயங்கவில்லை என்பதையும் அவர்களது நிராகரிப்புகள் எடுத்துக்காட்டியுள்ளன.

மொத்தத்தில் பொதுமக்கள் நல்லபாடம் ஒன்றைக் கற்றுக்கொண்டு, புதிய கலாசாரத்தை உருவாக்கித் தமது வாக்குரிமையை பயன்படுத்தியிருப்பது பாராட்டுக்குரி யது.

இதேவேளை, வாக்களிப்பின் ஊடாக 93 பிரதிநிதிகளையும் தேசியப் பட்டியல் மூலமாக 13 பிரதிநிதிகளையும் பெற்று 106 ஆசனங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி முன்னிலை பெற்றுள்ளதுடன் நாட்டின் 19 ஆவது பிரதமராகக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளியன்று பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில் தேசிய அரசொன்றை நிறுவும் உடன்பாடும் ஏற்பாடாகியுள்ளது. இந்த நிலையானது மக்கள் மத்தியில் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்கிறது.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட தேசிய அரசு எத்தகைய இடையூறுகளை எதிர் கொண்டது என்பதை மக்கள் நன்கு அறிந்திருக்கின்றனர்.

இந்தத் தேர்தல் நடைபெறக் காரணமாக அமைந்ததும் அந்த இடையூறுகள்தான்.

இனியும் அத்தகைய நிலையே தொடரப்போகிறது என்பதற்கு கட்டியம் கூறும் வகையில் முன்னாள் ஜனாதிபதியும் இன்னாள் எம்.பியுமான மகிந்த ராஜபக்ச கடந்த வியாழனன்று மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் இல்லத்தில் கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தார். இதில் 60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதில் தேசிய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் சுதந்திரக்கட்சியினரை நம்ப முடியுமா என்ற கேள்வி எழுவதுதவிர்க்கமுடியாததாகவே உள்ளது.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பெண்களுக்கு இட ஒதுக்கீடு புதிய அரசு கவனம் செலுத்துமா?

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் நாடாளு மன்றத்துக்கு 556 பெண்கள் போட்டி யிட்டிருந்த போதிலும் அவர்களில் 11 பெண் கள் மாத்திரமே வெற்றி பெற்றுள்ளார்கள் என்று 'பவ்ரல்' அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

வடமாகாணத்தில் மூன்று நான்கு பெண்கள் களத்தில் இறங்கியிருந்த போதிலும் ஒரே ஒருவர்தான் அரும்பொட்டில் தெரிவா கியுள்ளார். அதுமட்டுமல்ல பெண்களுக்கு இட ஒதுக்கீடு கட்டாயம் இருந்தாக வேண் டும். அவர்களில் கணிசமானவர்களை நாடாளுமன் றத்துக்கு தெரிவு செய்யப்படும் வகையில் சூழ்நிலை களை உருவாக்க வேண்டும் என்ற மனப்பான்மை தேசிய கட்சிகள் மத்தியில் மட்டுமல்ல பிராந்திய கட் சிகளிடமும் காணப்படுவதாக இல்லை.

இவ்வாறான ஒருநிலை உருவாகியிருப்பதற்குக் காரணம் என்ன? பெண்கள் தரப்பில் முன்வைக்கப் படும் காரணங்களில் முக்கியமான ஒன்று சமூகத்தின் எல்லா நிலைகளி லும் ஆண் ஆதிக்கம் மேலோங்கியி ருக்கிறது என்பதாகும். இதில் உண்மையில்லாமல் இல்லை. அதே நேரம் பெண்களும் சமுதாயத் தில் தங் களுக்கும் சரிசமமான பங்கு உண்டு என்பதை உணர்ந்து, அதற்கேற்ப தங்களைத் தயார் செய்து கொள்ளாமை யும் இன்னொரு காரணமாகும்.

பெண்கள் பெரும்பாலும் குடும்பப் பாரத்தை சுமக்க வேண்டியவர்கள்; குடும்பத்துக்கு அப்பாலான காரியங் கள் யாவும் ஆண் களுக்குரியவை என்பதுபோன்ற மனப் பான்மை, நமது சமுதாயத்தில் வேரூன்றிப் போயுள் ளது. இருப்பினும் இக்காலத்தில் படித்த பெண்கள் ஆண்களைப்போன்று பல்வேறு பணிகளுக்குச் செல் கிறார்கள். அதற்கப்பாலான சமுதாயப் பணிகளில் உரிய அளவுக்கு அவர்களால் ஈடுபட முடியாமல் இருக் கிறது. குடும்பம், குழந்தை வளர்ப்பு, முதியவர்களின் பராமரிப்பு என்ற பொறுப்புக்களை அவர்கள் பாரம் பரிய கடமைகளாக சுமக்க வேண் டியுள்ளது. அதனால் பொதுப் பணிகளில் ஆர்வம் இருந் தாலும்கூட முழு ஆர்வத்துடன் ஈடுபட முடியாமல் இருக்கின்றது. இவை களைத் தாண்டி பொதுப் பணிகளில் ஈடுபட்டு தலைமை பொறுப்புக்களை ஏற்று நடத்தும் அளவுக்கு முன் னேறி யிருப்பவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

ஒரு நாடு முன்னேறியுள்ளது என்று கூறப்படு மானால், அங்கே பெண்களும் ஆண்களுக்குச் சமமாக முன்னேறி யிருக்க வேண்டும் என்று ஓர் ஆங்கில அறிஞன் கூறினான்.

ஆகையால், பெண்கள் சமுதாயம் முன்னேறு வதற்குத் தடையாக உள்ள சமூக இடர்பாடுகள் களையப்பட வேண்டும். கல்வியில் முன்னேறுவது மட்டுமன்றி, தொழில்களில் ஈடுபடுவது போன்று சமூக நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் போன் றவற்றில் ஆண்களைப் போன்று ஈடுபட்டு பயிற்சி பெற அவர்களுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத் துவது அவசியமாகின்றது.


இவ்வாறு பயிற்சி பெறுபவர்கள் மாகாணசபை களுக்கும் பின்னர் நாடாளுமன்றத்துக்கும் தெரி வாகும் வகையில் பொதுமக்களின் ஆதரவை பெற் றுக்கொள்ள இயலும்.

நாடாளுமன்றப் பதவியை பெறுவதற்குப் பெண் களானால் என்ன ஆண்களானால் என்ன அவர்கள் முதலில் அடிமட்ட நிலையில் மக்களுடன் இணைந்து பணி புரிந்து அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் பரிச்சியம் பெற்றவர்களாக இருப்பார் களானால், நாட்டின் பல பிரச்சினைகள் இலகுவாகத் தீர்க்கப்பட்டுவிடும்.

பெரும்பாலான பெண்கள் நம்நாட்டில் சந்தர்ப்ப சூழ்நிலைகளினாலேயே அரசியலில் இறங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அப்படியானவர் களில் ஒருவர்தான் காலஞ்சென்ற சிறிமாவோ பண்டாரநாயக்க. கணவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க சடுதியாக படுகொலைக்குள்ளான தால் கட்சித் தலைமையை பொறுப்பேற்று பின்னர் நாட்டின் பிரதமராகி உலகிலேயே முதல் பெண் பிரதமர் என்ற பெரு மையைப் பெற்றது மட்டுமன்றி சிறந்த ஆட்சியாளர் என்ற வகையில் சிங்கள பெரும்பான்மை மக்களின் பாராட்டுக்கும் ஆளா னார். அரசியலில் அரிச்சுவடி யைக்கூட அறியாதிருந்த அவர் நாட்டின் உயர் நிலைக்குச் செல்ல முடிந்த தென்றால் முறையான பயிற்சிக்கு வாய்ப்புப் பெறும் பெண்கள் ஆண்களுக்கு சமமாக ஆட்சியாளர்களாக வரமாட்டார்கள் என்று எவரால் கூறமுடியும்?

தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்தும்போது அரசி யல் கட்சிகள் ஒரு குறிப்பிட்ட வீதம் பெண்களை இணைத் துக்கொள்வதற்கு கட்டாய நிலை உருவாக்கப்பட் டால், அரசியலில் ஈடுபடும் பெண்களின் எண் ணிக்கை அதிகரிக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

குடும்பப் பொறுப்புக்களை சுமக்கும் பெண்கள் அந்தப் பொறுப்பில் ஆண்களுக்கும் பெரும்பங்குண்டு என்பதை நிலைநிறுத்தும் அதேசமயம்- ஆட்சி மன்றங் களிலும் ஆண்களுக்கு இணையாக பெரும் எண்ணிக் கையில் பெண்கள் செயற்பட முடியும் என்ற நிலை உரு வாகும். பதவி ஏற்றுள்ள புதிய தேசிய அரசு அதனை நாடிக் கவனம் செலுத்தும் என்று எதிர்பார்ப்போம்.



# புதிய தந்திரோபாயத்தை வகுக்க வேண்டிய நிலையில் மகிந்த ராஜபக்ச

சிஎன்என்–ரவி அகர்வால்–தமிழில் ரஜீபன்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாடாளு மன் றத் தேர்தலில் தனது தொகுதி யில் வெற்றிபெற்றுள்ளார், எனி னும் அவரது கட்சியால் 42 வீத வாக்குகளை மாத்திரம் பெற முடிந் தது– இது புட்டின் பாணியில் பிரத மராவதற்கு போதுமானதல்ல –
ஒரு வருட காலத்துக்கு முன்னர் காணப்பட்ட நிலையில் ஏற்பட்ட அதிர்ச்சி அளிக்கும் மாற்றமிது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச மிகநீண்டகாலமாக பெரு மளவு அதிகாரத்தை முன்னர் ஒரு போதும் இல்லாத வகையில் தனது கரங்களில் வைத்திருந்ததன் காரண மாகவே அவரது ஆதரவாளர்கள் அவர் மீண்டும் அதிகாரத்தைக் கைப் பற்றுவார் என எதிர்பார்த்தனர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை வென்ற மகிந்த ராஜபக்ச இலங்கையின் வரலாற்றுக் கதைகளில் குறிப்பிடப்படும் போர் திறன் வாய்ந்த மன்னனாகக் கருதப் பட்டார்.அவரது ஆட்சியின்போது மகிந்த ராஜபக்சவின் ஒரு சகோ தரர் பாதுகாப்புச் செயலாளராக பணியாற்றினார், பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக மற்று மொரு சகோதரர் காணப்பட்டார்.

அவரது குடும்பத்தைச் சேர்ந்த பலர் அரசியல், வர்த்தகம், ஊடகங்கள் போன்றவற்றை தமது கட்டுப்பாட் டின் கீழ் வைத்திருந்தனர். ஆனால் அந்த நிலை தற்போது இல்லை.

முதலாவதும், மிகப்பெரியதுமான அடி ராஜபக்ச ஜனாதிபதி தேர்த லில் தனது முன்னாள் சகாவிடம் தோற்றவேளை விழுந்தது. இலங் கையைப் பொறுத்தவரை ஜனாதி பதியே மிகப்பலமானவர். ராஜபக்ச அரசமைப்பு மாற்றங்கள் ஊடாக தனது நிலையை இன்னமும் பலப் படுத்திக்கொண்டார்.

முதலாவது தோல்விக்குப் பின்னர் ராஜபக்ச நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட உறுதிபூண்டார். ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தான் அவரை பிரதமராக் நியமிக் கப்போவதில்லை என உறுதியாக தெரிவித்தபோதிலும், ராஜபக்ச பிரதமராவது குறித்து நம்பிக்கை கொண்டிருந்தார்.

### சர்ச்சைகளில் சிக்குண்டவர்

இதேவேளை – ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதி ராகப் பல குற்றவியல் குற்றச்சாட் டுகள் முன்வைக்கப்பட்டன.

கொழும்புக்கு அருகில் சீனாவின் கட்டுமான நிறுவனம் ஒன்று முன்னெடுக்க அனுமதிக்கப்பட் டிருந்த 1.4 பில்லியன் டொலர் பெறு மதியான கொழும்புத்துறைமுக நகரம் தொடர்பான சர்ச்சையில் மகிந்த ராஜபக்ச சிக்குண்டுள்ளார்.

முன்னைய அரசின் கீழ் கைச்சாத் திடப்பட்ட உடன்படிக்கைகள் குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி சிறிசேன உத்தரவிட்டுள்ளார்–ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட வேளை முறை கேடுகள் இடம்பெற்றனவா என ஆராயுமாறு அவர் பணித்துள்ளார்.

ராஜபக்சவின் இரு சகோதரர்கள் மீதும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட் டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. ராஜ பக்ச இது அரசியல்பழிவாங்கல் நடவடிக்கை என அவற்றை நிரா கரித்துள்ளார்.

இவ்வாறு நாடாளுமன்ற தேர்தலில் தோற்றது ராஜபக்சவுக்கு ஏற்பட்ட இரண்டாவது வெளிப்படையான அவமானமாகும், அடியுமாகும்.

இதன் மூலம் மக்கள் நல்லாட்சிக் கான, சிறந்த ஆட்சிக்கான தமது விருப்பத்தை மீண்டும் வெளிப் படுத்தியுள்ளனர்– என்கின்றார் மாற்றுக்கொள்கை நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக் கியசோதி சரவணமுத்து. ராஜபக் சவுக்கு ஆதரவுள்ளது,மக்கள் அவரை முற்று முழுதாக நிராகரிக்க வில்லை, ஆனால், அவர் இரண்டா வது தடவை நிராகரிக்கப்பட்டுள் ளார் எனவும் சரவணமுத்து குறிப் பிடுகின்றார்.

இலங்கையின் "சண்டே ஐலண்ட்" பத்திரிகையின் ஆசிரியர் மெனிக் சில்வா, ராஜபக்ச தன்னையும் தனது குடும்பத்தினரையும் காப் பாற்றுவதற்காக புதிய தந்திரோ பாயமொன்றை வகுக்கவேண்டிய நிலையிலுள்ளார் எனத் தெரிவித் தார். தனக்கும் தனது குடும்பத்தி னருக்கும் எதிராக முன்வைக்கப் படும் ஊழல் விசாரணைகள் குறித்து இணக்கப்பாடமொன்றுக்கு வரு வதற்கான முயற்சிகளை மேற் கொள் வதே அவரது முதல்நோக்கமாகக் காணப்படும் எனவும் சில்வா தெரி விக்கின்றார்.

### அடுத்தது என்ன?

புதிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் தாங்கள் தொடர்ந்தும் ராஜபக்சவுக்கு ஆதரவாக இருப் பதா அல்லது அல்லது விலகி புதிய கூட்டணிக்கு ஆதரவளிப்பதா என தீர்மானிக்கவுள்ளதால் அடுத்த சில நாள்கள் முக்கியமானவையாக காணப்படும் என்கிறார் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து.

மகிந்த ராஜபக்ச முற்றுமுழுதாக தனிமைப்படுத்தப்படும் நிலை உரு வாகலாம், இரண்டு தடவைகள் தோற் றதால் தான் அமைதியாக வெளி யேறுவதே சிறந்தது என அவர் தீர்மானிக்கலாம் எனவும் சரவணமுத்து குறிப்பிடுகின்றார்.

இதேவேளை – இலங்கைக்கானகடும் சோதனை செப்ரெம்பரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை யில் சமர்ப்பிக்கப்படவுள்ள போர் குற்ற விசாரணை அறிக்கை மூலம் உருவாகவுள்ளது. இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதித் தரு ணங்களில் போர் குற்றங்கள் இடம் பெற்றனவா என்ற தனது விசா ரணை முடிவுகள் குறித்து இந்த அறிக்கையில் ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கவுள்ளது.

விசாரணை முடிவுகள் எவ்வாறன வையாக இருந்தாலும், ராஜபக்ச வின் தசாப்தகால ஆட்சியின் விளைவு குறித்து இலங்கை சிந்திப்பதற்கான சிறிய தருணமாக அது அமையும்.

முன்னாள் ஜனாதிபதி எதிர்காலத் தில் அதிகாரத்தில் இல்லாமல் போக லாம், ஆனால் அவரது பாரம்பரி யம் (நல்லவை, தீயவை) தொடர்ந் தும் இலங்கை மீது நிழலாகப் படர்ந் திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு விவசாயிகளுக்கு

## சவால் விடுக்கும் நீர்ப்பாசனம்



இலங்கையின் மூன்று பத்தாண்டு கால உள்நாட்டுப் போர் 2009 இல் முடிவடைந்ததிலிருந்து, தமிழ் விவசாயிகள் தமது தொழிலை சிறப்புற முன்னெடுப்பதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.


இந்த வகையில், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த விசுவமடு வாழ் விவசாயியான நாகரத்னம் கணேசன் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கான போதியளவு நீரைப் பெறமுடியவில்லை எனக் கூறுகிறார்.

போர்க் காலத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் மட்டுமே நெல்லைப் பயிரிட்டதாகவும், ஆனால் தற்போது நான்கு ஏக்கர் நிலத்தில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்வதாகவும் கணேசன் கூறுகிறார்.

எனது பயிர்ச்செய்கைக்கு என்னால் எவ்வளவு நீரைப் பெற முடியும் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இதுவே எனக்கு உள்ள மிகப் பெரிய பிரச்சினையாகும் என்கிறார் கணேசன்.

இதையொத்த பிரச்சினையை கிழக்கு மாகாண விவசாயிகளும் சந்திக்கின்றனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண விவசாயிகள் பாரம்பரியமாக விவசாயத்தை நம்பி வாழும் மக்களாவர். இவர்களது விவசாய நடவடிக்கைகள் போரின் போது மிக மோசமான பாதிப்புக்களைச் சந்தித்தது.

போர் முடிவுற்ற பின்னர் தற்போது மீண்டும் விவசாயத் தொழில்



விரிவாக்கப்பட்டுள்ளது. விவசாய நிலங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. விவசாயிகள் மேலும் வெவ்வேறு பயிர்களைப் பயிரிடுவதற்கான தெரிவுகளைக் கொண்டுள்ளனர்.

அதாவது காலபோக மரக்கறி வகைகள் மற்றும் புகையிலை போன்றவற்றை பயிரிடுவதற்கான தெரிவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண விவசாயிகள் கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், 2007 காலப்பகுதியில் 16,300 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டது. 2014ல் இதன் அளவு இரண்டு மடங்காகியது. அதாவது 31,632 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில், இந்த வளர்ச்சி மேலும் அதிகரித்தது. 2007ல், 47,000 ஏக்கரில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. 2014ல் இது மும்மடங்காகியது. அதாவது ஏழு ஆண்டுகளின் பின்னர், 2014ல் 153,000 ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டது.

போர்க் காலப்பகுதியில் நிலவியது போன்று ஊரடங்குச் சட்டம் போன்ற எவ்வித தடைகளும் தற்போது எமக்கில்லை. நாம் விரும்பிய நேரங்களில் எமது வயல்களுக்குச் செல்ல முடியும். ஆனால் நீர் கிடைக்கும் அளவை நிச்சயப்படுத்த முடியாமையே நாங்கள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய பிரச்சினையாகும் என மட்டக்களப்பைச் சேர்ந்த முஸ்லிம் விவசாயியான மொஹமட் அனீஸ் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் விவசாயம் அடிப்படையில் பருவப்பெயர்ச்சி மழை மற்றும் நீர்ப்பாசனத்தில் தங்கியுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளாக, பருவமழை காலந் தவறிப் பொழிகிறது. இதனால் நாட்டில் வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி போன்றவை ஏற்படுகின்றன. இதுவே பயிர் அறுவடைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. கடந்த ஆண்டு, நாட்டில் மிக மோசமான வறட்சி ஏற்பட்டது. இதனால் கிட்டத்தட்ட 15 சதவீத நெல் அறுவடை பாதிப்படைந்தது.

அளவுக்கதிக நீராலும் மிகக் குறைந்தளவு நீராலும் இலங்கையின் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என இவ்வாண்டு ஐ.நா. உணவு மற்றும் விவசாய நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அளவுக்கதிகமான நீராலும், மற்றும் காலத்துக்குத் தேவையான நீரைப் பெற முடியாததாலும் இலங்கையின் பல் வேறு பிராந்தியங்களிலும் விவ சாய உற்பத்தி விலைகளில் தளம் பல் ஏற்பட்டுள்ளது என ஐ.நா. உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் ஆசிய பசுபிக் உணவு விலை மற்றும் கோட்பாட்டு கண்காணிப்பகத்தால் இம் மாதம் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மறுபுறத்தே, அளவுக்கு அதிகமான மழைநீரால் விவசாயப் பொருள்களை சந்தைகளுக்கு கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன. உலர் வலய மாவட்டங்களில் மழைநீர்ப் பற்றாக்குறையானது பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதில் கால தாமதத்தை ஏற்படுத்துகிறது என ஐ.நா உணவு மற்றும் விவசாய நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

**அளவுக்கதிகமான நீராலும், மற்றும் காலத்துக்குத் தேவையான நீரைப் பெற முடியாததால் இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களிலும் விவசாய உற்பத்தி விலைகளில் தளம்பல் ஏற்பட்டுள்ளது.**

கடந்த இரண்டரை பத்தாண்டு கால போர்க்காலத்தின் போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண விவசாயமானது பெருமளவில் சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கான சிறியளவு விவசாயமாகவே காணப்பட்டது. சந்தை வாய்ப்புக்கள் குறைவாக இருந்தமையே இதற்கான காரணமாகும். ஏனெனில் போர் அச்சம் காரணமாக மக்கள் விவசாய நிலங்களை அதிகளவில் பயன்படுத்தவில்லை.

போர் முடிவுற்ற பின்னர் விவசாயமானது தற்போது வர்த்தகம் சார் நோக்குடன் மேற்கொள்ளப்படுகிறது. தற்போது அதிக சந்தை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. பயிர்செய் நிலங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. ஆனால் பெறக்கூடிய நீரின் அளவை நிச்சயப்படுத்த முடியவில்லை என வடக்கு மாகாண சபையின் உதவி நீர்ப்பாசன இயக்குநர் எஸ்.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

கைவிடப்பட்ட நீர்ப்பாசன கட்டுமானங்கள் மீளவும் செப்பனிடப்பட்டுள்ள போதிலும், நீர் விநியோகம் நிலையற்றதாகக் காணப்படுவதாக சண்முகநாதன் மேலும் தெரிவித்தார்.

நீர் முகாமைத்துவத்தில் அதிகளவில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே தற்போதைய விவசாயிகளின் தேவையாக உள்ளது என இவர் மேலும் சுட்டிக்காட்டினார். விவசாயிகள் நீரைத் தேக்கி வைக்கக்கூடிய எளிய முறைகளைக் கைக் கொள்ள வேண்டும். இதுவே விவசாயிகள் தொடர்ந்தும் தமது பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளத் துணை புரியும் என்பது நீர்ப்பாசன வல்லுநரின் கருத்தாகும்.

முதலாவதாக, விவசாய நிலங்களை மட்டப்படுத்த வேண்டும். இதன் மூலம் நீர்ப் பயன்பாட்டை மேலும் வினைத்திறன் மிக்கதாக் மாற்ற முடியும்.

இரண்டாவதாக, கிருமிநாசினி போன்றோ அல்லது களைகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு வழி போன்றோ நீரை விவசாயிகள் பயன்படுத்தக் கூடாது என நீர்ப்பாசன வல்லுநர் அறிவுறுத்துகிறார்.

வடக்கில், நெற்பயிரில் ஈடுபடும் விவசாயிகள் அதிகளவு நீரைப் பயன்படுத்துகின்றனர். களைகள் பயிர்களைத் தாக்காமல் வைத்திருப்பதற்காகவே இவ்வாறு அதிகளவான நீர் பயன்படுத்தப்படுகிறது. எனினும் விவசாய நிலத்தை முறையாக பராமரிப்பதன் மூலமும் களைகொல்லிகளைப் பயன்படுத்துவதன் மூலமும் களைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

பல்வேறு பயிர்களை ஒரேதடவையில் பயிரிட வேண்டும். இதன் மூலம் நீரின் பயன்பாடு கட்டுப்படுத்தப்படும். குறிப்பாக சில வகை நெற்பயிருக்கு குறைந்தளவு நீர் தேவைப்படும். நீரில்லாத காலத்தில் இவ்வாறான நெல்லைப் பயிரிட முடியும் என்பது நீர்ப்பாசன வல்லுநரான சண்முகநாதனின் ஆலோசனையாகும்.

எனது தந்தையார் தனது காலம் முழுவதும் ஒரே வகையான நெல் விதைகளைப் பயிரிட்டுள்ளார். ஆனால் நான் அப்படியல்ல. குறிப்பிட்ட காலப்பகுதியில் நெல்லைப் பயிரிடுவதற்கு முன்னர் நான் குளங்களிலுள்ள நீரின் அளவைக் கவனத்திற் கொள்கிறேன் என மட்டக்களப்பைச் சேர்ந்த அனீஸ் என்கின்ற விவசாயி தெரிவித்தார்.



**நன்றி புதினப்பலகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 4 | | | | 6 | | |
| 2 | 8 | | | | 6 | | 7 | |
| | | | | 1 | | 2 | | 4 |
| 5 | | | 3 | | 9 | | | |
| 8 | | 7 | | | | 3 | | 5 |
| | | | 8 | | 5 | | | 6 |
| 4 | | 8 | | 2 | | | | |
| | 5 | | 9 | | | | 6 | 3 |
| | | 9 | | | | 1 | 8 | |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண் டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.**

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### துன்பங்களைக் கண்டு அஞ்சாதே

நீ கடவுள் நம்பிக்கை உடையவனோ, அல்லது இறை பற்று இல்லாத நாத்தி கனோ, எதுவாக இருந்தாலும் சரி, உனது சுக துக்கங் களையும் சுயநலத்தையும் மறந்து உனது கடமைகளை நீ சரிவரச் செய்து வந்தால் போதும். அதுவே மிகப் பெரிய தேச சேவையாகும்.

இல்லறமோ துறவறமோ எதை வேண்டுமானாலும் நீ தேர்ந்தெடு. ஆனால் இல்லறத்தில் இருக்கும்போது பிறருக்காக வாழ். துறவியாகிவிட்டால் பணம், பந்தம், புகழ், பதவி என அனைத்திலிருந்தும் விலகி இரு.

துன்பங்களைக் கண்டு அஞ்சாதே. பெரிய மரத்தின் மீது புயற்காற்று மோதத்தான் செய்யும். கிளறி விடுவதால் நெருப்பு நன்கு எரியத் தான் செய்யும். தலையில் அடி பட்ட பாம்பு முன்னிலும் வேகமாக படமெடுக்கத் தான் செய்யும். ஆகவே துன்பங்களைக் கண்டு துவண்டு விடா மல், உறுதியாய் எதிர்த்து நில். உன்னால் எதுவும் முடியும்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 700 | 300 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 650 | 600 | 700 | 600 | 400 | – |
| பாரை | 600 | 700 | 600 | 500 | 400 | 400 |
| சூரை | 650 | 600 | 500 | 600 | 600 | 400 |
| சீலா | 300 | 500 | 400 | 400 | 300 | – |
| விளை | 650 | 450 | 450 | 450 | 500 | – |
| கூரல் | 300 | 400 | 300 | 300 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 300 |
| விளாக்கள் | 500 | 800 | 700 | 400 | 300 | – |
| ஓரா | 400 | 350 | 300 | 350 | 400 | 300 |
| திரளி | 250 | 300 | 200 | 300 | 100 | 250 |
| நகரை | 200 | 300 | 300 | 500 | 100 | 250 |
| சூடை | 150 | 200 | 130 | 120 | 80 | 60 |
| ஒட்டி | 250 | 250 | 300 | 300 | 200 | 200 |
| திருக்கை | 250 | 350 | 200 | 300 | 200 | 140 |
| பாலை | 400 | 350 | 400 | 400 | 200 | – |
| வாழை | 100 | 200 | – | 300 | 200 | 200 |
| கொய் | 100 | 200 | 150 | 120 | 20 | – |
| மதனம் | 150 | 250 | 200 | 280 | 250 | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 60 | 80 | 60 | 35 |
| கத்தரி | 80 | 80 | 60 | 80 | 80 | 80 | 80 | 40 |
| கரட் | 140 | 150 | 100 | 90 | 160 | 200 | 140 | 140 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 60 | 70 | 60 | 45 |
| பயிற்றை | 100 | 70 | 60 | 80 | 80–100 | 120 | 140 | 100 |
| பாகல் | 120 | 100 | 100 | 70 | 120 | 160 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 130 | 120 | 130 | 120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 70 | 90 | 100 | 80 | 90 | 80 | 80 | 70 |
| பூசணி | 40 | 40 | 50 | 30 | 30–40 | 40 | 60 | 40 |
| தக்காளி | 100 | 100 | 100 | 80 | 80–100 | 120 | 100 | 70 |
| வாழைக்காய் | 70 | 80 | 50 | 60 | 60 | 40 | 60 | 30 |
| கீரை | 15 | 20 | 30 | 10 | 25–30 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 25 | 25 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 100 | 250 | 120 | 160 | 400 | 120 | 150 |
| புடோல் | 40 | 40 | 50 | 40 | 30–40 | 40 | 80 | 50 |
| கோவா | 90 | 80 | 80 | 80 | 70 | 80 | 100 | 70 |
| வெண்டி | 40 | 40 | 50 | 40 | 50–60 | 80 | 80 | 25 |
| போஞ்சி | 170 | 140 | 180 | 120 | 160 | 160 | 180 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 160 | 80 | 80–100 | 80 | 120 | 80 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 50 | 50–60 | 40–60 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 | 100–140 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 60 | 100 | 80 | 100 | 60 | 60 | 150 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 140 | 80 | 140 | 160 | 160 | 80 |
| ரோசவள்ளி | 120 | 140 | 160 | 160 | 120 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 180 | 60 | 100 | 120–140 | 90 | 120 | 100 |

## நாளை

**ஆவணி-09 புதன்கிழமை**
**26.08.2015**

திதி: ஏகாதசி மு.ப.08.21 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.இ.07.56 வரை
சுபநேரம்: 04.35-06.05 வரை
இராகுகாலம்: 12.05-01.35 வரை
*ஏகாதசி விரதம்*

## ஜீரண பிரச்சினைகளுக்கு சிறந்த வீட்டு வைத்தியங்கள்

**✸ சீரகம் :**

சீரகத்துக்கு அதிகப்படியான எச்சிலை உற்பத்தி செய்யும் தன்மை உள்ளது. இது செரிமானத் தைச் சீராக நடைபெற வைத்து, அதனால் ஏற்படும் பல்வேறு வயிற்றுப் பிரச்சினைகளைச் சரிசெய்யும். அது மட்டுமன்றி இது வயிற்று நரம்புகளை அமைதிப்படுத்தி, அமிலம் சுரப்ப தால் ஏற்படும் புண்களைக் குணப்படுத்த உத வும் என ஆயுள்வேத முறையில் கூறப்படுகிறது. அதற்கு இதை வாயில் போட்டு மென்று சாப்பிடலாம். அதைவிட, நீரில் கொதிக்க வைத்து, ஆறிய பின்னர் அந்த நீரைக் குடிப்பது சிறந்த முறையாகும்.

**✸ கராம்பு :**

இது ஒரு இயற்கையான இரைப்பைக் குடல் வலி நீக்கியாகும். இது குடல் தசை இயக்கத் தைத் துரித்தப்படுத்துகிறது மற்றும் உமிழ் நீர் சுரப்பதையும் அதிகப்படுத்துகிறது. இதன் ஒரு வகையான கசப்புக் கலந்த காரமான சுவை, அதிகளவு உமிழ்நீர் சுரப்பதைத் தூண்டுவதால், செரிமானத்துக்கு உதவுகிறது. ஆகவே ஜீரணத் தால் அவதியுறும்போது, ஒரு கராம்பைக் கடித்து வாயில் வைத்துக் கொள்ளுங்கள், இதி லிருந்து வெளியாகும் திரவம் அமிலத்தை கட்டுப்படுத்தி நிவாரணம் அளிக்கும்.

**✸ ஏலக்காய் :**

சளி, பித்தம், வாதம் ஆகிய மூன்று நோய் களையும் சரிசெய்யக் கூடிய ஒரே உணவு ஏலக்காய் என ஆயுள்வேத முறையில் கூறப்படு கிறது. இது செரிமானத்தைத் துரிதப்படுத்தி, வயிற்று வலியைக் குறைக்கும். இது இரைப்பையின் உட்பரப்பில் சீதத் தன்மையை சமப்படுத்தி, வயிற்றில் அதிகளவு அமிலம் சுரப்பதால் ஏற்படும் தாக் கத்தைத் தணிக்கிறது. இதன் இனிப்புச்சுவை மற்றும் குளி ராக்கும் தன்மை, அமிலத்தின் மூலம் ஏற்படும் எரிச்சலில் இருந்து நிவாரணம் கொடுக் கும். குறிப்பாக எரிச்சலின் இருந்து நிவாரணம் பெறுவதற்கு, சிறிது ஏலக்காயைப் தூளாக்கி, நீரில் கொதிக்க வைத்து, ஆறிய பின் னர் அந்த நீரைக் குடித்தால், உடனடி நிவாரணம் கிடைக்கும்.

**✸ இஞ்சி :**

இது உணவை உறிஞ்சும் தன் மையை அதிகரித்து, விரைவாக செரிமானம் அடைவதற்கு வழி வகுக்கிறது. உணவிலுள்ள புரதச் சத்துக்களை உடைத்து, அவை உடலில் சேர்வதற்கும் உதவு கிறது. இஞ்சி, வயிற்றில் சீதம் சுரக்கும் அளவை அதிகப்படுத்து வதால், அமிலத் தாக்கத்தைக் குறைக் கிறது.

வேண்டுமெனில் சிறிய இஞ்சித் துண்டை மென்று சாப்பிடலாம். இது கடினமாக இருந்தால், நீரில் கொதிக்க வைத்து, அந்த நீரைக் குடிக்கலாம். அதேபோல், இஞ் சியை அரைத்து, கொஞ்சம் வெல்லம் சேர்த்து, வாயில் வைத்து உறிஞ்சுவதால், இது மெதுவாக வயிற்றுப் பகுதிக்குச் சென்று நிவாரணம் அளிக்கும்.

**✸ நெல்லிக்காய் :**

இதில் அதிகளவு விற்றமின் சி உள்ளது. இதைத் தவிர சளி மற்றும் பித்தத்துக்கு சிறந்த மருந்தாகும். இதன் நோய் நீக்கும் சக்தி உண வுக் குழாயுடன் இணைந்த இரைப் பைப் புண்களைக் குணமாக்க உதவுகிறது. ஒரு தேக்கரண்டி நெல்லிக்காய்ப் பவுடரைத், தின மும் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால், ஜீரணப் பிரச்சினை உருவாகாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# ஆவணி மாத இராசி பலன்கள்



## தனுசு

தலைமைப் பண்பு அதிகம் கொண்ட நீங்கள் தலைக்கனம் இல்லாதவர்கள். எவர் தயவிலும் வாழாமல் தன்கையே தாக்குதவி என்றிருப்பீர்கள். உங்கள் பிரபல யோகாதிபதியான சூரியன் இந்த மாதம் முழுக்க ஆட்சி பெற்று வலுவாக நிற்பதால் எதிர்பார்த்த பணம் வரும். அரசால் ஆதாயம் உண்டு. தந்தையாரின் உடல், நிலை சீராகும். வேலை கிடைக்கும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். வழக்கில் வெற்றி கிட்டும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். தந்தை வழியில் மதிப்பு, மரியாதை கூடும். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் பழைய நண்பர், உறவினர்கள் தேடிவந்து பேசுவார்கள். மனைவி வழியில் ஆதாயமடைவீர்கள். மனைவிக்கு வேலை கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். செவ்வாய் 8 இல் இருப்பதால் நஷ்டம், ஏமாற்றம், அடி வயிற்றில் வலி, தொண்டைப் புகைச்சல் வந்து செல்லும். சகோதர, சகோதரிகளை நினைத்துச் சங்கடப்படுவீர்கள். வழக்கில் தீர்ப்புத் தள்ளிப்போகும். குருபகவான் சாதகமாக இருப்பதால் எத்தனை பிரச்சினை வந்தாலும் அதைச் சமாளிக்கும் சக்தியும், எதிலும் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கையும் கிடைக்கும். சனி சாதகமான வீடுகளில் செல்வதால் சமூகத்தில் அந்தஸ்து உயரும். திடீர் யோகம், பணவரவு உண்டாகும். கௌரவப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் கட்சி மேலிடம் உங்களை நம்பி சில போராட்டங்களுக்குத் தலைமை தாங்க வைக்கும். கன்னிப் பெண்களின் எதிர்பார்ப்புக்கள் தடையின்றி முடியும். மாணவர்கள் கல்யாணம், திருவிழா என்று அலையாமல் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். வகுப்பறையில் ஆசிரியரிடம் தயங்காமல் சந்தேகங்களைக் கேளுங்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் உங்களிடமிருந்து தொழில் யுக்திகளைக் கற்றுக் கொள்வார்கள். வாடிக்கையாளர்கள் விரும்பி வருவார்கள். பிரச்சினை தந்தவரை நீக்கிவிட்டு புதிய பங்குதாரர்களைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வுக்காக உங்களுடைய பெயர் பரிசீலிக்கப்படும். அதிகாரிகள் மனம் விட்டுப் பேசுவார்கள். பல ஆலோசனைகள் தருவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கலைத்துறையினர் புதுமையாகச் சில படைப்புக்களை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். விவசாயிகள் எள்ளு, ஆமணக்கு, சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களால் ஆதாயம் அடைவீர்கள். போராட்டங்களில் வெற்றி பெறும் மாதமிது. இராசிநாதன் நட்சத்திர பலம் காரணமாக எதிலும் ஏறுமுகமான நிலை உண்டு. குடும்பத்தில் குதூகலம் நிலவும். பணப் பிரச்சினை தீரும். கணவன் மனைவி இடையே பூசல்கள் மறையும். கன்னிப் பெண்கள் எண்ணங்கள் நிறைவேறும். வெளிநாடு செல்லும் முயற்சிக்குப் பலன் உண்டு. சொத்து சம்பந்தமாக முக்கிய முடிவு வரும். நிதானமாகச் செயற்படவும். மாமியாருடன் அனுசரித்துப் போகவும். புதிய வீட்டுக்குக் குடிபோவீர்கள். கல்வி சம்பந்தமான செலவு இருக்கும். கணினி போன்ற சாதனங்கள் வாங்குவீர்கள். அலுவலகத்தில் நிதானம் தேவை. சக ஊழியர்களை அனுசரித்துச் செல்லவும். பதவி உயர்வு பற்றிய செய்தி வரலாம். வியாபாரம் உச்சமடையும். புதிய தொழில் வாய்ப்பு வரும்.

**பரிகாரம்:** தினமும் விநாயகர் அகவல் படிக்கலாம். ஏழை முதியோர், விதவைகளுக்கு உதவலாம். தட்சிணாமூர்த்தியை வழிபடலாம்.



## மகரம்



எல்லோரிடமும் யதார்த்தமாகப் பேசிப் பழகும் நீங்கள், உங்களைப் பற்றிய விடயங்களை இரகசியமாக வைத்திருப்பீர்கள். சூரியன் 8 இல் நிற்பதால் புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். திடீர் பயணங்கள் உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் திருப்பம் ஏற்படும். அண்டை வீட்டாரின் ஆதரவு பெருகும். புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் தந்தை வழியில் உதவிகள் கிடைக்கும். சொத்துச் சேரும். பாகப் பிரிவினை பேச்சு மூலம் சுமுகமாகும். நண்பர்கள் பக்கபலமாக இருப்பார்கள். கொஞ்சம் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். முகம் மலரும். வர வேண்டிய பணம் கைக்கு வரும்.

சொந்தபந்தங்களுடன் இருந்த கசப்புணர்வு நீங்கும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். கடன் பிரச்சினைகள் ஒரு பக்கம் விரட்டினாலும் இங்கிதமாகப் பேசி வட்டியைக் கொடுப்பீர்கள். சுக்கிரன் 7 இல் அமர்வதால் குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனம் வாங்குவீர்கள். திருமணம் கூடி வரும். செவ்வாய் 7 ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் உண்டாகும். உங்களின் ஆளுமைத்திறன், நிர்வாகத்திறன் அதிகரிக்கும். 8இல் குரு தொடர்வதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். அரசியல்வாதிகளது தொகுதியில் நடக்கும் நல்லது கெட்டதில் கலந்து கொண்டு மக்களின் அனுதாபத்தைப் பெறுவீர்கள். கன்னிப் பெண்களுக்கு உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும். கல்வித் தகுதிக்கேற்ப நல்ல வேலை கிடைக்கும். மாணவர்கள் முதல் மதிப்பெண் பெறுவதற்காக கடுமையாக உழைப்பீர்கள். பெற்றோர் நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார்கள். வியாபாரத்தில் விளம்பர யுக்திகளைக் கையாண்டு இலாபத்தை இரட்டிப்பாக்குவீர்கள். வேலையாள்களிடம் கறாராக இருங்கள். நழுவிச் சென்ற ஒப்பந்தங்கள் கைக்கு வரும். கடல் உணவு, மர வகைகளால் ஆதாயமுண்டு. கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட இடர்பாடுகளைச் சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் நேரங்காலம் பார்க்காமல் உழைத்தும் எந்த பயனும் இல்லையே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் அநாவசியமாக நுழையாதீர்கள். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவதற்கு முன் படித்துப் பாருங்கள். கலைத்துறையினருக்குப் புது வாய்ப்புக் கிடைத்து அதிகம் சம்பாதிப்பீர்கள். விவசாயிகள் நிலத்தகராறுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். முற்பகுதி அலைச்சலைத் தந்தாலும் பிற்பகுதியில் சாதித்துக்காட்டும் மாதமிது. தனம், வாக்கு குடும்ப ஸ்தானங்கள் பலமாக இருப்பதால் மனதில் இருந்த சலனம், குறை நீங்கி தன்னம்பிக்கை, தெளிவு பிறக்கும். சுக்கிர பலம் காரணமாக சுப காரியம் கூடிவரும். பெண்கள் குடும்பத்தில் சகிப்புத் தன்மையுடன் நடப்பது அவசியம். பிள்ளைகள் உங்களைப் புரிந்துகொண்டு ஒத்துழைப்பார்கள். தந்தை உடல் நலத்தில் அக்கறை தேவை. சகோதரர்கள் உதவுவார்கள். திடீர்ச் செலவுகள் ஏற்பட்டு விலகும். குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. அடகு வைத்த நகை, பத்திரத்தை மீட்பீர்கள். புகழ்பெற்ற கோயில்களுக்குச் சென்று வருவீர்கள். பேரன், பேர்த்திகளால் செலவுகள் இருக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் சாதக பாதகம் இருக்கும். வியாபாரம் செழிக்கும். புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும்.

**பரிகாரம்:** ஸ்ரீமதே ராமானுஜாய என்று தினசரி 108 முறை சொல்லலாம். சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாற்றி வணங்கலாம்.

# கணவன் - மனைவி உறவைச் சிதைக்கும் பிரச்சினைகள்



மனைவி அல்லது கணவன் அமைவது இறைவன் கொடுத்த வரம். அது நன்றாக அமைவது அவரவர் தலையெழுத்தைப் பொறுத்து அமைகிறது. நாம் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் திருமணம் செய்து கொண்டாலும், அந்தப் பந்தத்துடன் சேர்ந்து பயணிக்கும் போது பல பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்.

விவாகரத்து என்பது ஒரு திருமணத்தின் சோகமான முடிவாகும். இந்த விவாகரத்து அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி குழப்பங்களை உண்டு பண்ணும். இந்த உறவை அழிக்கும் பிரச்சினைகளான அறிகுறிகளைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

பழைய விடயங்களைக் கிண்டுவது, பட்டப் பெயர் வைத்துக் கூப்பிடுவது, வசை பாடுவது, மாமனார் மாமியாரை பற்றிக் குறை கூறுவது என இவை அனைத்தும் இருவருக்கும் இடையில் இடம்பெறும் விடயங்கள் இருவருமே சண்டை போடுவதற்குத் தேவையற்ற காரணங்களைத் தேர்ந்தெடுப்பார்கள். இதன் விளைவு, ஒருவரை ஒருவர் தவிர்க்க வீட்டுக்கு வரப் பிடிக்காமல் போகும். சின்னக் குறை கூட பெரிய சண்டையாக மாறலாம். இதற்குத் தீர்வே இல்லை என்று பல பேர் தவறாக நினைக்கின்றனர்.



இனி இருவருக்கும் மத்தியில் ஆரோக்கியமான போட்டி இருக்காது. உங்களுக்கு அனுபவமோ, அறிவோ இல்லாத விடயத்தில் உங்கள் துணையின் உதவியோ அறிவுரையோ இனிக் கிடைக்காது. உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இனி அவர் இருக்கமாட்டார்.

நீங்கள் ஒதுக்கப்பட்டுக் கவனிப்பாரின்றிக் கிடந்தால், உங்களுக்கு அந்த வீட்டின் உறுப்பினர் என்ற எண்ணம் போய் ஒரு வெளியாள் என்ற எண்ணம் குடியேறி விடும். அந்தக் குடும்பத்தின் ஒருவராக உங்[illegible] இனி அது நமது குடும்பம் அல்ல என்ற எண்ணம் தோன்றும். இது மிகவும் ஆபத்தான எண்ணமாகும்.

திருமணத்துக்குப் பின்னர் வேறு ஒரு நபருடன் தொடர்பு வைத்துக் கொள்வது, குடும்ப வாழ்க்கையைச் சீரழித்துவிடும். அது ஒரு மன்னிக்க முடியாத குற்றமாகும். மேலும் இது உங்கள் திருமண வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும். இரண்டு பேரில் ஒருவர் பிரச்சினையை விட்டுத் தப்பியோடும் குணாதிசயத்தோடு இருந்தால், பிரச்சினை பெரிதாகித்தான் போகும். இது கொஞ்சம் கொஞ்சமாக சேர்ந்து, விஸ்வரூபம் எடுத்து தாண்டவமாடி, உங்கள் உறவை உடைத்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.

| | | |
|---|---|---|
| 2015 ஓகஸ்ட் 25 | யாழ்ப்பாணம் | மு.ப 9.00 - ந.ப 12.00 |
| | சுன்னாகம் | பி.ப 02.30 - பி.ப 05.30 |
| 2015 ஓகஸ்ட் 26 | சங்கானை | மு.ப 9.00 - ந.ப 12.00 |
| | மானிப்பாய் | பி.ப 02.30 - பி.ப 05.30 |
| 2015 ஓகஸ்ட் 27 | நெல்லியடி | மு.ப 9.00 - ந.ப 12.00 |
| | பருத்தித்துறை | பி.ப 02.30 - பி.ப 05.30 |

**வட்டியில்லா தவணைக் கட்டணத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்**

**பழைய பொருள்களுக்கு மாற்றுமுறை விலைக்கழிவு**

**3 வருடத்திற்கு நீடிக்கப்பட்ட உத்தரவாதம்**

**பெறுமதிமிக்க பரிசில்கள்**



எங்கள் பிள்ளைகளுக்கு
### சித்திரப் போட்டி

எங்கள் குழந்தைகளின் ஆக்கத்திறனையும் உற்சாகத்தையும் வெளிக்கொணரும் சித்திரப் போட்டியை உங்கள் அனைவரினதும் வேண்டுகோளின் பேரில் இம் முறையும் நடாத்தத் தீர்மானித்துள்ளோம்

இத் தினத்தில் நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் சிங்கர் ப்ளஸ் காட்சியறைக்கு வருகை தாருங்கள்



புதிய முறையில் - விரைவாக
### சுவையான உணவு தயாரிப்போம்

நேரத்தையும் சிரமத்தையும் மீதப்படுத்தும் நவீன இலகு உபகரணங்களின் உதவியுடன் வீட்டிலுள்ள அனைவருக்கும் சுவையான உணவு தயாரிக்க கற்றுக் கொள்ளுங்கள்.

அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறையில் விபரங்களை கேட்டறியுங்கள். வீட்டிலுள்ள அனைவருடனும் வருகை தந்து புதியனவற்றை கற்றுக் கொள்ளுங்கள்.



**சரியான முறையில் தையல் இயந்திரத்தைப் பாவிக்கவும் தையல் செயல்முறையை கற்றுக் கொள்வதற்கும்**

**உங்கள் தையல் இயந்திரத்தை இலவசமாக சேவை செய்து கொள்ளுங்கள்,**

புதிய தையல் முறை மற்றும் சரியான முறையில் தையல் இயந்திரத்தைப் பாவிக்கும் தகவல்களை அறிந்து கொள்ளுங்கள். நீங்களும் வருகை தாருங்கள்.

உங்கள் தையல் இயந்திரத்தை இலவசமாக சேவை செய்து கொள்ள அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறைக்கு வருகை தாருங்கள்



### குளிர்சாதனப் பெட்டி சேவை

சிங்கர் ப்ளஸ் காட்சியறையில் பதிவு செய்து கொள்வதன் மூலம் எமது நடமாடும் சேவை தொழில்நுட்பவியலாளர்கள் உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளை இலவசமாக சேவை செய்து தருவார்கள். சிங்கர் ப்ளஸ் காட்சியறைக்கு விரைந்து உங்கள் பெயரைப் பதிவு செய்வதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



### தண்ணீர் பம்பி சேவை

அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறையில் உங்கள் விபரங்களைப் பதிவு செய்வதன் மூலம் உங்கள் வீட்டிற்கு வரவழைத்து இலவச சேவையைப் பெற்றிடுங்கள்.

உங்கள் தண்ணீர் பம்பியினதும் அதன் உதிரிப்பாகங்களினதும் நீண்ட காலப் பாவனையை உறுதி செய்து கொள்ளுங்கள்.



### மோட்டார் சைக்கிள் சேவை

உங்கள் மோட்டார் சைக்கிளில் அசல் உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்வதுடன் இலவச சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறையை நாடுங்கள்.

இவ் இலவச சேவையைப் பெற்றிட குறிப்பிட்ட சேவை நிலையங்களுக்கு உங்கள் மோட்டார் சைக்கிளை கொண்டு வருதல் வேண்டும்.

**வீட்டிற்குத் தேவையான பெறுமதிமிக்க பொருள்களை கழிவுகளுடன் பெற்றிட – பரிசுகளை வென்றிட – நீங்களும் அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறையை நாடுங்கள்**

| சுன்னாகம் | சங்கானை | சாவகச்சேரி | கிளிநொச்சி | பருத்தித்துறை | நெல்லியடி | யாழ்ப்பாணம் | முல்லைத்தீவு | மானிப்பாய் | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021-2240555 | 021-2251100 | 021-2270197 | 021-2280199 | 021-2263411 | 021-2264937 | 021-2225408 | 021-2290180 | 021-2255343 | 077-6433888 |

(011) 5 400 400 http://www.singersl.com www.facebook.com/singersl

SINGER Plus

சலுகைகள் செல்லுபடியாகும் காலம், 2015 ஓகஸ்ட் 31 வரை மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வை.எம். சி.ஏ. பிரதிநிதிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம் ஓக. 25

தாய்வான் நாட்டு வை.எம். சி. ஏ. பிரதிநிதிகள் 40 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர். இவர்கள் இன்று இயக்கச்சியில் உள்ள வை.எம். சி. ஏ. குடியேற்றத்திட்டத்திற்கு பயணம்செய்ய உள்ளனர். அத்துடன் நாளை நெடுந்தீவுக்கு பயணத்தினை மேற்கொண்டு அங்குள்ள மக்களுக்கு உதவிகள் செய்ய உள்ளதாக யாழ்ப்பாண வை.எம். சி. ஏ. செயலாளர் அறிவித்துள்ளார்.

(த-9)

# எதிரணியில் அமர்வதற்கு சு.கவினருக்கு அனுமதி

கொழும்பு, ஓக. 25

தேசிய அரசில் பங்கேற்க விரும்பாத சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், தாம் விரும்பியவாறு எதிரணியில் அங்கம் வகிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி அளித்துள்ளார்.

எனினும் கட்சிக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படவேண்டாமென ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற சு.க உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

எனினும், ஐ.ம.சு.முவில் அங்கம் வகிக்கும் மஹிந்த ஆதரவாளர்கள், தனியாக ஒரு கூட்டணி அமைத்துச் செயற்பட தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டலஸ் அழகப்பெரும, பிரசன்ன ரணதுங்க, நாமல் ராஜபக்ச, விதுர விக்கிரமநாயக்க, குமார வெல்கம, டீ.பீ.ஏக்கநாயக்க, காமினி லொக்குகே, பந்துல குணவர்த்தன, ரோஹித்த அபேகுணவர்த்தன, மனுஷ நாணயக்கார, கீதா குமாரசிங்க, நிமல் லன்சா, தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ச , உதய கம்மன்பில, மஹிந்தானந்த அலுத்கமகே, கெஹெலிய ரம்புக்வெல, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, ஜயந்த சமரவீர, லக் ஸ்மன் வசந்த பெரேரா, ஜனக பண்டார தென்னக்கோன், ரோஷான் ரணசிங்க, நிரோஷன் பிரேமரத்ன, நிஷாந்த முத்துஹெட்டிகம, பிரேமலால் ஜயசேகர, வாசுதேவ நாணயக்கார, பவித்ரா வன்னியாராச்சி, விமலவீர திஸாநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன, வீரகுமார திஸாநாயக்க போன்றோரே எதிர்க் கட்சியில் அமர தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த)

## புலமைப் பரிசில் விடைத்தாள் திருத்தப் பணி செப். 9 ஆரம்பம்

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணி எதிர்வரும் செப்ரெம்பர் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் செப்ரெம்பர் 9 ஆம் திகதியில் இருந்து 14 ஆம் திகதி வரை 6,256 நிலையங்களில் மேற்கொள்ளப்படுமெனவும் பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது.

(த-22)

### பிரதமரின்

யேற்றபோதும் பிரதமரின் செயலாளராக நியமனம் பெற்றார். இந்நிலையில் பொதுத் தேர்தலுக்குப் பின் புதிய அரசின் பிரதமரின் செயலாளராகவும் சமன் ஏக்கநாயக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை அதிவிசேட தரத்தைச் சேர்ந்த சமன் ஏக்கநாயக்க, பல்வேறு துறைகளில் உயர்பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

### பிரிட்டன்

சங்கக்கார, தமது 15 வருட கால கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடைகொடுத்தார்.

சங்கக்காரவைக் கௌரவப்படுத்தும் வகையில் ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் மற்றும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் மைதானத்துக்குச் சென்றிருந்ததோடு, பரிசில்களையும் வழங்கினர்.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி, சங்கக்காரவுக்குப் பிரிட்டனுக்கான தூதுவர் பதவியை வழங்க விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இது குறித்து தாம் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து விரைவில் முடிவை அறிவிப்பதாக குமார் சங்கக்கார கூறியுள்ளார்.

தமக்குத் தூதுவர் பதவியை வழங்குவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தமை, தன்னை ஆச்சரியப்பட வைத்து இன்ப அதிர்ச்சியளித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கோரிக்கை குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே, சங்கக்கார இவ்வாறு கூறினார்.

குமார் சங்கக்காரவை, ஏற்கனவே தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் விளம்பரத் தூதுவராக ஜனாதிபதி நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

### தமிழ்க்

திருகோணமலை மாவட்டத்தில், இரா.சம்பந்தனுக்கு அடுத்து அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் மற்றும் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டு சில நூறு வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்த திருமதி. சாந்தி சிறீஸ்கந்தராஜா ஆகியோர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் செயலாளர் இது தொடர்பான அதிகாரபூர்வத் தகவலைத் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பியுள்ளார்.

திருமதி. சாந்தி சிறீஸ்கந்தராஜா மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 பேர் கொண்ட நாடாளுமன்றக் குழுவின் ஒரேயொரு பெண் உறுப்பினராவார். (த-5)

### புலிகளின்

மலை சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரி, இரவுப் பொழுதைத் திருகோணமலையிலேயே கழித்திருந்தார்.

இதன்போது திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்துக்கு அவதானிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

அதன் போது, கடற்படை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் பயன்படுத்தப்பட்ட படகுகள், ஆயுதங்களை அவர் பார்வையிட்டார்.

அத்துடன் கடற்படையின் அதிவேக தாக்குதல் படகு (டோறா) மூலம் துறைமுகப்பகுதியையும் மைத்திரிபால சிறிசேன சுற்றிப் பார்வையிட்டுள்ளார். (த-5)

### 4 அமைச்சுகள்

அரசின் அமைச்சரவையில் அமைச்சர்கள் எத்தனை பேர் நியமிக்கப்படுவார்கள் என்பது தொடர்பில் பல்வேறு ஊகங்கள் தொடர்ச்சியாக வெளிவந்த வண்ணமுள்ளன. அமைச்சரவையை 30 பேருக்குள் மட்டுப்படுத்துவதற்கு உறுதியளித்திருந்த ஐக்கிய தேசிய கட்சிக்கு, பெரும்பான்மை கிடைக்காமையினால் அதனை நிறைவேற்றிகொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளதாக தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன. (த)

### 3 அமைச்சர்கள்

வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர, நீதி அமைச்சராக விஜேதாச ராஜபக்ச, மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சராக டி.எம்.சுவாமிநாதன் ஆகியோரே நேற்றுக் காலை பதவியேற்றுள்ளனர். இவர்கள், கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் அமைக்கப்பட்ட தேசிய அரசிலும் இதே அமைச்சுப் பதவிகளை வகித்து வந்தவர்களாவர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா பிஸ்வால் இலங்கைக்கு இன்று வரவுள்ள நிலையிலும், ஐ.நா மனித உரிமைகள் சபை அதிகாரிகளுடனான சந்திப்புக்காகவும் இந்த அமைச்சர்கள் அவசரமாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், ஏனைய அமைச்சர்கள் இன்று பதவியேற்பர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-5)

### பிளேயருடன்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை மிகவும் அமைதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சிகளை ரொனி பிளேயர் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டினார்.

இலங்கையினுடைய சுற்றுலாத் துறை வளர்ச்சியடைவதற்கு தன்னாலான பங்களிப்பை வழங்குவதாகவும், பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் குறிப்பிட்டார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

(த)

### உள்ளூராட்சி

இவ்வாறு தேர்தலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய முறைமையில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை நடத்த தேவையான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கையொப்பமிட்டுள்ளார். இந்த வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியிடப்படும் எனப் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே. தடாலகே தெரிவித்துள்ளாா.

இதன் பிரகாரம் 335 உள்ளூராட்சிச் சபைகளுக்காகத் தேர்தல் நடத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். விகிதாசார மற்றும் தொகுதி வாரி அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், பகுதி பகுதியாகத் தேர்தலை நடத்தாது ஒரே தடவையில் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

(த)

### கோத்தாவிடம்

குறித்த நிறுவனத்தின் 500 ஊழியர்கள் மற்றும் 60 லட்சம் ரூபா நிதி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தப்பட்டமை குறித்தே கோத்தபாயவிடம் வினவப்பட்டதாக, அந்த ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டீ சில்வா குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு நேற்றுக் காலை சென்ற முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் 6 மணித்தியாலங்கள் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இதனையடுத்து ஊடகங்களுக்குப் பதிலளித்த அவர் ரக்னா லங்கா நிறுவனத்தின் நடவடிக்கைகள் குறித்தே தன்னிடம் விசாரிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

(த)

### விமானப்

புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் இருவரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிடப்பட்டது.

குறித்த தாக்குதலில் 16 விமானங்கள் சேதமடைந்ததோடு, 14 படையினர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(த)

### ஐரோப்பிய

செயலகங்களின் மேற்பார்வையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளதாக அறிய முடிகின்றது.

வீட்டுத் திட்டங்களுக்கு அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களை நேரடியாகப் பார்வையிடுவதற்கே ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்டக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர். அவர்களுடன் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரும் வருகை தரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் குழுவினர், யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையிலான குழுவினர் வரவேற்கவுள்ளனர். அதன் பின்னர், அரச அதிபர் தலைமையிலான குழுவினருக்கும், ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

சந்திப்பு முடிவடைந்த பின்னர், யாழ்ப்பாணத்தில் புதிதாக விடுவிக்கப்பட்ட இடங்களை ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர்.

(த-5)

### நிரந்தரத்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய மூன்று பிரதான தரப்புகள் இணைந்து ஒரு நீடித்த தீர்வுப் பிரேரணை உருவாக்குவதில் பங்காற்றுவார்கள். இதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பங்காற்றுவார் எனவும் ரணில் உறுதியளித்தார்.

இந்தியாவின் இந்து நாளிதழுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கைக்கான புதிய அரசமைப்பை உருவாக்க ஒரு வருடம் தேவைப்படும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் கருதுகின்றனர். நாங்கள் ஆறு மாதத்துக்குள் அது சாத்தியமாகும் என கருதுகின்றோம். புதிய தேர்தல் முறையே பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது.

மேலும் ஜனாதிபதி முறை குறித்தும் பிரச்சினையுள்ளது. பிரசைகள் குழுவினர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதனை எதிர்க்கின்றது.

ஆகவே இதனை நாங்கள் முற்றாக ஆய்வு செய்யவேண்டிய நிலையில் உள்ளோம். நாடாளுமன்றத்தை எவ்வாறு பலப்படுத்தலாம் என்பது குறித்து ஆராய வேண்டும். மாகாண சபைகள் குறித்தும் நாங்கள் ஆராய வேண்டும். அவை எவ்வாறு செயற்படுகின்றன எனவும் பார்க்க வேண்டும். இவையே எங்கள் முன் உள்ள விவகாரங்கள்.

பல நிர்வாகத் தடைகள் உள்ளன. அவற்றை நீக்கவேண்டும். சில மாகாண சபைகள், மத்திய அரசு மற்றும் மாகாண சபைகள் கூட்டாக நடைமுறைப்படுத்தும் அதிகாரங்களில் சிலவற்றை கோருகின்றன. இவையே முக்கிய விடயங்கள் – இவை குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் பல உள்ளன. எனவே அவை தொடர்பில் நாம் முன்னோக்கிச் சென்று பொறி முறை ஒன்றை உருவாக்க வேண்டும். இந்தியாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று அதிகாரங்களை வழங்கி அதனைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இரு பிரதான தேசிய கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் யோசனைகளை முன்வைப்பதில் பிரதானமானவையாகக் காணப்படும்.

பெரும்பாலான மக்கள் காணி விவகாரம் குறித்து திருப்தியடைந்துள்ளனர். யாழ்ப்பாணம் உட்பட வடக்கு–கிழக்கு மக்களைப் பொறுத்த வரை தங்கள் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களை மீள் குடியேற்றுவதே முக்கிய பிரச்சினையாக உள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பான முக்கிய விவகாரங்களை அடிப்படையாக வைத்தே மீள்குடியேற்றம் இடம்பெறும். படையினர் இது குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

பொலிஸ் அதிகாரங்களைப் பொறுத்தவரை, ராஜபக்ச அரசில் பொலிஸ் துறை அரசியல் மயப்படுத்தப்பட்டமை குறித்து ஆராய்ந்து வருகின்றோம். இது மீண்டும் இடம்பெற அனுமதிக்க கூடாது. இதனால் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவைப் பலப்படுத்த வேண்டும். இதன் பின்னர் மாகாண சபைகள் என்ன பங்களிப்பை ஆற்றலாம் என்பது குறித்து பார்க்கவேண்டும்.

சட்ட ஒழுங்கு விடயங்களில் மாகாண சபைகளுக்கு அதிகாரம் காணப்பட வேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதில் பின்வாங்குதல் இல்லை.

**சர்வதேச விசாரணைக்கு இடமளியோம்**

மனித உரிமை மீறல்கள் குறித்து உள்நாட்டு விசாரணையே இடம்பெற வேண்டும் என நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். ரோம் பிரகடனத்தில் நாங்கள் கைச்சாத்திடாததே இதற்குக் காரணம். ராஜபக்ச அரசு 2009 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய உத்தரவாதத்தை பல வழிகளில் அர்த்தப்படுத்தலாம். ஒரு கட்டத்தில் அவர்கள் சர்வதேச விசாரணையை நோக்கி முன்னேறினார்கள்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் இலங்கைக்குள் சர்வதேச விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நீதி, அடிப்படை அற்றது என்பதைத் தெரிவித்து வந்துள்ளோம்,

நீதித் துறையில் நம்பிக்கை இழந்ததன் காரணமாகவே பலர் சர்வதேச விசாரணையைக் கோரினர். வடக்கிலும் தெற்கிலும் முன்னர் இந்தப் பிரச்சினைகள் காணப்பட்டன.

நாங்கள் எங்கள் அரசியல் அமைப்புக்கு உட்பட்ட உள்நாட்டுப் பொறிமுறையொன்றை முன்வைக்க முயல்வோம். அதேவேளை அது இலங்கையின் சகல சமூகங்களுக்கும், சர்வதேச சமூகத்தினருக்கும் ஏற்புடையதாகக் காணப்படும்.

சர்வதேச உறவுகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பின்பற்றிய அணுகுமுறை குறித்து பலர் அதிருப்தியடைந்துள்ளனர். அது ஒரு தவறு என்றே நான் கருதுகிறேன். மேற்குலகத்துடனும் இந்தியாவுடனும் எங்களுக்கு இருந்த நெருக்கமான உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவது. அதேவேளை சீனாவுடன் நல்லுறவைப் பேணுவதே எங்கள் அணுகுமுறையாக காணப்படும்– என்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்னேஸ்வரா, நவஜீவன்ஸ் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 25

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடந்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் உரும்பிராய் உதயசூரியன் அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா அணி மோதியது. இதில் குப்பிளான் விக்னேஸ்வரா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதியது. இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தகர்ப்பு உதைகளில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## அண்ணா அணி இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 25

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி அண்ணா அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் அணி மோதிக் கொண்டது. இதில் அராலி அண்ணா அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.(ம-23)

**தேவை**

யாழ் நகரிலுள்ள அலங்கார கடை ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.

தொடர்பு : 077 775 0318

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரமாண்டமான புடைவையகத்திற்கு புடைவை (சேலை) விற்பனையில் அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 324 6503

**DIESEL GENERATOR FOR SALE**

SDG 5000 SE (5KV) FIRMAN டீசல் ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. புதிய BATTERY உடன்.

தொடர்பு : 077 820 9072


**விற்பனைக்கு**

தட்டாதெரு சந்தி ரமணன் மரக்காலையில் உள்ள 100 அடி அகலம், 100 அடி நீளம் கொண்ட நல்ல நிலையில் உள்ள இரும்பினாலான கூரை விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0212229296, 0757836550

## மரண அறிவித்தல்

### சுப்பர் மார்க்கண்டு



இணுவில் மேற்கு, கந்தசுவாமி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் மார்க்கண்டு 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் - முத்து தம்பதிகளின் கனிஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இணுவில் வேலுப்பிள்ளை சுவாமியார், மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவஞானம் (வீதி அபிவிருத்தி திணைக்களம் நல்லூர்), சிவசூரியன் (கனடா), சிவப்பிரமம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவதாசன் (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), சிவமலர் (கனடா), சிவசேஸ்வரி (கனடா), சிவசரணம் (பிரான்ஸ்), சிவஜோதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராணி (இணுவில்), வசந்தினி (கனடா), தவராணி (யா/சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்) உதயகுமாரி (பிரான்ஸ்), புனிதவதி (பிரான்ஸ்), புஸ்பலிங்கம் (கனடா) காலஞ்சென்ற கிருபானந்தசிவம் (கனடா) மற்றும் சுதாஜினி (பிரான்ஸ்), பரங்கிரிநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நடராஜா (இணுவில்), செல்லம்மா (கனடா), அன்னம்மா (கனடா) காலஞ்சென்ற இந்திராணி மற்றும் வன்னியசிங்கம் (பிரான்ஸ்),கமலாதேவி (மன்னார்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வாஹினி, விக்னேஸ்வரன் (தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம்), தவநீதன், ஆரனி, ஹரிகாலன், சஜீபன், கஜீபன், ஹரிகரன், கஜன், கீர்த்தீபன், சஜித்தா, பிரணவன், கீர்த்திகா, சிந்துஜா, பவித்திரா, கிரித்தன், காலஞ்சென்றசயந்மற்றும் ஜெனிசா, சாருசன், பிரஸா, சாரங்கன், சஹனா, ஜெனிசன், சாருஜீ, சஜிந், சாருஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் கம்சரூபன், ஹரிகேசன், அபிசன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2015) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-
மகன்மார் -மா. சிவஞானம் (வீதி அபிவிருத்தி திணைக்களம் நல்லூர்) மா.சிவப்பிரமம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

இணுவில் கந்தசுவாமி கோயிலடி, இணுவில் மேற்கு, இணுவில்.

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் குலசிங்கம்
(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)



கலிகை சந்தி, கரவெட்டியை நிரந்தர வதிவிடமாக கொண்ட இராமலிங்கம் குலசிங்கம் 22.08.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் அமுதவல்லியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் முருகதாஸ் (ஜேர்மனி), இந்துமதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி (ஜேர்மனி), பிறேமானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சியானுகா, பிருந்தாபன், ஆரத்தி, நிலா[illegible]மெலான் ஆகியோரின் அன்புப் பேரனும் அற்புத மலரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் செல்வராசா (மெம்பர்), விநாயகமூர்த்தி (கற்கண்டு), வசந்த பூங்கோதை, சுகுணா காலஞ்சென்ற யசோ ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தித்திசு கரவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலிகைச்சந்தி,
கரவெட்டி.
0776585994

தகவல் :-
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து கற்பகநாதன்
### (உரிமையாளர் - சிறிமாதவன்)

மணற்பிட்டி, காரைநகரைப்பிறப்பிடமாகவும் இல.60, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கற்பகநாதன் 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் சிவப்பிரியா, இராதிகா, சுதாகர், சுகந்தன், சயந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவானந்தன் (சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் - தியத்தலாவை), தவக்குமரன் (ஆசிரியர் - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹரிணி, ஜலக்ஷனா, பா்வதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கருணாநிதி, சிவசோதி, பாக்கியவதி, காலஞ்சென்ற பரஞ்சோதி, தவமணி, கோகிலாவதி, கணேசன், சிவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யோகேஸ்வரி, பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், தேவகுஞ்சரி மற்றும் சிவானந்தன், இராஜேந்திரன், இராஜேஸ்வரி, சிவபாலன், புஸ்பராணி, லோகநாதன், காலஞ்சென்ற சோதிநாதன் ஆகியோரின் மைத்துனரும் பத்மநாதன், சரஸ்வதி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2015) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.60, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல் -
குடும்பத்தினர்.
0212228729

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் மல்க விடைபெற்றார் சங்கா




இலங்கை – இந்தியா அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்துடன் ஓய்வுபெறுவதாக ஏற்கனவே அறிவித்திருந்த சங்கா, நேற்றைய தினம் இலங்கை ரசிகர்கள் மத்தியில் இருந்து கண்ணீர் மல்க விடைபெற்றார். சங்காவை வழியனுப்பும் விதமாகவும் அவருக்கு உரிய மரியாதையை கொடுக்கும் விதமாகவும் இலங்கைக் கிரிக்கெட் பல்வேறுவிதமான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. கிரிக்கெட்டுடன் நின்றுவிடாது பல்வேறு துறையைச் சேர்ந்த பிரபலங்களும் வெளிவேறுவிதமான நினைவுப் பொருட்களை சங்காவுக்கு கொடுத்து அவருக்கான கௌரவத்தைச் செலுத்தினர்.

### சங்காவின் இறுதி உரை

வெற்றிபெற்றாலும் தோல்வியடைந்தாலும் எனது பெற்றோரே என்மீது விமர்சனங்களை வைக்காதவர்கள். அவர்களைத் தாண்டி என் வெற்றிக்கான வழியைப் பற்றி நான் சிந்தித்ததில்லை. இவ்வாறு தெரிவித்தார் நேற்றுடன் சர்வதேச ஆட்டங்களில் இருந்து விடைபெற்ற குமார் சங்கக்காரா.

தனது இறுதி உரையில் சங்கா தெரிவித்ததாவது நான் பலருக்கும் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் இங்கு வந்தவர்களுக்கு நன்றியைப் பதிவு செய்கிறேன். பிறகு நான் படித்த கல்லூரி. அது அபாரமான பள்ளி. அங்கு நான் கற்றதும் பெற்றதும் அதிகம், அங்கு பெற்றுக் கொண்ட அடிப்படைகள் மற்றும் அடித்தளங்களுக்காக நான் நிறைய கடன்பட்டிருக்கிறேன். சுனில் பெர்னாண்டோ, இவர் எனது போட்டிப் பள்ளியின் பயிற்சியாளரக இருந்தாலும் எனக்கு அன்புடன் பயிற்சி அளித்தார். எனது அனைத்து முன்னாள் தலைவர்கள், என்னுடன் விளையாடிய அனைத்து அணி சகாக்கள், எனக்காக நீங்கள் கொடுத்த ஆதரவும் ஊக்கமும் என்னை பெரிய அளவில் அகத்தூண்டுதல் செய்தது. ஓய்வறையின் அனைத்து தருணங்களும் மகிழ்ச்சியளிப்பவை, இனி அதைத்தான் நான் பெருமளவில் இழக்கிறேன். என்னை கட்டி மேய்ப்பது அவ்வளவு சுலபமல்ல, எனது தலைவர்கள் அதை சிறப்பாகவே செய்தனர்.

நிறைய பேர் என்னிடம் எனக்கு தூண்டுகோலாக அமைந்தது எது என்று கேட்டனர். நான் எனது பெற்றோரைத் தாண்டி இதற்கான விடையைக் காண்பதில்லை. பிறகு எனது உறவினர்கள், அம்மா, அப்பாச்சிக்கு நன்றி. நான் வீட்டில் பாதுகாப்பாக உணர்ந்தேன். நாம் நம் குடும்பத்தை தேர்ந்தெடுக்க முடியாது என்று சொல்வார்கள். ஆனால் நான் உங்கள் குழந்தை பாக பிறந்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன். நான் எப்பவும் உணர்ச்சிவசப்பட மாட்டேன். ஆனால் எனது பெற்றோரும் உறவினர்களும் உள்ள இந்தத் தருணம் மிகவும் அரிய தருணமாகும்.

எனது பெரிய சாதனைகள் பற்றி கேட்கின்றனர், சதங்கள், உலகக் கிண்ண வெற்றி, ஆனால் நான் பார்ப்பது, கடந்த 30 ஆண்டுகளில் பெற்ற நட்பு வட்டாரங்களையே. இன்று நான் விளையாடுவதை பார்க்கவென்றே வந்திருக்கிறார்கள். நான் வென்றாலும் தோற்றாலும் என்னை எப்போதும் நேசிக்கும் குடும்பத்தை நோக்கி என்னால் எப்பவுமே செல்ல முடிந்துள்ளது இதுதான் எனது சாதனை என்று கருதுகிறேன்.

இறுதியாக விராட் மற்றும் இந்திய அணிக்கு நன்றிகள். கோக்லியின் அன்பான வார்த்தைகளுக்கு நன்றி, அதைவிடவும் முக்கியமானது நல்ல தரமான கிரிக்கெட் ஆட்டத்தை ஆடியது. நான் ஓய்வு பெறும் தருணத்தில் கடினமான டெஸ்ட் ஆட்டத்தையே விரும்பினேன் அதனை இந்திய அணி எனக்கு அளித்ததை பெரிதாகக் கருதுகிறேன், இதைவிடவும் மதிப்பு மிக்க ஒன்றை நான் கேட்டு விட முடியாது. நீங்கள் எப்போதும் எங்களது கடினமான எதிரணியினராக இருந்திருக்கிறீர்கள், நாங்கள் உங்களை வீழ்த்துவதற்கு பெரும் எடுப்பில் திட்டமிடுவோம், சில சமயங்களில் நாங்கள் வெற்றி பெறுவோம், சில வேளைகளில் தவறுவோம், எனினும் இங்கு இந்த தருணத்தில் இருப்பதற்காக நன்றி.

கடைசியாக ஆஞ்சேலோ மற்றும் அணியினர். ஆஞ்சி உங்களிடம் அருமையான அணி உள்ளது, அருமையான எதிர்காலம் உள்ளது. பயமற்று விளையாடுங்கள். வெற்றிக்காக ஆடும்போது தோற்பதைப்பற்றி கவலைப் படாதீர்கள் என்றார். (ம)



## கண்கலங்கிய சங்கா

சர்வதேச ஆட்டங்களிலிருந்து விடைபெறும் இறுதி நாளான நேற்று சங்கா உரையாற்றிக் கொண்டிருந்த பொழுது உணர்ச்சி வசப்பட்டு கண்கலங்கினார்.

தனது உரையில் ஒவ்வொருவராக நன்றி தெரிவித்து வந்த சங்கா தனது பெற்றோர் மற்றும் மனைவி ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கையிலேயே இவ்வாறு அழுதார். சங்கா அழுததும் அவரது மனைவியும் தாயாரும் அழுததுடன் ரசிகர்களிலும் பலர் அழத் தொடங்கிவிட்டனர்.

## மஹெலவை மறந்தது ஏன்?

பிரியாவிடை நிகழ்வில் உரையாற்றும்பொழுது ஒவ்வொருவராக நன்றி தெரிவித்த சங்கா மஹெவுக்கு நன்றி தெரிவிக்கவில்லை.

சங்காவை வழியனுப்ப வந்த பிரபலங்ளில் மஹெலவும் ஒருவர். அதிலும் சங்காவின் உயிர் நண்பர் என்று வர்ணிக்கப்பட்டுவரும் இவருக்குத்தான் சங்கா முதலாவதாக நன்றி தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் மத்தியூஸ், தற்போதைய இலங்கை அணி வீரர்கள், முன்னாள் வீரர்கள், கோக்லி, இந்திய வீரர்கள் என்று அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்த சங்கா மஹெலவுக்கு நன்றி தெரிவிக்கவில்லை. ஒருவேளை தானும் மஹெலவும் ஒன்று என்று நினைத்தாரோ என்னமோ.

## இலங்கையின் பொக்கிஷம்


சங்காவை வழியனுப்பும் நிகழ்வின் விருந்தினர்களில் ஒருவராக கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரி சங்காவை இலங்கையின் பொக்கிஷம் என்று வர்ணித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் சங்காவால் இலங்கை பெருமையடைகிறது. அவர் இலங்கையின் மிகப்பெரும் சொத்து. சர்வதேச ஆட்டங்களில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி முடித்திருக்கும் சங்காவை பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கின்றேன். இந்த நியமனம் தொடர்பில் சங்கா தனது நிலைப்பாட்டை தன் குடும்பத்துடன் ஆலோசித்த பின்னர் தெரிவிக்க லாம் என்றார். ஜனாதிபதி சங்காவுக்கு தங்க துடுப்புமட்டை ஒன்றைப் பரிசளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## குவிந்த பிரபலங்கள்

சங்காவை வழியனுப்பும் நிகழ்வில் விளையாட்டுத்துறை சார்ந்த பிரபலங்கள் மட்டுமல்லாது பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில், முன்னாள் தலைவரான ரணதுங்க, இந்திய அணியின் முன்னாள் தலைவரான சுனில் கவாஸ்கர், அனுரணை வழங்கும் நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர்கள், சக வீரரும் நண்பருமான மஹெல, முரளிதரன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.



## கோக்லியின் கடிதம்

சர்வதேச ஆட்டங்களுக்கு நேற்றையதினம் விடைகொடுத்த சங்காவுக்கு இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி நெகிழ்ச்சியான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் அன்புள்ள சங்கக்காரா, அற்புதமான மனிதரான உங்களுடன் கிடைத்த அறிமுகத்தால் மிகுந்த மனமகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் கிரிக்கெட் துறையில் இருக்கும் சமக்காலத்தில் நானும் இந்த விளையாட்டில் இருப்பதை எனது பாக்கியமாக கருதுகிறேன். கிரிக்கெட் வரலாற்றில் நீங்கள் படைத்துள்ள சாதனைகளை விவரிக்க வார்த்தைகள் போதாது. நீங்கள் பல இளம் வீரர்களுக்கு உந்துகோலாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து இருக்கின்றீர்கள். கிரிக்கெட்டுக்காக நீங்கள் அளித்த பங்களிப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நீங்கள் எதிர்காலத்தில் மென்மேலும் உயர மனமார வாழ்த்துகிறேன். நீங்களும் உங்களது குடும்பமும் நலமாக வாழ இறைவனை பிரார்த்திக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.



## சங்காவுக்கு சவாலான அஸ்வின்

நடைபெற்று இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்துடன் விடைபெற்றார் சங்கா. இந்தத்தொடரில் சங்கா துடுப்பெடுத்தாடிய நான்கு இன்னிங்ஸிலும் அவரை வீழ்த்தியது அஸ்வின் மட்டுமே. பொதுவாக சுழல் பந்துவீச்சில் ஜாம்ப வானான சங்கா அஸ்வினை எதிர்த்து இலகுவாகச் சமாளிப்பார் என்ற கருத்தே தொடர் ஆரம்பமாவதுக்கு முன்னர் நிலவியது. ஆனால் இவ்வாறான கருத்துக்களை முறியடித்து நான்கு இன்னிங்ஸிலும் (இரண்டு ஆட்டத்திலும்) சங்காவை வீழ்த்தினார் அஸ்வின். ஸ்லீப்ஸ் திசையிலேயே பெரும்பாலான தடவை சங்கா ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியுடன் முடிந்தது சங்காவின் சர்வதேச ஆட்டம்

## வெற்றியைக் கொடுக்க தவறியது இலங்கை அணி



இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் மூன்று ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி 278 ஓட்டங்களால் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு பழிதீர்த்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் கோக்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க முதல் இன்னிங்ஸிற்காக இந்தியா 393. பந்துவீச்சில் இலங்கை சார்பில் ஹேரத் 4 இலக்குகளையும் சமீர, மத்தியூஸ், பிரசாத் மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

394 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலைபெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இலங்கை 306 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் இந்தியா சார்பாக மிர்ஷா 4 இலக்குகளையும் அஸ்வின், இசாந் சர்மா தலா 2 இலக்குகளையும் யாதவ், பின்னி தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

87 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்த இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 325–8 என்ற நிலையில் இருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக கௌசல், பிரசாத் இருவரும் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

413 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு களமிறங்கிய இலங்கை அணி நான்காம் நாளின் முடிவில் 72–2 என்ற நிலையில் இருந்தது. கருணாரத்ன 25 ஓட்டங்களுடனும் மத்தியூஸ் 23 ஓட்டங்களுடனும் இறுதிநாளுக்காக களமிறங்கினர். நேற்றைய முதல் பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்திலேயே பவிலியன் திரும்பினார் மத்தியூஸ். ஒருமுனை கருணாரத்னவால் பலப்படுத்தப்பட்டிருந்தாலும் மறுமுனை பலவீனமானதாகவே காணப்பட்டது. அஸ்வினின் சுழல் வித்தை காட்டிக்கொண்டிருக்க பந்தைக் கணிக்க முடியாமல் குழம்பிப்போனார்கள் இலங்கை வீரர்கள். சந்திமல் 15 ஓட்டங்களுடனும் திரிமன்னே 11 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்ப இலங்கை 106–5. இந்தியாவுக்கான வாய்ப்பு பிரகாசமாக இருந்தது. முபாரக், பிரசாத் அடுத்தடுத்து ஓட்டங்கள் எதனையும் பெறாமல் பவிலியன் திரும்ப இலங்கையின் தோல்வி உறுதியானது. நிலைத்து நின்ற கருணாரத்னவும் அஸ்வினின் பந்தில் போல்ட்டானார். முடிவில் இலங்கை 134 ஓட்டங்களில் வீழ்ந்து 278 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. பந்துவீச்சில் இந்தியா சார்பாக அஸ்வின் 5 இலக்குகளையும் மிஷ்பா 3 இலக்குகளையும் யாதேவ், இசாந் சர்மா இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ராகுல் தெரிவானார். [illegible])



269 ஆம் இலக்க கோக்லியின் சீருடையில் இந்திய வீரர்கள் கையொப்பமிட்டு சங்காவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தனர்.

### திரிமன்னேக்கும் சர்மாவுக்கும் அபராதம்

நடுவர் ஆட்டமிழப்பு என்று அறிவித்த பின்னர் களத்தை விட்டு வெளியேற தாமதப்படுத்தியதற்காகவும், முடிவை ஏற்றுக்கொள்ளாமல் அதிருப்தி தெரிவித்தபடி வெளியேறியதற்காகவும் திரிமன்னேக்கும் திரிமன்னேயை வீழ்த்திய பின்னர் அளவுக்கு அதிகமான ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தியதற்காக இசாந் சர்மாவுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி.யின் நடத்தை விதிமுறை ஒன்றை மீறியதாக தெரிவிக்கப்பட்டே இந்த இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையி லான இரண்டாவது டெஸ்ட்டின் சம்பளத்தில் இருந்து திரிமன் னேக்கு 30 சதவீதமும் சர்மாவுக்கு 60 சதவீதமும் அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





நம்ம கோக்லியா இது...


## மரண அறிவித்தல்கள்

### பிலிப்நேரி (சலேஸ்)

**(இளைப்பாறிய கணிதம் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் யாழ்/மத்திய கல்லூரி)**



செபஸ்ரியார் வீதி, குருநகரை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்நேரி (சலேஸ்) 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - வைத்தியர் கெலன் தம்பதியரின் அன்பு மகனும், மாகிறேற் அருளானந்தத்தின் அன்புச் சகோதரனும், றெஜீனா ஸ்கொலஸ் றிகாவின் அன்புக் கணவரும், வினோதினி, லோஜினி, றிச்மன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், டானியா, எயிற்றியன், மெலனி, ஆஷல், நிதர்சன், இவான், றாகவி ஆகியோரின் அன்புப் பேரனும், மனோ, ரவி, மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.08.2015) செவ்வாய்க்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு: இன்று (25.08.2015) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். மாலை 5.00 மணிக்கு எமது இல்லத்தில் இரங்கல் வழிபாடு நடைபெறும்.

தகவல் :-
சகோதரி மாகிறேட் அருளானந்தம்
குடும்பத்தினர்.

### பத்திநாதன் மக்மிலன் தேவதாசன் (அமலன்)



பிறப்பு: 15.08.1959 இறப்பு: 20.08.2015

மன்னார் நானாட்டானைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட பத்திநாதன் மக்மிலன் தேவதாசன் 20.08.2015 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்திநாதன்-லூசியா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் குணசீலி (இந்தியா) தம்பதிகளின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரி (அமுதா) அவர்களின் அன்புக்கணவரும் பற்றிமா (இலங்கை), அந்தோனி தேவசகாயம் (லண்டன்), அன்னசாந்தி(லண்டன்), மேவின் (லண்டன்), ஜெயம் ஆனந்தி (பிரான்ஸ்),ஜேம்ஸ் விமல் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செபமாலை (இலங்கை), பௌற் பாலாறோச் (லண்டன்), தேவன் (பிரான்ஸ்) கரோலின் (லண்டன்), விஜி (லண்டன்) , திரேசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுலக்சன் (லண்டன்), ஆன் சிந்துஜா , சுஜித்திரன், சுதன் ராஜ் (இலங்கை), ஜீவினாறோச், எட்வின்றோச் (லண்டன்), ஸ்ரெபனி, ஜெனிபர், டிலான்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஜெறோம், ஜெறின்(லண்டன்), மோர்கிற்றா, ஷோபியா, அபிகேல் (லண்டன்), லுசிந்தன், ரித்திக்கா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (26.08.2015) புதன்கிழமை பிரான்ஸ் நேரப்படி பி.ப 4.15 இற்கு பூதவுடல் பிரான்சில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
பற்றிமா- மன்னார்
075 664 6845

தகவல்:
குடும்பத்தினர்



**LAPTOP மலிவு விற்பனை**



HP Core 2Duo LAPTOP
(3GB RAM, 320GB HDD, 15.6")
WEBCAM

28,750/=மட்டுமே
ஒருவருட உத்தரவாதம்.

ST.ANTONY'S
187, KKS ROAD, JAFFNA TOWN
021 222 4865, 075 069 8608
(17ஆவது வருட சேவையில்)



## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை பத்தினி

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பத்தினி நேற்று (24.08.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கதிரன் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் செல்வராசா, ரேணுகா, சிவநேசன் (பிரான்ஸ்), தயாசங்கர் (லண்டன்), சந்திரமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தமலர், தர்மலிங்கம், அஜந்தா (பிரான்ஸ்), லலிதாகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ராஜதீபன், கஜதீபன், றொபின்சன், றொசாந், நிஷாந், அபிஷானி, கவிராஜ், நிதர்சனா, பிருத்திகன் (பிரான்ஸ்), அனோஜன் (பிரான்ஸ்), ஜோதிகா (பிரான்ஸ்), சாருஸ் (லண்டன்), ஜிவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சின்னப்பு, கண்ணகை, நாகம்மா, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கரத்தினம், கண்ணகை, தர்மலிங்கம், நாகநாதன், முத்துப்பிள்ளை, தங்கமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் காந்தாளம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

[illegible]
சாவகச்சேரி.

தகவல் :- குடும்பத்தினர்.
077 335 3342


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org